ஆனந்த விகடன்

# பொக்கிஷம்



# மணிமொழி, நீ என்னை மறந்துவிடு!



தமிழ்வாணன்

## ஓடி வந்தாள் ஒரு பெண்!

*மது, மங்கை, மாமிசம் மூன்றையும் துறந்த மாமுனிவர் போல் வாழ்ந்து வரும் மருதநம்பியிடம் ஒரு கொடிய பழக்கம் இருந்தது. அது வேண்டாம், அவரிடமுள்ள அந்தக் கொடிய பழக்கத்தை நாம் இப்போதே தெரிந்துகொள்வது நமக்கு நல்லதல்ல!*

*இந்தக் கொடிய பழக்கத்திலிருந்து தப்ப முடியாது என்பதை அறிந்த நம்பி, நம்பிக்கை இல்லாமலேயே, தப்ப வழியில்லாமலேயே வாழ்ந்து கொண்டிருந்தார்.*

*மனக் கவலைகளையெல்லாம் மதிமுகம் ஒன்றைக் கண்டு மறந்திருந்தார் நம்பி. அது மணிமொழியின் முகம். மணிமொழி, நம்பியின் மகள்.*

*இந்த நிலவு நல்லாளை நினைத்து நினைத்துத் தன் துன்பங்களை யெல்லாம் மறந்து மகிழ்ந்து நின்றார் நம்பி.*

*அப்பாவையும் மகளையும் தவிர வேறு எவருமே இல்லை, அவர்கள் குடும்பத்தில்.*

*"மணிமொழி!" என்று அழைத்தார் அப்பா, மகளை.*

*"என்ன அப்பா?" என்று சிட்டு போலச் சிரித்து ஓடி வந்து நின்றாள் அந்த பட்டுமேனி நிறத்தாள்.*

*அவள் ஓடிவந்தபோது, அவளோடு ஒளி ஓடி வந்தது; அழகு ஆடி வந்தது; சுறுசுறுப்பு சுற்றி வந்தது.*

*கவலைக் கறை படியாத கரு விழிகளைத் திறந்து, "என்ன அப்பா?" என்று மீண்டும் கேட்டாள் அவள்.*

*நம்பி எதையோ சொல்ல வாயைத் திறந்தார். ஆனால் சொற்கள் வராததால் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.*

*மணிமொழி, தந்தையின் முகத்தைத் தன் பக்கம் திரும்பி, "என்ன அப்பா?" என்றாள் மூன்றாவது முறையாக.*

*'மணிமொழி, என்ன பெண் அம்மா, நீ! உன்னை உன் அப்பா கூப்பிட்டுவிட்டுத் தன் மனத்தில் உள்ளதைச் சொல்ல மனம் தடுமாறி முகத்தைத் திருப்பிக் கொள்வது இதுதானா முதல் தடவை! உடலால் வளர்ந்த நீ, உள்ளத்தால் இன்னும் வளரவில்லையே! பெண்ணை ஏமாற்ற முடியுமா என்பார்கள். சாவின் கரை ஓரத்திலே நிற்கும் உன் அப்பா உன்னை ஏமாற்றப் போகிறாரடி!'*

*"அப்பா, சொல்லு அப்பா, என்னை ஏன் கூப்பிட்டாய்?" என்று கேட்டாள் மணிமொழி.*

*“சும்மாத்தானம்மா கூப்பிட்டேன். நீ படித்துக் கொண்டிருந்தாயோ... கெடுத்து விட்டேனா?” என்று கேட்டார் நம்பி.*

*“இல்லை அப்பா, இப்படி அடிக்கடி நீங்கள் என்னைக் கூப்பிட்டு எதையோ சொல்ல வருவதும், முகத்தைத் திருப்பிக் கொள்வதும் அப்புறம் ‘சும்மாத்தானம்மா கூப்பிட்டேன்’ என்று சொல்வதும் எனக்குப் புது அனுபவமா என்ன? அடிக்கடி நடப்பதுதானே இது?” என்று சொல்லிவிட்டு மணிமொழி எழுந்தாள்.*

*“கல்யாணமாகாத பெண்... நீ என்ன நினைத்துக்கொள்வாயோ?”*

*“கல்யாணமாகாத பெண்ணுக்கு ஒரு நினைப்புத்தான். கல்யாணமான பெண்களுக்குத்தானப்பா பல நினைவுகள்!” என்று கூறிய மணி மொழி ஓடி வந்து இருட்டில் நின்று கொண்டு அழுதாள்!*



*அப்பா எத்தனை தடவை தன்னைக் கூப்பிட்டாலும், எழுந்து ஓடுவாள் மணிமொழி. ஒரு முறை கூட எழுந்து ஓட அவள் அலுத்துக் கொண்டதே கிடையாது. இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு, ‘போ அப்பா, உனக்கு வேறு வேலையே இல்லை. நான் வர மாட்டேன்’ என்று ஒரு முறைகூடச் சொன்னதில்லை. ஏனென்றால் தந்தை, தன்னிடம் எதையோ சொல்லப் பல நாட்களாக முயன்று கொண்டிருக்கிறார் என்பதும், தன்னைக் கண்டதும் தம் மனத்தில் உள்ளதைச் சொல்ல முடியாமல் தவிக்கிறார் என்பதும் மணிமொழி என்றோ தெரிந்து கொண்டுவிட்ட ஓர் உண்மை! அவருக்குச் சொல்ல மனம் வராத, அவர் சொல்ல மனம் தடுமாறுகிற அந்தப் பயங்கரம் என்ன என்பதை அறிந்துகொண்டே விட வேண்டும் என்ற ஆசை காரணமாகத்தான் அவர் கூப்பிட்ட நேரமெல்லாம் அயராமல் ஓடிக் கொண்டிருக்கிறாள் அவள்!*

*மணிமொழியால், “என்னப்பா அது? சொல்லப் போகிறீர்களா, இல்லையா? சொல்லுங்கள்” என்று, மனம் தடுமாறிநிற்கும் தந்தையிடம் கேட்டுவிடமுடியும்.*

*ஆனால், அடக்கம் மணிமொழியின் வாயைப் பொத்தி வைத்திருந்தது. அதைக் கேட்டால் இன்னும் அவர் துன்பம் பெருகுமோ என்று அஞ்சி, கொஞ்சியே வாழ்ந்துவந்தாள் கோழை மணிமொழி.*

*மணிமொழியோடு கூட எவருமே பிறக்கவில்லை. அவள் பிறந்தாள்; இறந்தாள் அவள் அன்னை, உடனே! அன்னையை இழந்த துன்பம் இன்னும் அறியாமலேயே வளர்க்கப்படுகிறாள் அவள்.*

*தனது திருமணம் பற்றிய ஏற்பாடுகளை எண்ணிக்கூடப் பார்க்காமல் இருக்கிறாரே தன் அப்பா என்று அவள் என்றுமே எண்ணியது கிடையாது.*

*கன்னிப்பருவ எழில் கொழிக்கும் அழகு குலுங்க, வீடெல்லாம் அவள் ஆடி வந்தாள்; ஓடி வந்தாள்; அந்த வீடு முழுவதும் அவள் செல்ல ஆட்சி தான்!*

*தமிழகத்தைச் சேர்ந்த தந்தையும் மகளும் பம்பாயைச் சேர்ந்த மாதுங்காவுக்கு வந்து ஆறு ஆண்டுகள் ஆகி விட்டன.*

*மணிமொழி, அன்றும் இன்றும் தந்தையிடம் எதையும் மனம் விட்டுக் கேட்காமல், என்ன வருமானம் அப்பாவுக்கு என்று கூட அறிந்துகொள்ளாமல் வாழ்ந்து வந்தாள். அறிய ஆசைப்பட்டாலும் புரிந்துகொள்ள முடியாது அவளால்! ஆர்வம் இருக்கலாம், ஆசை இருக்கலாம்; ஆனால் அறிந்து கொள்ளத் துணிவு வேண்டாமா?*

*நம்பி வெளியே போவார். அடிக்கடி போவார். அவரை அழைத்துச் செல்ல அடிக்கடி கார்கள் வரும். விலை உயர்ந்த கார்களே வரும். பெரும்பாலான நாட்களில், நடு இரவில்தான் வீடு திரும்புவார்.*

*கார்கள் வந்து நம்பியை அழைத்துச் செல்லாத நேரங்களில், ஒருவன் வரு வான். அவன் நன்றாகச் சுற்றிக் கட்டப்பட்ட ஒரு பெட்டியை நம்பியிடம் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போவான். நம்பி உடனே வாடகைக் கார் ஒன்றை எடுத்துக்கொண்டு போய் அந்தப் பெட்டியை, பெட்டியிலுள்ள முகவரியில் சேர்த்துவிட்டு வருவார்.*

*தன் மேல் கொண்டிருக்கிற அன்பால்தான், இளையாள் என்ற பெயரில் சிற்றன்னை ஒருத்தியை அப்பா இங்கே கொண்டு வந்து நிறுத்தவில்லை என்பது மணிமொழிக்குத் தெரியும். அதனால்தான் எதைப் பற்றியும் அப்பாவிடம் கேட்காமல் வளர்ந்து வந்தாள் அவள்.*

## எவரோ கதவைத் தட்டினார்கள்!

ஒரு நாள், நடுப்பகல்... நாயும் படுக்கும் நேரம். தாங்க முடியாத இந்த வெயில் நேரத்தில், தாங்கமுடியாத குளிரால் நடுங்கிக்கொண்டு கிடந்தார் நம்பி. மயக்கம் அவருக்கு அடிக்கடி வந்தது.



மருதநம்பிப் பெரியவரே, நீங்கள் மடியப் போகிறீர்கள்! மணிமொழிக்கு ஏதாவது செய்துவிட்டுப் போங்களய்யா சாவதற்கு முன்னாலே! எக்குறையுமின்றி வாழ, மணிமொழிக்கு என்ன செய்கிறீர்கள், ஏது செய்திருக்கிறீர்கள்?

நனைந்த கண்ணிதழ்களுடன் மணிமொழி வந்து நின்றாள்.

"மருத்துவரை அழைத்து வரட்டுமா அப்பா?" என்று குனிந்து, செவியருகில் கேட்டாள் மணிமொழி.

நம்பி நிமிர்ந்து, "மகளே, அழுதாயா என்ன? வயதாகி விட்ட காரணத்தால், வந்து கொண்டிருக்கிறது காய்ச்சல் எனக்கு. விவரம் தெரிந்த பெண் நீ. அழலாமா?" என்று கேட்டுவிட்டு, முகத்தைத் திருப்பிக் கொண்டு அழுதார்.

அப்பா அழுவதைக் கண்ட மணிமொழி துக்கம் தாங்காமல் அடுத்த அறைக்குள் ஓடிப்போய் நுழைந்து, கதவைச் சாத்திக் கொண்டு ஓவென்று வாய் விட்டு அழுதாள். இந்த நேரம் பார்த்து எவரோ கதவைத் தட்டினார்கள்.

நம்பி, போர்வையுடன் தம் உடலையும் சேர்த்துச் சுருட்டிக் கொண்டு, கட்டிலிலிருந்து முனகிக்கொண்டு எழுந்தார்.

முகத்தைத் துடைத்துக்கொண்டு, சேலையைச் சரிப்படுத்திக்கொண்டு, கதவைத் திறந்துகொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள் மணிமொழி.

வந்தவள், அப்பாவைக் கட்டிக் கொண்டு, "ஏனப்பா, கதவை நான் திறக்க மாட்டேனா? வந்தவர் யார், அவருக்கு என்ன வேண்டும் என்பதைக் கேட்க மாட்டேனா? அப்பாவுக்கு உடல் நலம் குன்றியிருக்கிறது, அப்புறம் வாருங்கள் என்று சொல்லி, நான் அவர்களை அனுப்பி வைக்க மாட்டேனா?" என்று பல கேள்விகளைக் கேட்டாள்.

"அப்படி எழுந்திருக்க முடியாத அளவுக்கு என்னம்மா வந்துவிட்டது எனக்கு? காய்ச்சல்தானே? அதனாலென்ன?" என்று தன் பெண்ணைப் பிடித்துக் கொஞ்சம்

*தள்ளிவிட்டுத் தானே போய்க் கதவைத் திறந்தார் நம்பி. திறந்ததும் மணிமொழி மருண்டு நின்றாள். தன் வாழ்வில் தன்னை அப்பா கொஞ்சம் பிடித்துத் தள்ளியது, அவளுக்கு இதுதான் முதல் தடவை! கன்னியவள் கலங்கி நின்றாள்.*

*நம்பிக்குத் தெரியும்... கதவைத் தட்டியது யார் என்பதும், கதவைத் தட்டியவன் என்ன கொண்டு வந்திருப்பான் என்பதும்!*

*கதவைத் திறந்ததும் ஒருவன்! அவன் கரத்திலே ஒரு பெட்டி! அவன் அந்தப் பெட்டியைச் சட்டென்று நம்பியிடம் கொடுத்தான். நம்பி அதை வாங்கிக்கொண்டதும் படீரென்று கதவைச் சாத்திக்கொண்டார். கதவைச் சாத்தியதும் கையிலிருந்த பெட்டியோடு கிடுகிடுவென்று ஆடினார் நம்பி. அவன் கண்கள் தேடின, மணிமொழியை.*

*மணிமொழிக்கு மனத் துன்பம் வந்தால், அவளுக்கென்று ஒரு சன்னல் இருக்கிறது. அந்தச் சன்னல் விளிம்பில் தாவி ஏறி உட்கார்ந்து முழங்கால்களைக் கட்டிக்கொண்டு, தெருவில் போகிறவர்களையும் வருகிறவர்களையும் பார்த்துக் கொண்டிருப்பாள். இப்பொழுது அவள் அந்தச் சன்னல் விளிம்பில் ஏறி உட்கார்ந்து கொண்டிருந்தாள். மணிமொழியைக் கண்ட நம்பி, மனத்துன்பம் தாங்காமல், மௌனமாக அழுதுகொண்டே கையில் இருந்த பெட்டியுடன் கட்டிலில் வந்து படுத்துக் கொண்டார். படுத்துக் கொண்டதும் இருமத் தொடங்கினார்.*

*இருமல் ஓசை கேட்டதும் ஓடி வந்தாள் மணிமொழி. அப்பாவின் கரத்தைப் பிடித்துக்கொண்டு, "காய்ச்சல் கடுமையாக இருந்தும் கொஞ்சம்கூட அதைப் பொருட்படுத்த மாட்டேன் என்கிறீர்கள்! நான் சொன்னால் நீங்கள் கேட்க மாட்டீர்கள். இந்தக் காய்ச்சலோடு இப்பொழுது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் தெரியுமா? இதோ உங்கள் கையில் இருக்கிறதே பெட்டி, இந்தப் பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பப் போகிறீர்கள், இல்லையா?" என்று கேட்டாள்.*

*கண்களை மூடிக் கொண்டார் நம்பி.*

*மணிமொழி, தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, "அப்பா, அந்தப் பெட்டியை இப்படிக் கொடுங்கள். அந்தப் பெட்டியை இந்த பம்பாயில் எவரிடம் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமோ, அவரிடம் கொண்டு போய்க் கவனத்துடன் சேர்த்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கையை நீட்டினாள்.*



*நம்பி தன் கண்களைத் திறந்து சட்டென்று மணிமொழியின் மலர்க் கரத்தைப் பிடித்துத் தன் நெஞ்சில் வைத்துக்கொண்டு, சிறுபிள்ளை போல் அழுதார்.*

கையை விடுவித்துக்கொண்டு அந்த அறையை விட்டே ஓடிவிட வேண்டும் என்று நினைத்தாள் மணிமொழி. அவளுடைய அந்தச் சிந்தனை செயலாவதற்கு முன் நம்பி பேசினார்: "மகளே, மனம் பொறு அம்மா! இதுவரை நான் தாங்கி வந்த மனச்சுமையை இன்று என்னால் தாங்க முடியாது. இந்தப் பெட்டியை எவரிடம் சேர்க்க வேண்டுமோ, அவரிடம் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன் என்று என்மேல் உனக்கிருக்கும் அன்பால் கூறிவிட்டாய். மணமாக வேண்டியவள் நீ! உன்னை நான் பழகும் இடங்களுக்கு நானே அனுப்பினால் உன்னை நானே கொன்றவனாவேன்!"

"அப்பா, நீங்கள் உளறுகிறீர்கள்! உங்களுக்குக் காய்ச்சல் மிகுந்து விட்டது!" என்று சொல்லி அழுதாள் மணிமொழி.

மருதநம்பி, தனக்கு வரும் தாங்கமுடியாத துன்பத்தை மறைக்கப் பெட்டியைப் பக்கத்திலே வைத்துவிட்டுப் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டார்.

கொஞ்ச நேரமாயிற்று.

மணிமொழி கண்களைத் துடைத்துக்கொண்டு, அந்தப் பெட்டியை எடுத்து அதன் மேல் இருந்த முகவரியைப் படித்தாள்: எஸ்.பன்னாலால், பிளாட் 3, அப்டுடேட் பில்டிங்ஸ், அந்தேரி.

மணிமொழி நனைந்த தன் கண்களை நன்றாகத் துடைத்துக் கொண்டு, அந்தப் பெட்டியுடன் ஓசை சிறிதும் இல்லாமல் அந்த இடத்தை விட்டு வெளியேறினாள்!

# மணிமொழியின் மனக் கதவுகள்

உடல் நலம் குன்றியிருந்த நம்பி, அன்று வீட்டில் இல்லை. அவர் மேசையில் ஒரு துண்டுக் கடிதம் இருந்தது. அந்தக் கடிதத்தில்...

'மகளே, நான் வெளியே போக வேண்டும் என்று சொன்னால், நீ என்னை அனுப்பமாட்டாய். என்னைப் பற்றி உனக்கு ஏதும் தெரியாது. மகளே, என் மனம் மருண்டு கிடப்பதை நீ அறிவாய். மனம் மாறுகிறதா என்று பார்க்க நாம் இன்றைக்குச் சினிமாவுக்குப் போகலாமே! 'மெட்ரோ'வில் ஒரு நல்ல படம் நடக்கிறது. போகலாம், முன்னேற்பாடுடன் இரு. நான் வருகிறேன். நீ இந்த நேரத்தில் தலைவாரிப் பூச்சூட்டிப் புதுச்சேலை உடுத்தி நிற்க சம்மதிக்க மாட்டாய். இருந்தாலும், இந்தக் கிழவனுக்காக நீ தலைவாரிப் பூ முடித்துப் புதுச் சேலை கட்டி நில்லம்மா, நான் வருகிறேன்.



உன் அப்பா.'

கடிதத்தைப் படித்த மணிமொழி கண்களை மூடிக்கொண்டாள். மூடிய கண்களையும் முட்டிக்கொண்டு கண்ணீர் கொட்டியது.

மணிமொழி, கடிதத்தைக் காப்புக்குள் செருகிக் கொண்டு, சன்னலுக்கு அருகில் வந்து, அதன் விளிம்பில் தாவி ஏறி உட்கார்ந்து முழங்கால்களைக் கட்டிக்கொண்டு தெருவில் போகிறவர்களையும் வருகிறவர்களையும் பார்த்துக் கொண்டிருந்தாள். மணிமொழியின் கண்கள் தெருவைக் கண்டாலும், மனம் அப்பாவின் எதிர்காலத்தையே எண்ணி நின்றது. 'அப்பாவுக்கு வெறி பிடித்துவிடுமோ?' என்று அவள் எண்ணியபோது மணிமொழி, மடிக்குள் முகத்தைப் புதைத்துக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

மணிமொழி! உன்னோடு ஒருவரும் பிறக்கவில்லையே, உனக்கு ஆறுதல் சொல்ல? நீ மற்றவரோடு மனம் விட்டாவது பழகியிருக்கிறாயா, உன் துன்பத்தை எவரிடமாவது எடுத்துச் சொல்ல? எவரோடும் நெருங்கிப் பழகாமல் 'அப்பா அப்பா' என்று அப்பா கால்களையே சுற்றி வந்தாய்! இப்போது யாரம்மா வந்து உனக்கு ஆறுதல் சொல்லப் போகிறார்கள்?

மனம் கொஞ்சம் அமைதியுற்றிருந்தபோது மணிமொழி நிமிர்ந்து பார்த்தாள், வெளியே வெளிச்சம் குறைந்து இருள் பரவிக்கொண்டிருந்தது. பரபரவென எழுந்தாள். முகத்தைக் கழுவினாள். சிகையைச் சிக் கெடுத்தாள். வாரி அள்ளிச் செருகி வண்ண மலர் சூடினாள்.

உடலை இறுக்கும் இரவிக்கை அணிந்து, காஞ்சிபுரம் பட்டுச் சேலையைக் கட்டிக்கொண்டாள்.

மணி ஆறு. நம்பி இன்னும் வரவில்லையே!

மறுகிக்கொண்டு நிற்கும் மணிமொழியின் செவிகளிலே, கார் ஒன்று வந்து நிற்கும் ஓசை கேட்டது. ஓடினாள்; எட்டிப் பார்த்தாள்.



மேலே மஞ்சள் வண்ணமும் கீழே கறுப்பு வண்ணமும் பூசப்பட்ட வாடகைக் கார் ஒன்றில் நம்பி வந்து இறங்கினார். காரை விட்டுக் கீழே இறங்கியதும், நிற்க முடியாமல் தடுமாறினார். காரோட்டி தாங்கிக் கொண்டான்.

மணிமொழி, "அப்பா!" என்று கத்திக்கொண்டே அத்தனை படிகளையும் தாண்டி ஓடி வந்து, அப்பாவைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள். அவரை அப்படியே அழைத்து வந்து சாய்வு நாற்காலியில் படுக்க வைத்தாள்.

நம்பி, முகத்திலிருந்த வேர்வையைத் துடைத்துக் கொண்டு, "மணிமொழி, காரோட்டியிடம் கேட்டு, அவனுக்கு எவ்வளவு பணமோ அதைக் கொடுத்து அனுப்பி விடு. காரில் சிறு பெட்டிகள் ஐந்து இருக்கும். அவற்றை எண்ணி வாங்கிவை" என்றார்.

மணிமொழி, காரோட்டிக்குக் கொடுக்க வேண்டிய காசைக் கொடுத்து அனுப்பி வைத்தாள்.

நம்பி, மகளை அருகில் வரச்சொல்லிச் சாடை காட்டினார். வந்தாள்.

"எனது இந்தக் கோட்டைக் கழற்றிவிட்டுக் கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொண்டு வா அம்மா!"

மணிமொழி, குவளையில் தண்ணீர் கொண்டு வந்தாள்: "அப்பா, என்னப்பா உங்களுக்கு?"

"எனக்கே தெரியவில்லையம்மா! மயக்கம் வந்துவிட்டது. வாடகைக் காரில் வரும்போது, மறுபடியும் எனக்குக் காரிலேயே நினைவு வந்துவிட்டது. உடனே காரை நம் டாக்டர் வீட்டிற்கு விடச் சொன்னேன். டாக்டர் என்னைச் சோதித்து விட்டு, 'உங்கள் உடல்நிலை மிகவும் மோசமாயிருக்கிறது. போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லி மருந்து தந்தார். அது கோட்டுப் பையிலேயே இருக்கிறது" என்றார் நம்பி.

மணிமொழி, கோட்டுப் பையில் இருந்த மருந்துப் புட்டியை எடுத்து அப்பாவுக்கு ஒரு வேளை மருந்தைக் கொடுத்துவிட்டுப் போர்வையை எடுத்து அவர் உடல் முழுவதும் போர்த்திவிட்டாள்.

*"மணிமொழி, சினிமாவுக்கு அழைத்துச் செல்கிறேன் என்று உன்னை நான் ஏமாற்றி விட்டேன்" என்றார் நம்பி.*

*"அதெல்லாம் இல்லையப்பா" என்றாள் மணிமொழி. அப்பா ஏதாவது சொல்லுவார் என்று எதிர்பார்த்து நின்றிருந்தாள். அவர் ஏதும் பேசவில்லை. அதனால் மணிமொழியே சொன்னாள்... "அப்பா! நான் உங்களுக்குக் குழந்தை. ஆனால், உலகத்திற்குப் **17** வயதுப் பெண்! உங்களுக்கு மகன் இல்லாததால் மகன் தந்தைக்காற்றும் உதவியை நான் செய்ய வேண்டும். கேளுங்களப்பா! நீங்கள் கொண்டு வந்திருக்கும் ஐந்து பெட்டிகளையும் அந்தந்த முகவரியில் நான் சேர்த்துவிட்டு வருகிறேனப்பா."*

*"மணிமொழி! மகளே!" என்று நிமிர்ந்து உட்கார்ந்து கத்தினார் நம்பி.*

*"அப்பா, மூன்று தினங்களுக்கு முன்பு ஒரு பெட்டியைச் சேர்க்கவேண்டிய இடத்தில் நான் சேர்த்துவிட்டு வரவில்லையா?"*

*"மகளே, ஒரு நேரத்தைப் போல் ஒரு நேரம் இருக்காது!"*

*"இது எனக்குக் காலம் கடந்த பாடம் அப்பா!"*

*"உண்மைதான் மகளே! சரி... செய், அந்தப் பெட்டியின் மேல் எவர் பெயர் இருக்கிறதோ அவரிடம்தான் பெட்டியைக் கொடுக்க வேண்டும். அவர் பெட்டியை வாங்கிக்கொள்ளும்போது, 'இந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது?' என்று கேட்பார். தயங்காமல் 'பிள்ளைகளுக்கான புதிய உடை இருக்கிறது' என்று சொல்!" - சொல்லிவிட்டுப் போர்வையால் முகத்தை மூடிக்கொண்டார் நம்பி. அவர் உடல் குலுங்கியது. அழுகிறாரா?*

*மணிமொழி, கொஞ்ச நேரத்தில் அந்த ஐந்து பெட்டிகளுடன் மாடியை விட்டுக் கீழே இறங்கி, வாடகைக்கார்கள் நிற்குமிடத்திற்குப் போய், ஒரு காரில் ஏறிக் கொண்டாள்.*

*"மாதுங்காவுக்குப் போ!"*

*மாதுங்காவில், மணிமொழி சொன்ன வீட்டிற்கு முன்னால் கார் போய் நின்றது. அவள் இறங்கினாள் ஒரு பெட்டியுடன்.*

*அது தனி வீடு. வீட்டின் கதவு திறந்தே கிடந்தது. உள்ளே போய், "ஐயா" என்று அழைத்தாள்.*

*உள்ளே இருந்து ஒருவர் வந்தார். அவருக்கு ஐம்பது வயது இருக்கும்.*

*"உங்கள் பெயர் என்ன?"*

*"சாந்திலால்."*

*"இந்தாருங்கள்" என்று பெட்டியை அவரிடம் நீட்டினாள் மணிமொழி.*

அவர் பெட்டியை வாங்கிக் கொண்டே, “இந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது?” என்று கேட்டார். மணிமொழி தயங்காமல், “பிள்ளைகளுக்கான புதிய உடை இருக்கிறது” என்றாள்.

“நன்றி” என்று சொல்லிவிட்டுப் பெட்டியை வாங்கிக்கொண்டு விர்ரென்று உள்ளே சென்றுவிட்டார் அவர்!

கொஞ்ச நேரம் அங்கேயே நின்றுகொண்டிருந்த மணிமொழி, வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டாள்.

இரண்டாவது இடம் விக்டோரியா டெர்மினசுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய சந்தில் இருந்தது. அந்தச் சந்திற்குள் வாடகைக் கார் சென்ற போது மணிமொழிக்கே கொஞ்சம் அச்சமாக இருந்தது. விளக்குகள் இருந்தும், அந்தச் சந்தில் வெளிச்சமே இல்லை. இருள் மண்டிக் கிடந்த அந்தச் சந்திற்குள் மணி மொழி 7-ம் எண்ணுள்ள வீட்டைக் கண்டுபிடித்தாள்.

அந்த வீட்டின் கதவிலேயே, ‘ராம்சந்த்’ என்னும் பெயர் எழுதப் பட்டிருந்தது.

மணிமொழி கதவைத் தட்டியதும் கதவைத் திறந்துகொண்டு, முப்பது வயது மனிதன் ஒருவன் வந்து நின்றான்.

“உங்கள் பெயர்தான் ராம் சந்தா?”

“ஆமாம்.”

“உங்களுக்கு ஒரு பெட்டி கொண்டு வந்திருக்கிறேன்.”

“பெட்டியா? என்ன பெட்டி? எனக்கெதற்குப் பெட்டி? சரி, அந்தப் பெட்டியைக் கொடுங்கள், பார்க்கலாம்.”

மணிமொழி, பெட்டியை அவனிடம் கொடுத்தாள். அவன் அதை வாங்கி ஒருதரம் புரட்டிப் பார்த்து விட்டு, “இந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது?” என்று கேட்டான்.

மணிமொழி, “பிள்ளைகளுக்கான புதிய உடை இருக்கிறது” என்றாள்.

“நன்றி” என்று சொல்லிக்கொண்டே கதவைச் சாத்திவிட்டான் அவன். கொஞ்சம் திடுக்கிட்ட மணிமொழி சமாளித்துக்கொண்டு காரில் வந்து ஏறிக்கொண்டாள். அப்போது...

மாடிச் சன்னலிலிருந்து ராம்சந்த் மணிமொழியை உற்றுப் பார்த்தான். மணிமொழி அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே காரோட்டியிடம், “மரீன் டிரைவுக்குப் போ” என்றாள்.

மூன்றாவது இடத்தில், 40 வயது கொண்ட ஒரு பெண்ணைக் கண்டாள் மணிமொழி. அந்தப் பெண் உயர்ந்த உடையையும் நல்ல நகைகளையும் அணிந்து

கொண்டிருந்தாள். அவள் பாதங்களிலே பட்டு நடையன்கள். அவள் இருப்பிடம் சிறியதாக இருந்தாலும், சன்னல்களுக்குத் திரைகள் கட்டி, வண்ண விளக்குகள் போட்டு, வட்ட மேசை, வானொலிப் பெட்டி, வண்ணப் பூந்தொட்டிகள் வைத்து அழகுபடுத்தி யிருந்தாள்.

அவள் மணிமொழியிடம் வந்து, "யார் நீ?" என்று கேட்டாள்.

"பிரபாவதி தேவி என்பது நீங்கள்தானே?" என்று கேட்டாள் மணிமொழி. 'நீ யார்' என்ற கேள்விக்குத் தான் யார் என்பதை மணிமொழி சொல்லவில்லை.

"ஆமாம், நான்தான் பிரபாவதி" என்றாள் அவள்.

"இந்தாருங்கள் பெட்டி!" என்று தன் கையிலிருந்த பெட்டியை அவளிடம் கொடுத்தாள் மணிமொழி.

"பிள்ளைகளுக்குரிய புதிய உடைகள்தாமே இதில் இருக்கின்றன?" என்று கேட்டுக் கொண்டே மணிமொழியின் கரத்திலிருந்த பெட்டியை எடுத்துக் கொண்டாள் அவள்.

"நான் வருகிறேன்" என்று மணிமொழி திரும்பினாள்.

"நில்" என்று மணிமொழியின் தோளைப் பற்றினாள் அவள்.

"நம்பிக்கு நீங்கள் என்ன வேண்டும்?"

"அவர் என் அப்பா!" - சொல்லி விட்டு, மணிமொழி வந்து காரில் ஏறி உட்கார்ந்து, கதவைச் சாத்திக் கொண்டாள். பிரபாவதி தேவி மணிமொழியையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

கார் புறப்பட்டது. தாஜ்மகால் ஓட்டலைத் தாண்டியது. இது நான்காவது இடம். அந்த இடம்...

ஓர் அலுவலகமாக இருந்தது. அங்கே பல 'ஃபைல்'களும் நிறைய அட்டைப் பெட்டிகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. உள்ளே ஓர் அறையில் மட்டுமே விளக்கு வெளிச்சம் இருந்தது.

ஆடும் கதவுகளைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றாள் மணிமொழி.

அந்த அறையில், பெரிய மேசைக்குப் பின்னால், சுழல் நாற்காலியில் இளம் வயதுள்ள ஒரு மனிதன் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தான். அவன் காலடி ஓசையைக் கேட்டு, எழுதுவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

மணிமொழியைக் கண்டதும் எழுந்து நின்று, "வாருங்கள், உட்காருங்கள்" என்றான். மணிமொழி அவனை ஒருமுறை உற்றுப் பார்த்துவிட்டு, "மன்னிக்கவும். உட்கார நேரமில்லை. இந்தாருங்கள்" என்று கையிலிருந்த பெட்டியை அவனிடம் கொடுத்தாள்.

“வழக்கமாக வருகிறவர் நம்பி தானே? நம் குழுவில் உங்களைப் போன்ற அழகான பெண்ணொருத்தி சேர்ந்திருப்பதை நான் அறியாதிருக்கிறேனே!”

இதற்கு ஏதும் மறுமொழி சொல்லாத மணிமொழி, அவன் மேசை மீதிருந்த பெயர்ப் பலகையைப் பார்த்தாள். ‘சொல்லழகன்’ என்றிருந்தது.

மணிமொழி அவனை நிமிர்ந்து நோக்கிவிட்டுத் திரும்பிச் சென்று வாடகைக் காரில் ஏறிக் கொண் டாள்.

கதவுகள், மணிமொழி தள்ளி விட்டு வந்த வேகத்தில் இன்னும் ஆடிக்கொண்டிருந்தன, மணிமொழியின் மனக்கதவுகள் ஆடிக் கொண்டிருப்பதைப் போல!

ஐந்தாவது இடம் - கடைசி இடம் - மலபார் ஹில்ஸ். கரத்தில் இருக்கும் ஒரே பெட்டியை மலபார் ஹில்ஸிலிருக்கும் ஒரு மாளிகையில் சேர்க்க வேண்டும்.

குறிப்பிட்ட அந்த மாளிகைக்கு முன் வாடகைக் கார் வந்து நின்றது. மணிமொழி, பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு காரை விட்டுக் கீழே இறங்கிப் பங்களாவிற்குள் நுழைந்தாள்.

முதல் கதவு மூடிக் கிடந்தது.

வெளியே இருந்த மின்சார மணியின் விசையை அமுக்கினாள். உள்ளே மணி ஒலிக்கும் ஓசை கேட்டது. ஆனால், எவரும் வரவில்லை. மணிமொழி சுற்றிலும் ஒருமுறை பார்த்தாள். எங்கும் இருள் தன் திரையை விரித்திருந்தது. மணி மொழி மலபார் ஹில்ஸுக்கு இப்போதுதான் முதல் தடவையாக வருகிறாள். சுற்றிலுமிருந்த ஓசை இல்லாத ஒரு நிலை அவளை அச்சுறுத்தியது.

மீண்டும் மணியின் விசையை அமுக்கினாள். உள்ளே மணி ஒலிக்கும் ஓசை கேட்டது. ஆனால் எவரும் வரவில்லை.

மணிமொழி திரும்பிப் போய் விடலாமா என்று பார்த்தாள். ஆனால், உள்ளே வெளிச்சம் தெரிகிறதே! மின்சார ஒளி வீசிக் கொண்டிருக்கும் ஒரு வீட்டிற்குள் மனிதர்கள் இல்லை என்பதை மணிமொழியால் நம்பமுடியவில்லை. பளிச்சென்று கதவைத் தள்ளினாள். கதவு திறந்துகொண்டது!

மணிமொழி உள்ளே சென்றாள். மாளிகையின் நடுக் கூடத்தில் மின்சார விளக்குகள் அனைத்தும் ஒளியிட்டுக் கொண்டிருந்தன. அந்த வெளிச்சத்தில்...

விலையுயர்ந்த சோபாக்கள், கீழே விரிக்கப்பட்டிருந்த காசுமீர் கம்பளம், சன்னல்களுக்குத் திரையிடப்பட்டிருந்த மெல்லிய பட்டுத் துணி, ஓரத்தில் ஒரு நீண்ட மேசையில், மணிப்புரி நடனமாடும் ஒரு பெண்ணின் பெரிய சிலை!

கூடத்தில் மனிதர்களே இல்லை. மணிமொழியின் முகத்தில் வேர்வைத் துளிகள் முத்தாக அரும்பி நின்றன. நிமிர்ந்து, எதிரேயிருந்த அறையைப் பார்த்தாள். உள்ளே விளக்கு வெளிச்சம் இருந்தது. கதவுகளுக்குப் பதிலாகத் திரை

தொங்கியதால், அறைக்குள் எவராவது இருக்கிறார்களா இல்லையா என்பது தெரியவில்லை.

மணிமொழி மெல்ல, அந்தத் திரைக்கு அருகில் சென்றாள். திரையை மெல்ல விலக்கிப் பார்த்தாள். உள்ளே...

தரையில் ஒரு மனிதர் மல்லாந்து கிடந்தார். அவர் நெற்றியில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து, செத்துக் கிடந்தார்!

மணிமொழி, தன் காலில் நடையன்கள் இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டு, விழுந்து கிடந்த அந்த மனிதருக்கு அருகில் சென்றாள். அவரைப் பார்த்தாள்.

அவர் கோட்டும் கால்சட்டையும் அணிந்திருந்தார். அவருக்கு **35** வயது இருக்கும்.

மணிமொழி வெளியே ஓடி வந்து, காரில் ஏறிக்கொண்டு, ''வீட்டிற்குப் போ'' என்றாள்.

காரோட்டி திரும்பி, ''வீடு எங்கே அம்மா?'' என்று கேட்டான். அப்போது மணிமொழியின் கையில் இருந்த அந்தப் பெட்டியை அவன் பார்த்தான்.

மணிமொழி, பெட்டியை மடியில் வைத்துச் சேலைத் தலைப்பால் மூடிக்கொண்டு, ''நாம் புறப்பட்ட இடத்திற்குப் போ'' என்றாள்.

''சரி அம்மா'' என்று சொல்லி விட்டுக் காரைத் திருப்பினான் காரோட்டி.

கார் விரைந்து சென்றுகொண்டு இருந்தபோது மணிமொழி தன் முகத்தில் அரும்பி நின்ற வேர்வையைத் தன் சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தாள்.

அவளது வாழ்க்கையில் இப்படி ஓர் அவதி, இப்படி ஓர் அச்சம் தரும் நிகழ்ச்சி, இப்படி ஒரு திருப்பம் ஏற்படும் என்று அவள் எண்ணியதே இல்லை.

மலபார் ஹில்ஸில் அவள் தேடிச் சென்ற மனிதர், கேசவதாஸ் என்னும் வடநாட்டு மனிதர். கேசவதாஸ் யார், அப்பாவுக்கும் அவருக்கும் என்ன தொடர்பு, ஏன் அவர் சுட்டுக் கொல்லப்பட்டுக் கிடக்கிறார், அவரைச் சுட்டுக் கொன்றது யார்... எதுவும் தெரியாது, எவரோடும் நெருங்கிப் பழகியிராத மணிமொழிக்கு!

## மகளே... உன்னை நான் ஏமாற்றிவிட்டேன்!

மணிமொழி பயணம் செய்த வாடகைக் கார், அவளுடைய வீட் டிற்கு முன்னால் வந்து நின்றது.



மணிமொழி, தன் கையிலிருந்த பெட்டியுடன் கீழே இறங்கி காருக்கான வாடகையைக் காரோட்டியிடம் கொடுத்துவிட்டு, வீட்டிற்குள் நுழைந்து மாடிப்படிகளில் ஏறி, “அப்பா! அப்பா!” என்று அழைத்துக்கொண்டே உள்ளே ஓடினாள்.

அரைத் தூக்கத்திலிருந்த நம்பி, கண்களைத் திறக்க முடியாமல் துன்பம் கொண்டு கண்களைத் திறந்து திரும்பிப் பார்த்தார்.

மணிமொழி ஓடி வந்து பெட்டியைத் தரையில் வைத்துவிட்டுக் கைகளை அவர் மடியில் ஊன்றிக் கொண்டு, “அப்பா, நான்கு பேரிடம் நான்கு பெட்டிகளையும் கொடுத்து விட்டேன். ஐந்தாவது மனிதரிடம் ஐந்தாவது பெட்டியைக் கொடுக்க முடியவில்லை!” என்று சொல்லிப் பதறினாள்; குமுறினாள்; பரபரப்புக் கொண்டாள்; பதைபதைத்தாள்.

நம்பி, “ஏன்?” என்று கேட்டு, மணிமொழியின் முதுகில் கையை வைத்தார்.

“அப்பா, அந்த மனிதர், ஐந்தாவது பெட்டியை வாங்கிக்கொள்ள வேண்டியவர், நெற்றியில் துப்பாக்கிக் குண்டு பட்டுச் செத்துக் கிடக்கிறாரப்பா!” என்று சொல்லிவிட்டு அழப் போனாள் மணிமொழி. அதற்குள்...

நம்பி சட்டென்று எழுந்து, “ஆ!” என்று கத்தினார். அவர் முகம் வேறுபாடு அடைந்தது.

“மணிமொழி, நன்றாகப் பார்த்தாயா? அவர் செத்தா கிடக்கிறார்?” என்று மணிமொழியின் தோள்களைப் பற்றிக்கொண்டு கேட்டார்.

“ஆமாம் அப்பா, அவரை எவரோ சுட்டுக் கொன்றுவிட்டார்கள்! உயிர் போய்விட்டது. உடல்தான் கிடந்தது!” என்றாள் மணிமொழி, சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டு.

“பிணம்! பிணமா?!” என்று கத்திக்கொண்டே, குலுங்கிக் குலுங்கி அழுதார் நம்பி.

மணிமொழி நிமிர்ந்து அப்பா வின் தாடையைத் தொட்டுப் பிடித்து, “அப்பா, ஏன் இப்படி அஞ்சுகிறீர்கள்? ஏன் இப்படி நீங்கள் அழ வேண்டும்?” என்று கேட்டாள்.

“மணிமொழி! இந்த விநாடியிலிருந்து நான் அஞ்ச வேண்டியவன் தான்; அழவேண்டியவன்தான்” என்று சொல்லிவிட்டு விக்கினார் நம்பி.

“விளங்கச் சொல்லுங்கள் அப்பா!” என்ற மணிமொழி அப்பாவின் முகத்தைத் தன் பக்கத்திற்குத் திருப்பினாள்.



நம்பி கண்களைத் துடைத்துக் கொண்டு பரபரப்போடு, “மணி மொழி, எல்லாவற்றையும் உனக்கு விளக்கிக் கொண்டிருக்க நேரம் இல்லை” என்று சொல்லிவிட்டு நேரத்தைப் பார்த்தார். பிறகு, “இன்னும் கொஞ்ச நேரத்தில் சென்னைக்கு ஒரு விமானம் புறப்பட இருக்கிறது. அதில் நீ சென்னைக்குப் போய்ச் சேர வேண்டுமம்மா!” என்றார்.

“ஏனப்பா நான் மட்டும் உடனே சென்னைக்குப் போக வேண்டும்?” என்று கேட்டாள் மணிமொழி.

“கேசவதாஸ் கொலை செய்யப்பட்டுக் கிடக்கிற நேரத்தில் நீ அவர் மாளிகைக்குப் போய் வந்திருக்கிறாய்! நீ அங்கு போய் வந்த அடையாளம் ஏதாவது இருக்கும்! அங்குள்ள தரையில் நீ நடந்த கால் அடையாளங்களும், அங்குள்ளவற்றை நீ தொட்ட கைவிரல் அடையாளங்களும் போதுமே!” என்று குமுறினார் நம்பி.

“அதனால் என்ன?” என்று குழந்தையைப் போல் கேட்டாள் மணிமொழி.

மணிமொழியின் மாசுமருவற்ற இந்தத் தன்மை நம்பியை நிலை குலையச் செய்தது!

“அதனால் என்ன என்றா கேட்கிறாய்? தெரிந்துகொள். விடிவதற்குள் கேசவதாஸ் தன் மாளிகையில் கொலை செய்யப்பட்டுச் செத்துக் கிடப்பது போலீசுக்குத் தெரிந்து விடும்! கேசவதாஸ் பெரும் பணக்காரர். அதனால் போலீசார் இந்த வழக்கில் அக்கறையோடு ஈடுபடுவார்கள். கேசவதாஸைக் கடைசியாகப் பார்த்தது யார் என்பதை விடிவதற்குள் எப்படியும் கண்டு பிடித்துவிடுவார்கள்! நீ கேசவதாஸ் வீட்டிற்குப் போய் வந்ததை வாடகைக் கார் ஓட்டியைத் தவிர மற்றவர்களும் பார்த்திருக்கக்கூடும், உனக்குத் தெரியாமல்! நாளைக்குள் வாடகைக் காரோட்டிகள் அனைவரையும் பிடித்து, நீ சென்ற கார் ஓட்டியைப் பிடித்துவிடுவார்கள்!”

இதைச் சொன்ன பிறகு, நம்பியின் உடல் கொஞ்சம் நடுங்கத் தொடங்கியது!

*“கண்டுபிடிக்கட்டுமே! நான் தான் கேசவதாஸ் வீட்டிற்குக் கடைசியாகப் போய் வந்தவள் என்பதைப் போலீசார் கண்டுபிடிக்கட்டுமே! அதனாலென்ன?” என்று கேட்டாள் மணிமொழி.*

*“மகளே! நீ குழந்தை! போலீசார் உன்னைக் கண்டுபிடித்துவிட்டால், உன்னையும் என்னையும் சும்மா விட்டுவிட மாட்டார்கள்!” என்றார் நம்பி.*

*“ஏனப்பா?”*

*“கேசவதாஸ் யார் தெரியுமா?”*

*“தெரியாது!”*

*“அவர் நல்லவரல்ல! அதனால் தான் சுடப்பட்டுக்கிடக்கிறார்.”*

*மணிமொழி எதையோ கேட்க வாயைத் திறந்தாள். நம்பி சட் டென்று அவள் வாயைத் தன் கரத்தால் மூடி, மற்றொரு கரத்தால் அவளைப் பற்றிச் சன்னலுக்கு அருகில் அழைத்துக்கொண்டு வந்தார். சன்னலுக்கு அருகில் வந்ததும் வெளியே ஒருமுறை எட்டிப் பார்த்துவிட்டு மணிமொழியின் முகத்தை ஒரு கரத்தால் தூக்கிப் பிடித்துக்கொண்டு அவர் சொன்னார்...*

*“மகளே! உன்னை நான் ஏமாற்றி விட்டேன்! உனக்கு முன்பு நான் ஏமாற்றியது உன் தாயை. ஏமாற்றம் தாங்காத உன் தாய் நம்மைவிட்டுப் போய்விட்டாள்! என்றைக்கு உன் தாய் இறந்தாளோ, அன்றிலிருந்து உன்னையும் ஏமாற்றத் தொடங்கி விட்டேன்! இப்பொழுது நீ சாகக் கூடாது மகளே! நான்தான் சாக வேண்டும்! நீ குற்றமற்றவள்!”*

*நம்பி ஓவென்று அழுதார். மணிமொழி, “அப்பா!” என்று வீறிட்டுக் கத்தினாள்.*

*பெற்றவரும் பெற்ற மகளும் மனம்விட்டு அழுதுகொண்டிருக்கும் இந்த நேரத்திலே, கீழே கார் ஒன்று வந்து நிற்கும் ஓசை கேட்டது. உடனே நம்பி தன் அழுகையை நிறுத்தித் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு, வெளியே எட்டிப் பார்த்தார்.*

*காரை நிறுத்திய காரோட்டி, தன் இருப்பிடத்திலிருந்து ஆறு பெட்டிகளை எடுத்துக்கொண்டு மேலே ஏறிவந்தான்.*

*நம்பி கதவைத் திறந்தார்.*

*காரோட்டி நம்பியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே ஆறு பெட்டிகளையும் உள்ளே கொண்டு வந்து வைத்தான்.*

*“என்ன, வேலா?” என்றார் நம்பி.*

“பெரிய ஐயா இந்த ஆறு பெட்டிகளையும் அனுப்பியிருக்கிறார். இந்த ஆறு பெட்டிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள் சென்னையில் இருக்கிறார்கள். இன்றிரவே சென்னைக்குப் புறப்பட்டுப் போய் இந்தப் பெட்டிகளை அவரவர்களிடம் சேர்த்துவிட வேண்டுமாம்.”

“சரி என்று பெரிய ஐயாவிடம் சொல்லு” என்றார் நம்பி.

“ஆகட்டும். கொஞ்ச நேரத்திற்கு முன் ஐந்து பெட்டிகளையும் கொடுத்துவிட்டு வர மணிமொழியை நீங்கள் அனுப்பினீர்களல்லவா?”

“ஆமாம்.”

“பெட்டியைப் பெற்றுக் கொண்டவர்களெல்லாம் உடனே தொலை பேசியில் தொடர்பு கொண்டு, பெட்டி பழுதில்லாமல் வந்து சேர்ந்துவிட்டது என்று சொல்லி, பெட்டி கொண்டு வந்த மணிமொழியை நிரம்பவும் பாராட்டி, இனிமேல் மணிமொழியிடமே பெட்டியை அனுப்பி வைக்கச் சொல்லிப் பெரிய ஐயாவிடம் சொன்னார்களாம். ஆனால்...”

“ஆனால், என்ன?”

“கேசவதாஸிடமிருந்து மட்டும் இன்னும் பெட்டி கிடைத்த செய்தி வரவில்லையாம். பெரிய ஐயா உங்களிடம் இதைச் சொல்லச் சொன்னார்கள்!”

“அது கொஞ்சம் முன் பின்னாக வரும். சரி வேலா, சென்னைக்கு நான் போகப் போவதில்லை. மணிமொழிதான் போகிறாள். ஆறு பெட்டிகளையும் கவனத்துடன் உரியவர்களிடம் அவள் சேர்த்து விடுவாள். பெரிய ஐயாவிடம் போய், மணிமொழிதான் சென்னைக்குப் போகிறாள் என்று சொல்லி, இன்னும் கொஞ்ச நேரத்தில் புறப்படவிருக்கும் விமானத்தில் மணிமொழி போக ஏற்பாடு செய்யச் சொல்லு. மணிமொழி பெயரையே பதிவு செய்து, அவள் பெயருக்கே டிக்கெட் வாங்கிக் கொண்டு நீ விமான நிலையத்தில் காத்திரு. நாங்கள் நேரே விமான நிலையத்திற்கு வந்து விடுகிறோம்” என்றார் நம்பி.

“ஆகட்டும்” என்று சொல்லிக் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே ஓடினான் வேலன்.

காரோட்டி போனதும் நம்பி மணிமொழியைப் பார்த்து, “மகளே, பயணத்துக்கு ஏற்பாடு செய்யம்மா. கேசவதாஸிடம் கொடுக்க விட்டுப் போன பெட்டியை இங்கேயே வைத்துவிடு. இந்த ஆறு பெட்டி களையும் உன் பயணப் பொருள் களோடு சேர்த்து வைத்துக் கொள். பெட்டிகளைப் பற்றி எவர் விசாரித் தாலும் ஒரே மாதிரியான பதிலையே சொல்லு” என்றார்.

“ஆகட்டும் அப்பா” என்று சொல்லி, மணிமொழி பயணத்துக் குரிய ஏற்பாடுகளைச் செய்வதில் இறங்கினாள்.

நம்பி கீழே போய் வாடகைக் கார் ஒன்று கொண்டு வந்தார். மணிமொழி தன் பயணப் பொருள்களோடு காரில் ஏறிக் கொண்டாள்.

மேலே போயிருந்த நம்பி காரில் வந்து ஏறிக்கொள்வதற்குச் சற்று நேரமாயிற்று.

அவர் வந்து காரில் ஏறிக் கொண்டதும் மணிமொழி அவரைப் பார்த்து, "ஏனப்பா இவ்வளவு நேரம்?" என்று கேட்டாள்.

"உன் அம்மா படத்தைப் பார்த்தேன். மெய்ம்மறந்து போனேன். அவ்வளவுதான்!" என்று சிரித்துக் கொண்டு மணிமொழியின் முதுகைத் தட்டிக் கொடுத்துவிட்டுக் காரோட்டியைப் பார்த்து, "நேராக விமான நிலையத்திற்குப் போ" என்றார்.

கார் புறப்பட்டது. கொஞ்ச நேரத்தில் கார் விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தது. காரின் வாடகைக் கட்டணத்தைக் கொடுத்துவிட்டு, விமான நிலையத்திற்குள் புகுந்தார் நம்பி. மணிமொழி பின் தொடர்ந்தாள்.

வேலன் டிக்கெட்டுடன் காத்திருந்தான். அவன் நம்பியைக் கண்டதும் ஓடி வந்து, "மணிமொழியின் பெயர்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மணிமொழி பெயருக்குத்தான் டிக்கெட் வாங்கியிருக்கிறது. இந்தாருங்கள்!" என்று தன் கையிலிருந்த டிக்கெட்டை நம்பியிடம் கொடுத்தான். நம்பி அதை வாங்கிக் கொண்டு, "சரி வேலா, நீ போ" என்றார். வேலன் போய்விட்டான்.

"வா, மணிமொழி" என்று மணிமொழியின் கையைப் பிடித்துக் கொண்டு தளத்திற்கு ஓடினார் நம்பி. தளம் வந்தது. கம்பிக் கதவு வந்தது. கம்பிக் கதவைத் தாண்டிச் செல்லுகிற உரிமை, பயணம் செய்வோருக்கு மட்டும்தான் உண்டு. ஆகையால் கம்பிக் கதவின் ஓரத்தி லேயே நின்றுகொண்டார் நம்பி.

நம்பி, மகளின் முகத்தைத் தன் இரு கைகளாலும் ஒற்றி, "மகளே, போய் வா! சென்னையில் இறங்கியதும் முதல் வேலையாக இந்த ஆறு பெட்டிகளையும் அவரவர்களிடம் சேர்த்துவிடு. பிறகு இந்தப் பெட்டிகளைப் பற்றிய நினைவையே மறந்துவிடு. இந்தப் பெட்டிகள் தொடர்புள்ள எவரோடும் பழகாதே. அவர்கள் சொல்லுவது எதையும் கேட்காதே! மீண்டும் இந்த மாதிரியான பெட்டிகளைக் கொண்டு வந்து கொடுத்துக் கொடுக்கச் சொல்வார்கள். உயிரே போனாலும் சரி, அந்தப் பெட்டிகளைத் தொடவே தொடாதே!" என்றார்.

"அப்பா! இது நம் வீடல்ல. விமான நிலையம்!" என்றாள் மணிமொழி.

"தெரியும் மகளே! இனி எனக்கு வீடும் வெளியும் ஒன்றுதான்!"

"அப்பா, நான் சென்னையில் எங்கே தங்குவது என்பதைப் பற்றி நீங்கள் சொல்லவில்லையே?" என்றாள் மணிமொழி, கண்களைத் துடைத்துக்கொண்டு.

*“நீ தங்குவதற்கு என்று சென்னையில் ஓரிடம் இருந்தால், முதலில் உன்னிடம் நான் அதைத்தான் சொல்லியிருப்பேன்! தெரியாததால் தான்...” என்று முகத்தைத் திருப்பிக் கொண்டார் நம்பி.*

*“அப்பா! உங்கள் மனதைப் புண்படுத்தி விட்டேன். பொறுத்துக் கொள்ளுங்கள், அப்பா!” என்றாள் மணிமொழி அழுதுகொண்டே.*

*இந்த நேரத்தில் பணியாள் ஒருவன் வந்து, “நீங்கள்தானே மணிமொழி? போங்கள், விமானத்தின் படியை எடுக்கப் போகிறார்கள்” என்றான்.*

*மணிமொழி நம்பியின் நெஞ்சில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, “அப்பா, நீங்கள் என்னிடம் கடைசியாகச் சொல்லப் போவ தைச்சொல்லிவிடுங்கள்!” என்று சொல்லிவிட்டு அழுதாள்.*

*நம்பி மணிமொழியை இறுகப் பற்றிக்கொண்டு, “மகளே! என்னை மறந்துவிடு!” என்றார்.*

*“அப்பா, இதுதான் நீங்கள் எனக்கு இறுதியாகச் சொல்லுவதா?” என்று குரல் அடைக்கக் கேட்டாள் மகள்.*

*“மணிமொழி, நீ என்னை மறந்துவிடு!” என்றார் நம்பி.*

*“அப்பா!” என்று ஒரு கத்துக் கத்திவிட்டு, விமானத்தை நோக்கி ஓடினாள் மணிமொழி.*

*அவள் விமானத்தில் ஏறினாள். படி இழுக்கப்பட்டது. கதவு சாத்தப்பட்டது. விசிறி சுழன்றது. விமானம் நகர்ந்தது... ஓடியது... எழும்பியது... பறந்தது.*

*விமானத்தைப் பார்க்க விரும்பாத நம்பி திரும்பிக்கொண்டார்.*

*மணிமொழிக்கும் நம்பிக்கும் தெரியாமல் இவர்கள் இருவரையும் வட்டமிட்டுக் கொண்டு இருந்த ஒருவன், அங்கிருந்து வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டான். அவனது கருவண்டு மீசையும் பெரிய மனிதனைப் போன்ற போலித் தோற்றமும் அருவருப்பை அளித்தன.*

*நம்பி நடந்தார்.*

*நம்பியாரே! ஐயா மருதநம்பியாரே! மணிமொழியைப் பெற்றெடுத்த பெரியவரே! மனைவியை ஏமாற்றி மகளையும் ஏமாற்றியவரே!*

*இனி எவரை ஐயா ஏமாற்றப் போகிறீர்? உம்மை நீரே ஏமாற்றிக் கொள்ளப் போகிறீரா? அதுதான் என்றோ நடந்துவிட்டதே! நீர் செய்ய வேண்டிய வேலை ஒன்றே ஒன்றுதானய்யா இருக்கிறது! அந்த ஒரு வேலை, என்ன வேலை தெரியுமா? தற்கொலை! செய்து கொள்ளுமய்யா!*

## வான வீதியிலே ஒரு வண்ணப் புறா!

மணிமொழிக்கு விமானப் பயணம் புதுப் பழக்கமாக இருந்தது. விமானம் பறந்து கொண்டிருந்தது.



அவள் அருகில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அந்த இருப்பிடத்தில் மணிமொழியும் அந்தப் பெண்ணும்தான். அந்தப் பெண்ணின் மடியிலே வண்ணப் புறாவைப் போன்ற பட்டு மேனிக் குழந்தை ஒன்று இருந்தது.

அந்தக் குழந்தை கொஞ்சம் தன் தாயின் மடியிலிருந்து தாவித் தன் பிஞ்சு விரல்களால் மணிமொழியைத் தொட்டபொழுது, அந்தக் குழந்தையின் தாய், "டேய் போக்கிரி! என்னடா உனக்குக் கை நீளுகிறது?" என்று செல்லமாகக் கடிந்து, குழந்தையை இழுத்துக்கொண்டாள்.

"குழந்தை என்னைத் தொட்டால் நான் ஒன்றும் கரைந்துவிட மாட்டேன்!" என்று சிரிப்பைச் சிந்திக் கொண்டே சொன்ன மணிமொழி "இங்கே வாடா என் கண்ணு!" என்று தன் இரு கைகளையும் நீட்டினாள்.



குழந்தை தாவி வந்தது. குழந்தையின் தாய் சிரித்துக் கொண்டே மணிமொழியிடம் குழந்தையைக் கொடுத்தாள். குழந்தை மணிமொழியைப் பார்த்துக் 'குளுகுளு'வென்று சிரித்தது. மணிமொழி குழந்தையை அணைத்துக் கொண்டாள்.

குழந்தையின் தாயும் மணிமொழியும் தோழமையுடன் பேசத் தொடங்கினார்கள்.

"நீங்கள் எதுவரையில் போகிறீர்கள்?" என்று கேட்டுப் பேச்சைத் தொடங்கினாள் மணிமொழி.

"சென்னைக்குப் போகிறேன்" என்றாள் குழந்தையின் தாய்.

"உங்கள் பெயர் என்ன?" என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டாள் மணிமொழி.

"என் பெயர் மணிமொழி" என்றாள் குழந்தையின் தாய்!

"என்ன, என்ன? உங்கள் பெயர் மணிமொழியா?" என்று கேட்டாள் மருதநம்பியின் மகள் மணிமொழி.

“ஆமாம். ஏன் மணிமொழி என்றதும் உங்களுக்கு இவ்வளவு வியப்பு?” என்று கேட்டாள் குழந்தையின் தாய்.

“என் பெயரும் மணிமொழிதான். அதனால்தான் எனக்கு இவ்வளவு வியப்பு!” என்றாள் மணிமொழி.

குழந்தையின் தாய் சொன்னாள்: “என் இயற்பெயர் கோமதி. கோமதி என்ற பெயர் என் தாய் தந்தையர் வைத்த பெயர். எனக்குத் திருமணம் ஆகும் வரையில் நான் கோமதியாகத் தான் இருந்தேன். திருமணம் ஆனதும் மணிமொழியாக மாறி விட்டேன்!”

“எப்படி?” என்று கேட்டாள் மணிமொழி.

“என் கணவருக்கு மணிமொழி என்ற பெயரில் என்ன மயக்கமோ எனக்குத் தெரியாது! என்னைத் திருமணம் செய்து கொண்டவுடன் என்னை ‘மணிமொழி, மணிமொழி’ என்று அழைக்கத் தொடங்கிவிட்டார்! அதனால் கோமதியாகிய நான், மணிமொழியாகி விட்டேன்!” என்றாள்.

“ஓகோ!” என்று சிரித்தாள் மணிமொழி.

குழந்தையின் தாய் திடீரென்று, “அவரை மணந்து கொண்டதற்கு இந்தப் பெயரும் குழந்தையும்தாம் மிச்சம்” என்றாள் பெருமூச்சுடன்.

இதைக் கேட்டதும் மணிமொழியின் சிரிப்பு நின்றது. மணிமொழி கூர்ந்து குழந்தையின் தாயைப் பார்த்தாள். முகம் சருகு போல் இருந்தது. முதலிலே துளிர், அப்புறம் தளிர், அப்புறம் இலை, இறுதியிலே சருகு!

குழந்தையின் தாயின் முகத்திலே அழுது அழுது கறைபடிந்து கிடந்த நீர்க் கோடுகளை மணிமொழி ஒருமுறை பார்த்துவிட்டு, “உங்கள் கணவர்..?” என்று ஐயத்துடன் கேட்டாள்.

“என்னை விட்டுப் பிரிந்து பத்து நாட்கள் ஆகின்றன. நான் இப்போது கிழக்குப் பஞ்சாபிலிருந்து அகதியாக, புகலில்லாதவளாக, ஏழையாக, எவருமற்றவளாக வந்து கொண்டிருக்கிறேன். என் வாழ்வின் ஒளி ஒழிந்து போகும், நான் பெற்ற செல்வம் அப்பாவை இழந்து அநாதையாகும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. எனக்கு வாழ்வு வந்து இரண்டு ஆண்டுகள்தாம் ஆகின்றன. தாழ்வு வந்து...” என்று சொல்லிவிட்டுத் தலைப்புச் சேலையால் முகத்தை மூடிக்கொண்டாள் குழந்தையின் தாய்.

அன்னை அழும்போது தன் பொக்கை வாயைத் திறந்து சிரிக்கக் கூடாது என்பது குழந்தைக்குத் தெரியவில்லை. வஞ்சனையின்றி வாய்விட்டுச் சிரித்தது.

குழந்தையைத் தன் தோளோடு அணைத்துக்கொண்ட மணிமொழி, “தாழ்வு வந்து எத்தனை நாட்கள் ஆனால் என்ன அக்கா! கணவனை இழந்த கவலைக்கு

என்ன சமா தானம் சொல்வது? இருந்தாலும் அக்கா, மனக் கவலையை மாற்றிக் கொள்ளவே நினையுங்கள்!'' என்றாள்.

குழந்தையின் தாய் கண்களைத் துடைத்துக்கொண்டு, ''என் தங்கையைப் போன்ற உன்னிடம் என்னைப் பற்றி ஏதாவது சொன்னால் எனக்குக் கொஞ்சம் ஆறுதல் கிடைக்கும் என்று நினைக்கிறேன்'' என்றாள்.

''சொல்லுங்கள் அக்கா, கேட்கிறேன்'' என்று சொல்லி விட்டுக் குழந்தையைத் தன் மடியிலேயே போட்டுத் தூங்கச் செய்தாள் மணிமொழி.

''நானும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவள்தான். தமிழகத்தில் பிழைக்க வழியில்லாது என் தந்தை என்னை அழைத்துக்கொண்டு கிழக்கு பஞ்சாபுக்குச் சென்றார். அங்கே பக்ராநங்கல் அணைக்கட்டில் வேலை பார்த்தார். அவருடன் கூட வேலை பார்த்த இன்ஜினீயரான ஓர் இளம் வயதுக்காரர், வீட்டுச் சாப்பாடு வேண்டுமென்று எங்கள் வீட்டில் வந்து சாப்பிட்டார். அவரும் அப்பாவும் ஒன்றாக வந்து சாப்பிட்டுப் போவார்கள். நாளான பின், அவர் அப்பாவுக்கு முன்னதாகவே தனியாக வந்து சாப்பிடத் தொடங்கினார். எங்கள் காதல் வளர்ந்தது. அப்பா எதையும் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. அந்த இளைஞர் திருமணமாகாதவர். திருந்திய முகமும், திண்ணமான எண்ணமும் கொண்டவர். என்னை அவருக்குப் பிடித்திருந்தது. கனிவு பிறந்தது; கல்யாணமும் செய்து கொண்டுவிட்டோம்...''

குழந்தையின் தாய் இதற்கு மேல் எதுவும் சொல்லாமல் விக்கினாள். பின்னர் சுதாரித்துக்கொண்டு...

''எங்கள் திருமணம் முடிந்த சில நாட்களில் என் தந்தை என்னைத் தவிக்கவிட்டுப் போய்விட்டார். என் தந்தைக்குப் பிறகு எல்லாமாக ஆகிவிட்டார் என் கணவர். என் அப்பா இறக்கும்போது, இதோ உன் மடியில் கிடக்கிறானே, இவன் என் வயிற்றில் இருந்தான். என் மஞ்சத்தில் தவழப் போகும் இவனையும் என் நெஞ்சத்தில் ஆழப் பதிந்த என் கணவரையும் நினைத்து ஆறுதல் பெற்றேன். நாட்களாயின. இவன் பிறந்தான். மகிழ்ந்தோம். மகிழ்ந்திருந்த அந்த நேரத்தில்தான் என் கணவரைப் பற்றிய சில விவரங்களை நான் அறிந்தேன்.

என் கணவரின் சொந்த ஊர், பிறந்த ஊர் எல்லாம் சென்னைதான். என் கணவரின் தாய் தந்தையர் இப்போது சென்னையில்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு என் கணவர் மூத்த மகன். இவருக்குத் தம்பி ஒருவர் உண்டு.

என் கணவரின் தந்தைக்கு ஒரு சகோதரி. அவருக்கு ஒரு பெண். என் கணவரின் அத்தை பெண்ணாகிய அவளைத் திருமணம் செய்துகொள்ளச் சொல்லிக் கணவரின் தாயும் தந்தையும் வற்புறுத்தினார்கள். இவருக்கு அந்தப் பெண்ணைப் பிடிக்கவில்லை. அதற்குக் காரணம் ஏதும் அவர் சொல்லவில்லை. நானும் கேட்கவில்லை. கணவரின் தாயும் தந்தையும் அந்தக் காலத்துப் பழக்க வழக்கங்களையும் பழைமையையும் விரும்பி, அதன்படியே நடக்க வேண்டும் என்பதில் உறுதி கொண்டவர்கள்.

*தம் அத்தை மகளைத் திருமணம் செய்துகொள்ள விருப்பம் இல்லாத என் கணவர், நாட்களைக் கடத்திக் கொண்டு வந்தார். அந்த நேரம் பார்த்து வலுவில் ஏற்பாடு செய்து கொண்டு, மாற்றலாகிக் கிழக்குப் பஞ்சாபிற்கு வந்து விட்டார் என் கணவர். வந்து வேலை பார்த்த இடத்தில்தான் இன்ஜினீயரான அவருக்கும், ஏழைத் தொழிலாளியாகிய என் தந்தைக்கும் நட்பு ஏற்பட்டு, எங்களுக்குள் காதல் மலர்ந்து, திருமணமாகி, இந்தச் செல்வம் பிறந்தது.*

*எனக்கும் என் கணவருக்கும் திருமணமானது என் கணவரின் பெற்றோருக்குத் தெரியாது. வேண்டும் என்றே என் கணவர் எங்களுக்குத் திருமணமானதை அவர் தாய் தந்தையருக்குத் தெரியாமல் மறைத்து வந்தார். ஒரு மாதத்திற்கு முன்பு கூட அவர் அப்பா கடிதம் எழுதியிருந்தார், 'எப்போதடா நீ உன் அத்தை மகள் சிவகாமியைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாய்?' என்று. அதற்கு எந்த விதமான பதிலையும், எந்தவிதமான விவரத்தையும் எழுதவில்லை என் கணவர். 'நமக்குத் திருமணம் ஆனதையும் நமக்குக் குழந்தை பிறந்திருப்பதையும் இன்னும் நீங்கள் உங்கள் பெற்றோருக்கும் உங்கள் தம்பிக்கும் தெரியப்படுத்தாமல் இருக்கிறீர்களே, திடீரென்று அவர்கள் இங்கே வந்துவிட்டால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டேன். 'வந்தால் என்ன, தங்கள் மருமகளையும் பேரக் குழந்தை யையும் பார்த்துவிட்டுப் போகட்டுமே!' என்று சிரித்தார்!*

*எனக்கு என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்று அச்சம் இருந்து கொண்டே இருந்தது. இருந்தாலும் என் கணவர் உறுதி உடையவராதலால் அது பற்றி நான் கொஞ்சம் மறந்திருந்தேன். இப்படிக் கவலையை மறந்து, களிப்போடு இருந்த நேரத்தில்தான்...'' என்று சொல்லி, வாயைப் பொத்திக்கொண்டு அழுதாள் குழந்தையின் தாய்.*

*மணிமொழி சங்கடமாகி, தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு வெளியே பார்த்தாள்.*

*சற்று நேரத்தில் தன்னைத் தேற்றிக்கொண்ட குழந்தையின் தாய், ''கேள் மணிமொழி'' என்று தொடர்ந்து சொல்லத் தொடங்கினாள். ''பாறை ஒன்றைத் தகர்த்து வழி உண்டாக்க வைத்த வெடி ஒன்றால் ஒரு பெரிய விபத்து ஏற்பட்டு, மூவர் மாண்டனர். அந்த மூவரிலே ஒருவர் என் கணவர். இந்தச் செய்தியை சென்னையில் இருக்கும் என் கணவரின் தாய் தந்தையருக்கு அறிவித்துவிட்டு, என்னையும் குழந்தையையும் இந்த விமானத்தில் ஏற்றி அனுப்பி வைத்திருக்கிறது பஞ்சாப் அரசு.*

*என்னை என் மாமனாரும் மாமியாரும் முன் பின் பார்த்ததில்லை. நானும் அவர்களைப் பார்த்ததில்லை. என் புகைப்படத்தைக் கூட அவர்கள் பார்த்ததில்லை. 'உங்கள் பையனின் மனைவியையும், குழந்தையையும் அனுப்பி வைத்திருக்கிறோம்' என்று பஞ்சாப் அரசினர் அனுப்பிய கடிதத்தைப் படித்த பிறகுதான் அவர்களுக்குத் தங்கள் பையன் கல்யாணம் செய்து கொண்டு பிள்ளை ஒன்றையும் பெற்றுவிட்டான் என்பது தெரியும்.*

*அவர்கள் தங்கள் பையனை இழந்த துக்கத்தில் இருப்பார்கள். அதோடு நான் என்ன சாதியைச் சேர்ந்தவள் என்பதே அவர்களுக்குத் தெரியாது. நான் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவள். என்னை அழைத்துக் கொண்டு போக அவர்கள் விமான நிலையத்திற்கு வந்திருப்பார்களா, அல்லது நான்தான் அவர்கள் வீட்டை விசாரித்துக்கொண்டு போய்ச் சேர வேண்டுமோ... தெரியவில்லை!''*

*''நீங்கள் இதைப் பற்றித் துன்பம் கொள்ளாதீர்கள் அக்கா. அவர்கள் விமான நிலையத்திற்கு வந்திருந்தால் சரி! வராவிட்டால் என்ன, நான் உங்களுக்கு துணைக்கு வருகிறேன். நான் வந்து உங்களை உங்கள் மாமனாரிடத்திலும் மாமியாரிடத்திலும் விட்டுவிட்டு வருகிறேன்'' என்றாள் மணிமொழி.*

*விமானம் பறக்கத் தொடங்கி ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகிறது. திடீரென்று வானிலை காரணமாக, விசிறி ஒன்று சுற்றுவது நின்று விட்டதால், விமானம் அசைந்தது. ஆடியது. குலுங்கியது. மேலும் கீழும் இறங்கியது. ஏறியது. நிலை தடுமாறியது!*

*இந்த நிலையில் திடீரென்று மழை! எது வானம், எது மழை என்று கூட அறியமுடியாத அளவுக்குப் பெரும் மழை! குழந்தையின் தாய், மணிமொழியின் தோளைப் பற்றி, ''மணிமொழி, என்ன காரணம் என்று தெரியவில்லை. என் மனம் திக்திக்கென்று அடித்துக் கொள்கிறது'' என்றாள். அவள் முகம் மாறி நிற்பதைக் கண்டு மணிமொழி அஞ்சினாள்.*

*''மணிமொழி, கவனமாகக் கேள்! நான் கணவரை இழந்தவள். என் கணவர் ஒழுக்கக்குன்று. உத்தமர். அந்த உத்தமரோடு உடன் வாழ்ந்த நான், மற்றொருவரோடு வாழ்வது என்பது எப்பிறப்பிலும் நடக்காததொன்று! என் கணவர் இறந்ததும் நானும் இறக்க நினைத்தேன். ஆனால், கண்ணான இந்தக் குழந்தைக்காகத்தான் இன்னும் சாகாமல் இருக்கிறேன்!'' என்றவள், திடீரென்று மணிமொழியின் இரு கைகளையும் பற்றிக்கொண்டு, ''மணிமொழி, உன்னைப் பார்த்த பிறகு, உன் பெயர் மணிமொழி என்பதை, அறிந்த பிறகு, இனி நான் வாழத் தேவை இல்லை என்று முடிவு கொண்டுவிட்டேன். இது அசைக்க முடியாத முடிவு'' என்றாள் குழந்தையின் தாய்.*

*''அக்கா, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று பதறினாள் மணிமொழி.*

*''நான் சாகப்போகிறேன் மணிமொழி, நான் சாகப்போகிறேன்! இந்தக் குழந்தைக்கு இனி நீதான் தாய். இந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டு எங்கு வேண்டுமானாலும் போ. ஆனால், என் மாமியார் வீட்டுக்கு மட்டும் போகாதே. இந்தக் குழந்தை இனி உன் குழந்தை. உனக்கு மணம் ஆனாலும் ஆகா விட்டாலும் இது உன் குழந்தையாகவே இருக்கட்டும்!'' என்று சொல்லி விட்டுக் குமுறிக் குமுறி அழுதாள் குழந்தையின் தாய்.*

*மணிமொழியின் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது.*

விமானம் நிலை தடுமாறிப் பறந்துகொண்டிருந்தது. விமான அசைவின் ஏற்ற இறக்கம் அதிகமாக இருந்தது.

“அக்கா! இந்தக் குழந்தையை என்னிடம் ஒப்படைத்துவிட்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதே தெரியவில்லையே! விமானம் ஆடுவதைப் பார்த்தால் எவருமே உருப்படியாகப் போய்ச் சேர முடியாது போலிருக்கிறதே! அமைதி பெறுங்கள் அக்கா” என்று சொன்னாள் மணிமொழி.

பயணம் செய்தவர்கள் அனைவரும் பயந்து ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டார்கள். திடீரென்று விமானத்திற்குள்ளே சிவப்பு விளக்கு ஒன்று பளிச்சிட்டது. ஒலிபெருக்கி அலறியது...

“விமானத்தின் நான்கு விசிறிகளில் ஏற்கெனவே ஒரு விசிறியின் சுழற்சி நின்றுவிட்டது. இப்போது அதே பக்கத்தில் இன்னொரு விசிறியின் சுழற்சியும் நின்றுவிட்டது! கடுமையான மழை. கொஞ்சம் கொஞ்சமாக விமானம் இறங்கிக் கொண்டிருப்பதால் விமானத்தைக் கட்டாயமாகத் தரையில் இறக்கியாக வேண்டியதாயிருக்கிறது. விமானத்தை இறக்கும்போது, இறக்கப்படுகிற இடம் எப்படி இருக்கும், பாதுகாப்புடன் விமானம் இறங்குமா என்பதையெல்லாம் சொல்ல முடியாது! துணிவு இல்லாதவர்கள் பாரசூட் மூலம் குதித்து விடலாம். விமானப் பணியாட்கள் பாரசூட் தருவார்கள். வாங்கிக் கட்டிக்கொண்டு குதிப்பவர்கள் குதித்துவிடலாம். துணிவு உள்ளவர்கள் விமானத்திலேயே இருக்கலாம்.”

விமானத்தில் பயணம் செய்தவர்கள் குறைவானவர்கள். இந்தப் பேரிடர் அறிவிப்பைக் கேட்டதும் பயணம் செய்தோரில் அஞ்சிய சிலர், விமானப் பணியாட்களிடம் பாரசூட்டை வாங்கிக் கட்டிக் கொண்டு, அந்தக் கடும் மழையில் கண்களை மூடிக் கொண்டு குதித்து விட்டார்கள். இன்னும் சிலரும், மணிமொழியும், குழந்தையின் தாயுமே விமானத்தில் இருந்தார்கள். விமானம் கீழ் நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தது.

குழந்தையின் தாய் சட்டென்று எழுந்து மணிமொழியின் மடியிலிருந்த குழந்தையை எடுத்து மாறி மாறி முத்தங்கள் ஈந்து விட்டு மறுபடியும் மணிமொழியின் மடியிலே படுக்க வைத்தாள். பின்பு, மணிமொழியின் கரங்களைப் பற்றிக் கொண்டு, “மணிமொழி, நீ என்னை மறந்துவிடு!” என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள். நடந்தாள்.

“அக்கா... அக்கா!” என்று கத்தினாள் மணிமொழி. குழந்தையின் தாய் குதித்துவிடப் போகிறாள்; அவளை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று எண்ணினாள்.

குழந்தையின் தாய் திரும்பவே இல்லை. விமானத்தின் கதவுக்கருகில் வந்தாள். பணிப்பெண்ணிடம் பாரசூட்டைப் பெற்றுக் கொண்டாள்; கதவைத்

*திறக்கச் சொன்னாள்; ஆனால், பாரசூட்டை அணிந்துகொள்ளாமலே கொட்டுகிற அந்த மழையில் அப்படியே தொப்பென்று குதித்துவிட்டாள்!*

*"அக்கா... அக்கா...!" என்று கன்னி மணிமொழி கதறினாள். எழுந்திருக்க முயன்றாள். மடியிலே கிடந்த குழந்தை வீறிட்டு அழுதது.*

*மணிமொழி, என்ன பிறவியடி உன் பிறவி! உன்னைப் பெற்ற அப்பா, 'என்னை மறந்துவிடு' என்று சொல்லி உன்னை விமானத்தில் அனுப்பி வைத்தார். இங்கே விமானத்தில் உன்னைப் பார்த்த ஒருத்தி, 'என்னை மறந்துவிடு' என்று சொன்னதோடல்லாமல், தன் குழந்தையையும் உன்னிடம் தந்துவிட்டு, உன் கண் எதிரிலேயே விமானத்திலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டுவிட்டாளே!*

***வி**மானம் இறங்கிக்கொண்டே வந்தது. எந்த இடத்தில் அது பொத்தென்று விழுந்து நொறுங்கும் என்று சொல்லமுடியாத அளவுக்குத் தத்தளித்தது. விமானத்திற்குள் பேரிடர் ஒலி ஒலித்துக்கொண்டே இருந்தது. சிவப்பு விளக்கு அடிக்கடி ஒளியிட்டுக்கொண்டு இருந்தது.*

*கொட்டும் மழையில் எவ்வளவு உயரத்தில் இருக்கிறோம், நாம் குதிக்கும் இடம் மலையாக இருக்குமா, ஏரியாக இருக்குமா, காடாக இருக்குமா என்பதைக் கூட அறியாமல் கண்களை மூடிக்கொண்டு குதித்து விட்டவர்களைத் தவிர, மற்றவர்கள் விமானத்திலேயே இருந்தார்கள்.*

*விமானமோட்டிகள் இருவரும் இறுதி வரை முயற்சி செய்து பார்ப்பது என்ற ஒரே நோக்கத்துடன் துணிந்து உட்கார்ந்து விமானத்தைப் பழுது பார்த்துக்கொண்டே செலுத்தினார்கள்.*

*கீழே இறங்கிக்கொண்டிருந்த விமானம், எவருமே எதிர்பாராத வகையில் திடீரென்று மேலே பறக்கத் தொடங்கியது. விமானத்தின் விசிறிகள் இரண்டும் சுழலத் தொடங்கின. விமானமோட்டிகள் இருவருமே, 'எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டோம்! துணிவு இல்லாதவர்களைக் குதிக்கும்படி சொல்லிவிட்டோமே, அவர்களெல்லாம் என்ன ஆனார்களோ?' என்று துன்பம் கொண்டார்கள். அவர்கள் மீதும் குற்றம் இல்லை. விமானம் மீண்டும் நல்ல நிலையில் பறக்கும் என்று அவர்கள் நினைக்கவே இல்லையே!*

*விமானம் மீண்டும் பறக்கத் தொடங்கிவிட்டதென்றும், இன்னும் சிறிது நேரத்தில் அது ஹைதராபாத்தில் பாதுகாப்புடன் இறங்கும் என்றும் அறிவிப்பு வந்தது.*

*விமானம் ஹைதராபாத் விமான நிலையத்தில் மெல்ல இறங்கி நின்றது. எல்லாரும் இங்கே இறங்க வேண்டும் என்றும், சென்னைக்குப் போகிறவர்கள் வேறு விமானத்தில் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று பணிப்பெண் அறிவிப்பு கொடுத்தாள்.*

## நீ என் மருமகள்!

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கூட்டம் மிகுந்திருந்தது. நேற்றிரவு பம்பாயில் புறப்பட்ட விமானம் பல தொல்லைகளுக்கு உட்பட்டதும், விமானம் எப்படியோ ஹைதராபாத் வந்து சேர்ந்ததும், தப்பியவர்கள் ஹைதராபாத்திலிருந்து வேறு விமானத்தில் வருகிறார்கள் என்பதும், எல்லோருக்கும் தெரிந்துவிட்டது.

விமானத்திலிருந்து குதித்தவர்கள் யார் யார், தப்பி வந்து சேரப் போகிறவர்கள் யார் யார் என்பதெல்லாம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்ததால், குதித்தவர்களுக்கு வேண்டியவர்களெல்லாம் ஹைதராபாத் போய்விட்டார்கள். குதிக்காமல் விமானத்திலேயே இருந்து தப்பி வந்தவர்களுக்கு வேண்டியவர்களெல்லாம் சென்னை விமான நிலையத்திற்கு வந்திருந்தார்கள். தப்பி வந்தவர்களை வேடிக்கை பார்க்க ஏராளமான பேர் வந்திருந்தார்கள். அதனால்தான் இவ்வளவு கூட்டம்!

அவர்களில் முத்தழகு ஒருவன்.

முத்தழகு, அந்தக் குழந்தையின் தாய் மணிமொழியின் மைத்துனன். தன் அண்ணியை அழைத்துக் கொண்டு போக அவன் வந்திருந்தான். தம் மருமகளும் பேரக் குழந்தையும் தப்பிய செய்தி கேட்டு மணிமொழியின் மாமனாரும் மாமியாரும் மகிழ்ச்சியில் கிடந்தார்கள்.

முத்தழகுக்கு மனதிற்குள் குழப்பம். முன்பின் பார்த்திராத அண்ணியிடம் என்ன பேசுவது, எப்படி நடந்துகொள்வது என்று விளங்கவில்லை அவனுக்கு!

அவன் அழகன், அண்ணனைவிட அவன் அழகன். நல்ல உயரம். செந்தளிர் உடல், ஒல்லியான தோற்றம் காரணமாக ஒரு கவர்ச்சி. அழகிய முகம். வண்ணக் கண்கள். அரிசிப் பற்கள். அழகான தலை முடி.

விமானம் வந்து இறங்கி, அதிலிருந்து ஒவ்வொருவராக இறங்கினார்கள். மணிமொழி குழந்தையைத் தன் தோளில் போட்டுக்கொண்டு மெல்லப் படிகளில் இறங்கி நடந்தாள். அவள் எவர் முகத்தையும் பார்க்கவில்லை. பயணம் செய்வோர் தங்குமிடத்தை நோக்கித் தனியாகப் போய்க்கொண்டு இருந்தாள் அவள்.

‘நம்மை அழைத்துப் போக நல்ல வேளையாக எவரும் வரவில்லை. நம்மை எவரும் அடையாளம் கண்டுகொள்ளவும் இல்லை. குழந்தையின் தாய் சொல்லியதைப்போல, அவளுடைய மாமியார் வீட்டிற்குப் போகாமல், குழந்தையோடு வேறு எங்காவது போய்விடலாம். முதலில் பயணம் செய்வோர் தங்குமிடத்திற்குச் சென்று, பொருள்களையெல்லாம் சரிபார்த்து வாங்கிக்கொண்டு, ஒரு வாடகைக் காரில் ஏறி விமான நிலையத்தை விட்டு வெளியே சென்றுவிடுவோம். எங்கே போவது, என்ன செய்வது என்பதைப்

*பற்றிப் பிறகு முடிவு செய்து கொள்ளலாம்' என்று மணிமொழியின் மனம் எண்ணியது.*

*அதே நேரம், ''அண்ணி'' என்றொரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தாள்.*

*''உங்கள் தோளில் கிடக்கும் குழந்தையின் சித்தப்பா நான்! அண்ணன் என்னைப் பற்றிச் சொல்லியிருப்பாரே! நான் முத்தழகு'' என்றான் முத்தழகு.*



*''சொல்லியிருக்கிறார்'' என்று சொல்லி விட்டுக் கொஞ்சம் நடந்து பயணம் செய்வோர் தங்குமிடத்தில் வந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள் மணிமொழி.*

*'எந்த உணர்ச்சியோடு நாம் இவரிடம் பேசுவது, எந்த நோக்கத்தோடு இவரிடம் நாம் நடந்துகொள்வது?' என்று எண்ணிக் குழம்பினாள் மணிமொழி.*

*''அண்ணி, ஏன் உட்கார்ந்து விட்டீர்கள்? புறப்படுங்கள், நம் பங்களாவிற்குப் போவோம். அப்பாவும் அம்மாவும் தங்கள் மருமகளையும் பேரக் குழந்தையையும் காணக் காத்து நிற்கிறார்கள் வாசலிலேயே. அவர்கள் உங்களைப் பார்த்ததில்லை. இருந்தாலும்கூட, அவர்களுக்கு என் அண்ணன் மீதிருந்த அன்பு அனைத்தும் உங்கள் மீதும் உங்கள் குழந்தையின் மீதும் திரும்பி யிருக்கிறது. புறப்படுங்கள்!'' என்றான் முத்தழகு.*

*மணிமொழி நிமிர்ந்து முத்தழகின் முகத்தை ஒருமுறை பார்த்தாள். அவள் கண் இமைகள் என்ன காரணத்தாலோ படபடவென்று அடித்துக் கொண்டன - பறவை பறக்கத் தொடங்குவதற்கு முன்னால் ஒருமுறை தன் இறக்கைகளைப் படபடவென்று அடித்துக் கொள்ளுமே, அதைப் போல!*

*''என்ன அண்ணி, புறப்படுங்கள்'' என்றான் முத்தழகு.*

*''நான் கொண்டு வந்த பொருள்களைக் கேட்டு வாங்கி வாருங்கள்; நாம் புறப்படலாம்'' என்றாள் மணிமொழி.*

*''சரி அண்ணி'' என்று சொல்லி விட்டு உள்ளே ஓடினான் முத்தழகு. அவன் போனதும் மணிமொழிக்குத் திக் திக்கென்று மனம் அடித்துக்கொண்டது. பொருள்களைச் சோதிக்கும் அறையில் பொருள்கள் இருந்தன. அந்தப் பொருள்களோடுதான் ஆறு பெட்டிகளும் இருந்தன. அவற்றை அவன் திறந்து பார்த்துவிட்டால் என்ன செய்வது!*

*கொஞ்ச நேரத்தில் முத்தழகு, மணிமொழியின் பயணப் பொருள்களையெல்லாம் அவன் ஒருவனாகவே முதுகிலும் தோளிலும் தலையிலும்*

கரத்திலுமாகத் தூக்கிக் கொண்டு வந்து, "போகலாமா அண்ணி?" என்று கேட்டான்.

மணிமொழி அவனைப் பார்த்துக் கொஞ்சம் இதழ் திறந்து சிரித்து, "என்ன இது, நீங்கள்....." என்றாள்.

"இதற்குப் போய்க் கூலி கொடுக்க முடியுமா அண்ணி? வாருங்கள்" என்று சொல்லிவிட்டு, முன்னால் கார் நிற்குமிடத்திற்கு நடந்தான் முத்தழகு.

துன்பத்தை மட்டுமே கண்டிருந்த மணிமொழி இப்போது கொஞ்சம் இன்ப உணர்வுடன் அவனுக்குப் பின்னால் குழந்தையோடு நடந்தாள்.

மணிமொழி காரை அடைந்ததும் முன் பக்கத்துக் கதவைத் திறந்து முத்தழகுவின் அருகில் உட்கார்ந்து கதவைச் சாத்திக்கொண்டாள்.

இதைச் சிறிதும் எதிர்பார்க்காத முத்தழகு திடுக்கிட்டான். இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, "அண்ணி, பின்னால் உட்கார்ந்து கொண்டால் உங்களுக்குச் சௌகரியமாக இருக்குமே!" என்றான்.

"ஆகட்டும்" என்று மணிமொழி கதவைத் திறந்து இறங்கிச் சாத்தி விட்டு, பின் கதவைத் திறந்து ஏறிக் கொண்டாள்.

முத்தழகு திரும்பிப் பார்த்தான்: குழந்தை முத்தழகைப் பார்த்துச் சிரித்தது. கொழுகொழுவென்றிருந்த குழந்தை, பால் உணவு விளம்பரங்களிலே வருமே, அந்தக் குழந்தையைப் போன்று தோன்றியது முத்தழகுக்கு.

குழந்தை பையனா பெண்ணா என்பது முத்தழகுக்குத் தெரியாது. அதைத் தெரிந்து கொள்வதற்காக, "குழந்தையின் பெயர் என்ன?" என்று கேட்டான் முத்தழகு.

இந்த வினாவை எதிர்பார்த்திராத மணிமொழி திடுக்கிட்டாள். இருந்தாலும் சமாளித்துக்கொண்டு "இளங்கோ" என்று சொன்னாள்.

"அண்ணனுக்குக் கதைகள் படிக்கத்தான் பிடிக்கும். அவர் போய்த் தன் மகனுக்கு இளங்கோ என்று இலக்கியப் பெயர் வைத்திருப்பது வியப்புக்குரியதுதான்" என்றான் முத்தழகு.

இதைக் கேட்டதும் மணிமொழிக்கு அச்சம் பிறந்தது. இந்தக் குழந்தையின் தந்தையைக் கண்ணால் கூடப் பார்த்திராத அவள், அவருடைய குணங்களையும் பழக்க வழக்கங்களையும் எங்கே அறிந்திருக்கப் போகிறாள்! முன்பின் பார்த்திராத ஒருவரை, முன்பின் கேள்விப்பட்டிராத ஒருவரை, இப்போது இல்லாத ஒருவரைத் தன் கணவர் என்று அவருடைய தம்பியிடமும் அவருடைய பெற்றோரிடமும் சொல்லிக்கொண்டு எவ்வளவு நாட்களுக்குக் காலம் தள்ள முடியும்? அவருடைய பெயர் கூடத் தெரியாதே மணிமொழிக்கு!

"இல்லை, அவர் அங்கு வந்த பிறகு இலக்கியங்களை விரும்பிப் படித்தார். இளங்கோ அவருக்குப் பிடித்த புலவர். அதனால் தன் செல்வனுக்கு இளங்கோ என்ற பெயர் வைத்துவிட்டார்" என்றாள். பொய்க்கு மேல் பொய்யாகச் சொல்லிக்கொண்டே இருக்கிறோமே, பலூன் எப்போது வெடிக்குமோ என்று பயந்தாள் அவள்!

குழந்தையின் தந்தை பெயர் என்ன என்பதைக் குழந்தையின் தாய், மணிமொழியிடம் சொல்ல வில்லை. அதை இப்போது தெரிந்து கொண்டுவிட வேண்டும். எப்படித் தெரிந்து கொள்வது?

"இளங்கோவின் அப்பாவுக்கு வேறு பெயர் ஏதாவது உண்டா?" என்று கேட்டாள் மணிமொழி.

"அரசு என்பதைத் தவிர, அண்ணனுக்கு வேறு பெயர் எதுவும் இல்லையே!"

மணிமொழி மனத்திற்குள் மகிழ்ந்தாள். முதல் சோதனையில் அவளுக்குக் கிடைத்த வெற்றி, அவள் சோர்வைப் போக்கி உற்சாகம் தந்தது. மயக்கம் நீங்கி மன ஆறுதல் பெற்றாள் மணிமொழி.

கார், நுங்கம்பாக்கத்தில் அமைதியான ஓர் இடத்தில் கட்டப்பட்டிருந்த ஒரு பெரிய பங்களாவின் சுற்றுச் சுவர் வாயிலைக் கடந்து உள்ளே வந்து நின்றது. கதவோரம் நின்றுகொண்டிருந்த மாமியாரும், வாசற்படியில் நின்று கொண்டிருந்த மாமனாரும் காருக்கருகில் ஓடி வந்தார்கள்.

முத்தழகு காரைவிட்டுக் கீழே இறங்கிப் பின்கதவைத் திறந்து கரங்களை நீட்டினான். மணிமொழி குழந்தை இளங்கோவை அவன் கரங்களில் கொடுத்துவிட்டுக் கீழே இறங்கிச் சுற்றிலும் ஒருமுறை பார்த்தாள். பின், மாமனாரையும் மாமியாரையும் நிமிர்ந்து பார்த்தாள்.



மாமனார் ஒல்லியாகச் சிவப்பாக இருந்தார். அவர் முகத்தில் முழு அமைதி இருந்தது. மாமியார் நல்ல பருமன். அவள் முகத்தைப் பார்த் ததும் அவள் அடிக்கடி சினம் கொள்பவள் என்பதை மணிமொழி கண்டுகொண்டாள்.

"இந்தா அம்மா, உன் பேரன் இளங்கோ!" என்று பேரனைத் தன் அம்மாவின் கையில் கொடுத்தான் முத்தழகு.

மாமியார் கரங்களை நீட்டிப் பேரனை வாங்கி, "பேரனா!" என்று வியப்புடன் பேரனை நெஞ்சோடு அணைத்து, அவனுக்குப் பல முத்தங்கள் ஈந்தாள். மாமனார் மாமியாருக்கு அருகில் வந்து அவள் நெஞ்சோடிருந்த பேரன் கன்னத்தைத் தொட்டு முத்தம் கொஞ்சினார். பின்பு, மகிழ்ச்சியில் மிதந்த மாமியாரின் முகத்தைப் பார்த்தார். மாமியாரின் கண்களிலே கண்ணீர்!

“இவன் நம் அரசைப் போலவே இருக்கிறான்!” என்று சொல்லிக் கண்களைத் துடைத்துக் கொண்டார் மாமியார்.

அதைக் கேட்டு மாமனாரின் கண்களும் கலங்கின. அவர்கள் ஒரே நேரத்தில் மணிமொழியைப் பார்த்தார்கள். அவள் தலையைக் குனிந்துகொண்டாள்.

“டேய் சின்னத் தம்பி, என்னடா நிற்கிறாய்? அண்ணியை உள்ளே அழைத்துக்கொண்டு போய், அவள் குளிப்பதற்கும் சாப்பிடுவதற்கும் ஓய்வு எடுத்துக் கொள்வதற்கும் ஏற்பாடு செய்!” என்று முத்தழகைப் பார்த்துச் சொல்லிவிட்டு, மணிமொழியைப் பார்த்து, “போ அம்மா, போய் முதலில் குளித்துச் சாப்பிட்டுக் கொஞ்சம் தூங்கு. அப்புறம் பேசிக்கொள்ளலாம்” என்றாள்.

மணிமொழி உள்ளே சென்றதும் மாமனாரும் மாமியாரும் சுற்றுப் பத்தியில் கிடந்த கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள். இளங்கோ தன் பாட்டியின் மடியில் சிரித்துக்கொண்டு கிடந்தான்.

“ஐயமே இல்லை. அரசுவின் நிறமும் முகமும் அப்படியே இருக்கின்றன இந்தப் பயலுக்கு. அரசு அவன் திருமணத்தைப் பற்றி ஒரு சிறு கடிதத்தின் மூலம் கூட நமக்குத் தெரிவிக்கவில்லையே, ஏன்?” என்று கேட்டார் மாமனார்.

“இந்தப் பெண் தாழ்ந்த சாதியாக இருப்பாள் என நினைக்கிறேன். அதனால்தான் நமக்குத் தெரியாமலேயே திருமணம் செய்துகொண்டு இருக்கிறான்” என்றாள் மாமியார்.

“தாழ்ந்த சாதி, உயர்ந்த சாதி என்ற எண்ணமெல்லாம் இந்தக் காலத்தில் ஏது? அத்தை மகள் சிவகாமியை நாம் திருமணம் செய்துகொள்ளச் சொல்லுவோம் என்ற அச்சம்தான் காரணம், அவன் நம்மைக் கேட்காமலேயே திருமணம் செய்துகொண்டதற்கு!”

“ஏதேது, சாதியைப் பற்றி அவ்வளவு எளிதாகச் சொல்லிவிட்டீர்கள்! மருமகளைப் பார்த்ததும் மனம் மாறிவிட்டதோ?”

“மகனைப் போலவே இருக்கிறாள் மருமகள். அதனால் மருமகள் எந்தச் சாதியாக இருந்தாலென்ன என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்!”

“இந்தப் பயலைப் பார்த்ததிலிருந்து எனக்கிருந்த சாதி வெறி போய்விட்டது. எனக்கும் இனி எல்லாச் சாதியும் ஒரு சாதிதான்.”

“உண்மையாகவா?”

“உண்மையாகவேதான்! என் மூத்த மகன் என்னை விட்டு என்று பிரிந்தானோ, அன்றே என் சாதி என்னை விட்டுப் போய்விட்டது. என் சின்னப் பையன் முத்தழகு எந்தப் பெண்ணை விரும்புகிறானோ அந்தப் பெண்ணையே

*நான் அவனுக்குத் திருமணம் செய்து வைப்பேன். அவன் திருமணத்தில் சதியும் இருக்காது, சாதியும் இருக்காது.''*

*இந்த நேரத்தில் குளித்துவிட்டு வந்த மணிமொழி, மாமியாருக்கு அருகில் வந்து மண்டியிட்டு அவள் காலடிகளைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். மாமியார், மணிமொழியின் தோள்களைப் பற்றி, ''நீ என் மருமகள். எழுந்திரு'' என்றாள்.*

*பெரியவளே, உன் மருமகள் விமானத்திலிருந்து குதித்து இறந்து போன செய்தி உனக்குத் தெரியாது! இந்த மணிமொழி உன் மருமகளல்ல. இவள் மணமாகாத கன்னிப்பெண் என்பதை அறிந்ததும், நீ எப்படி நடந்துகொள்வாயோ! இந்த மணிமொழியின் வருகையால், உன் குடும்பத்தில் பல துன்பங்களை நீ காணப்போகிறாய்! அப்போது 'நீ என் மருமகள்' என்கிற உன்னுடைய இந்தப் பாசச் சொல் நிற்குமா, பார்க்கலாம்!*

## வந்தவுடன் பூட்டைத் திறக்கிறானே!

அரசுவின் அப்பா பெயர், அதாவது மணிமொழியின் மாமனாரின் பெயர் தில்லைநாயகம். தில்லைநாயகத்தின் மனைவி பெயர் மங்கை. மணிமொழி வந்திருக்கும் செய்தி கேட்டுப் பக்கத்து வீட்டிலிருந்த சிவகாமி வந்தாள்.



சிவகாமி, அரசுவுக்கு அத்தை மகள். அதாவது தில்லைநாயகத்தின் தங்கை மகள். இந்தச் சிவகாமியைத்தான் அரசுவுக்குச் செய்துவிட வேண்டும் என்ற முயற்சி நடந்தது. முற்றும் தோல்வி பெற்றது அந்த முயற்சி!

சிவகாமி நாகரிக நங்கை. நாகரிகம் என்ற பெயரால் அநாகரிகப் பழக்க வழக்கங்களை மேற்கொண்டிருப்பவள். தேள் ஒரு தடவை தான் கொட்டும். அந்த ஒரு தடவை கொட்டுதலையே பொறுக்க முடியாது. சிவகாமியும் அந்த இனத்தைச் சேர்ந்தவள்தான். அவள் ஒரு முறை பிறருக்குத் தீங்குசெய்தால், அதைத் தாங்கிக் கொள்வது கடினம்!

சிவகாமி ஒரு விடுதலைப் பறவை. தாய் தந்தையருக்குத் தனியருத்தியாகப் பிறந்த செல்வி. இதனால் அவளுக்கு சலுகைகள், வாய்ப்புகள், வசதிகள் ஏராளம்.

சிவகாமி, மணிமொழியும் முத்தழகும் இருந்த அறைக்குள் நுழையும்போது மணிமொழி தன் உடைகளைச் சரிபார்த்துக் கொண்டிருந்தாள். முத்தழகு அறிவு நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான்.

"அத்தான், நான் அக்காளைப் பார்க்க வந்திருக்கிறேன்!" என்றாள் சிவகாமி.

முத்தழகு திரும்பி, "இதோ இருக்கிறார்கள் பாரேன்" என்று சொல்லிவிட்டு, மணிமொழியைப் பார்த்து, "அண்ணி, இவள் என் அத்தை மகள், சிவகாமி. உங்களைப் பார்க்க வந்திருக்கிறாள். கூச்சம் என்பதே சிறிதும் இல்லாத ஒரு பெண் என்றால், எங்கள் சிவகாமியைத் தவிர வேறு பெண்ணே கிடையாது!" என்றான்.

"அத்தான், அக்காளுக்கு என்னைப் பற்றி முதலில் சொல்லும்போது கொஞ்சம் நன்றாகச் சொல்லக் கூடாதா?" என்றாள் சிவகாமி.

இந்த நேரத்தில் மாமியார் அந்தப் பக்கம் வந்து, "மணிமொழி, குழந்தை பால் குடிக்கும்போது சட்டையிலெல்லாம் பாலைக் கொட்டிக்கொண்டு விட்டது. குழந்தைக்கு வேறு சட்டை போடு" என்று குழந்தையை மணிமொழியிடம் கொடுத்தாள்.

மணிமொழி குழந்தையை வாங்கிக் கொண்டாள். "குழந்தையைக் கவனியுங்கள் அக்கா, நான் அப்புறம் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சிவகாமி போய் விட்டாள். மணிமொழி குழந்தையைக் கையில் வைத்துக்கொண்டு அப்படியே நின்றாள்.

"என்ன அண்ணி, குழந்தைக்குச் சட்டை மாற்றவில்லையா?" என்று கேட்டான் முத்தழகு.

"பெட்டிச் சாவியை எங்கோ தொலைத்து விட்டேன். அதுதான் நிற்கிறேன்" என்றாள் மணிமொழி.

"நான் தேடிப் பார்க்கிறேன். சாவி காரில் கிடந்தாலும் கிடக்கும்" என்று சொல்லிவிட்டு வெளியே போனான் முத்தழகு. மணிமொழி அப்படியே குழந்தையோடு தூணில் சாய்ந்து கொண்டாள்.

'குழந்தையின் தாய், பெட்டிச் சாவியை என்னிடம் தரவில்லை. அவள் சாவியுடனேயே குதித்து விட்டாள். பெட்டியைப் பற்றியே ஏதும் சொல்லாதவள், சாவியைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது!' என்று எண்ணியது மணிமொழியின் மனம்.

முத்தழகு வந்தான். "அண்ணி, எங்கும் சாவியைக் காணோம். என்ன செய்வதென்று புரியவில்லை!" என்று சொல்லிவிட்டுப் பெட்டிக்கருகில் போய், பூட்டைப் பிடித்துப் பார்த்தான். பெரும் பூட்டுதான்!

"பூட்டை உடைப்பதைத் தவிர வேறு வழி இல்லை!" என்றாள் மணிமொழி. அதே நேரம், புது அச்சமொன்று அவள் மனத்தில் பிறந்தது. 'பெட்டிக்குள் என்னென்ன இருக்குமோ! குழந்தை இளங்கோவின் உடைகள் இருக்கும். சரி, மாண்டுபோன குழந்தையின் தாயின் உடைகளும் இருக்குமே!'



இந்த நேரத்தில் வெளியே காரொன்று வந்து நிற்கும் ஓசை கேட்டது. முத்தழகு சன்னல் வழியே வெளியே பார்த்தான். மணிமொழியும் பார்த்தாள். காரிலிருந்து சிவகாமி இறங்கினாள். அவளுக்குப் பின்னால் ஒருவன் இறங்கினான். **22** வயதிருக்கும். தலைமயிர் சுருட்டை. அரும்பு மீசை.

சிவகாமியும் அவனும் முத்தழகும் மணிமொழியும் இருக்கும் அறைக்கு வந்தார்கள்.

முத்தழகு அந்த வாலிபனைப் பார்த்ததும், "தங்கதுரை! நல்ல நேரத்தில் வந்து சேர்ந்தாய். இந்தா, இந்தப் பெட்டியைத் திறந்து கொடு!" என்று மணி மொழியின் பெட்டியைக் காட்டினான்.

தங்கதுரை பெட்டிக்கருகில் சென்று, அந்தப் பூட்டைப் பிடித்துப் பார்த்தான். முத்தழகு மணிமொழியைப் பார்த்து, "அண்ணி, இவன் பெயர் தங்கதுரை. என் நண்பன். சிவகாமியின் குடும்பத்திற்கு வேண்டியவன். எந்தப் பூட்டையும் எளிதில் உடைத்து விடுவான்!" என்றான்.

இதைக் கேட்டதும் மணிமொழி, சிவகாமி, தங்கதுரை எல்லாருமே சிரித்தார்கள்.

சிரிப்பு அலை அடங்கியதும், "முத்தழகு, ஏதாவது ஒரு கம்பி இருந்தால் கொண்டு வா! இதெல்லாம் சின்ன பூட்டாயிற்றே, இதையெல்லாம் நீயே திறக்கக் கற்றுக்கொள்ள வேண்டாமோ?" என்றான் தங்கதுரை.

இதைக் கேட்டதும், மறுபடியும் எல்லாரும் ஒருமுறை சிரித்தார்கள். முத்தழகு ஓடிப்போய் கம்பி ஒன்றைக் கொண்டு வந்தான்.

தங்கதுரை அதை வாங்கி, அதன் நுனியை வளைத்துத் திருகி சாவி மாதிரி செய்து சிறிது நேரத்தில் பூட்டைத் திறந்துவிட்டான். பின்பு, மணிமொழியைப் பார்த்து, "நீங்கள் கிழக்குப் பஞ்சாபிலிருந்துதானே வந்தீர்கள்?" என்று கேட்டான்.

இந்தக் கேள்வியை மணிமொழி எதிர்பார்க்கவே இல்லை. இருந்தாலும் தேற்றிக்கொண்டு, "ஆமாம்" என்றாள். இன்னும் இவர் என்ன கேள்விகளைக் கேட்பாரோ என்று அச்சம் மிகக் கொண்டாள்.

"நீங்கள் பயணம் செய்த விமானம் விபத்திலிருந்து தப்பியதாகச் செய்தி படித்தேன்" என்றான் தங்கதுரை. "ஆமாம். நல்லவேளையாக, அண்ணியும் இளங்கோவும் தப்பினார்கள்!" என்றான் முத்தழகு.

மணிமொழி, தலையைக் கொஞ்சம் அசைத்து, அசட்டுச் சிரிப்பொன்றால் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

"சரி, அண்ணி குழந்தைக்குச் சட்டையை மாற்றிக்கொண்டு வரட்டும். நாம் வெளியே பேசிக்கொண்டு இருப்போம், வாருங்கள்" என்று எல்லோரையும் வெளியே அழைத்துச் சென்றான் முத்தழகு.

முத்தழகின் இந்தச் செயல் மணி மொழிக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர்கள் போனதும், இளங்கோவைக் கட்டிலில் வைத்துவிட்டு, அவசரமாகப் பெட்டியைத் திறந்தாள்.

மேலாகக் கண்ணாடி போட்ட ஒரு புகைப்படம் இருந்தது. அதைப் பார்த்ததும் மணிமொழி திடுக்கிட்டாள். அவள் ரத்தம் அப்படியே உறைந்துவிட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. சிந்தனை இழந்து நின்ற அவள், சில விநாடிகளுக்குள் ஒரு முடிவுக்கு வந்து, குழந்தைச் சட்டை ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டு பெட்டியை மூடிவிட்டாள்.

கட்டிலிலிருந்த இளங்கோவைத் தூக்கி, துண்டால் அவன் உடம்பின் ஈரத்தைத் துடைத்துப் புதுச் சட்டையைப் போட்டு, எல்லாரும் இருந்த இடத்திற்கு எடுத்து வந்தாள்.

குழந்தையை மாமியாரிடம் கொடுத்தாள். சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த மாமனார், சிவகாமியிடம், “மணிமொழியும் இளங்கோவும் வந்து சேர்ந்ததை உன் அப்பா அம்மா வந்ததும் சொல்லிவிடம்மா” என்றார்.

“ஆகட்டும் மாமா” என்றாள் சிவகாமி.

கொஞ்ச நேரத்தில் சிவகாமியும் தங்கதுரையும் எல்லோரிடமும் விடைபெற்றுக் கிளம்பிப் போனார்கள்.

மணிமொழி! இந்தத் தங்கதுரையும், சிவகாமியும் உன் வாழ்க்கையில் புதிதாக வந்து குறுக்கிட்டிருக்கிறார்கள். சிவகாமி கூச்சமில்லாமல் எல்லோரோடும் பழகுகிறாள். தங்கதுரை பூட்டைச் சுலபமாகத் திறக்கிறான். இவர்களைப் பற்றி நீ ஒரு முடிவுக்கு வா! இவர்கள் இருவரும் எதையும் செய்யக் கூடியவர்கள்!

## இரும்புக் கை!

வந்து இரண்டு நாட்களானதும் மணிமொழிக்கு அந்த ஆறு பெட்டிகளைப் பற்றிய கவலை பிறந்தது. எப்படியும் அவற்றை அவரவர்களிடம் சேர்த்தாக வேண்டுமே!

என்ன செய்யலாம், எப்படிப் பெட்டிகளை வெளியே கொண்டு போவது, ஒவ்வொரு பெட்டியாக ஒவ்வொரு தடவையும் வெளியே கொண்டு போய்க் கொடுப்பதா, அல்லது, ஆறு பெட்டிகளையும் ஒரே தடவையில் கொண்டு போய் எல்லாரிடமும் சேர்த்துவிட்டு வருவதா? மணிமொழி குழம்பிக் கொண்டே இருந்தாள்.

மூன்றாவது நாள்... மாலை நேரம். மாமியார் தன் பேரனோடு கதை கேட்கப் போயிருந்தாள் கோயிலுக்கு. மாமனார் தன் நண்பர்களைக் கண்டுவர வெளியே போயிருந்தார். முத்தழகு டென்னிஸ் மட்டையுடன் போய்விட்டான். வேலைக்காரியைத் தவிர வேறு எவருமே இல்லை. இவர்களெல்லாம் எப்போது திரும்பி வருவார்கள் என்பது தெரியவில்லை. வேலைக்காரியைக் கேட்டால் தெரியுமே?

அவள் பெயர் பாவை. நல்லவள். அவளை யாரும் வேலைக்காரி என எண்ணாமல், குடும்ப அங்கத்தினர்களில் ஒருத்தியாகவே கருதினார்கள்.

“பாவை, இளையவர் எப்போது திரும்பி வருவார்?”

“மட்டை அடிக்க அல்லவா போயிருக்கிறார்? மட்டையடி முடிந்தவுடன் வந்துவிட முடியுமா? அப்புறம் அரட்டை வேறு அடிக்க வேண்டுமே! எப்படியும் ஒன்பது மணி ஆகும் அக்கா அவர் வர!” என்றாள் பாவை.

மாமியாரும் மாமனாரும் இப்போதைக்குத் திரும்பிவர மாட்டார்கள் என்பது மணிமொழிக்கே தெரியும்.

“பாவை, நான் கொஞ்சம் வெளியே போய் என் உயிர்த் தோழி ஒருத்தியைப் பார்த்துவிட்டு வருகிறேன். அவர்களெல்லாம் வருவதற்குள் நான் வந்துவிடுகிறேன்” என்றாள் மணிமொழி.

“போய் வாருங்கள் அக்கா!”

அறைக்குள் வந்தாள். இரண்டு பெட்டிகளை மட்டும் எடுத்துக் கொண்டாள். அதோடு, பெட்டியில் இருந்த கறுப்புக் கண்ணாடியையும் எடுத்துக் கொண்டாள். கிளம்பினாள். வெளியே வந்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். எவரும் தன்னைப் பார்க்கவில்லை என்பதை அறிந்ததும் தலைப்புச் சேலையை எடுத்துத் தலையில்

போட்டுக்கொண்டாள். கறுப்புக் கண்ணாடியை மாட்டிக் கொண்டாள். இப்போது அவளைப் பார்க்க வங்கப் பெண் போலவே இருந்தது!

மணிமொழி வெளியே வரும் போது நன்றாக இருட்டி விட்டது. மணிமொழி சாலையின் ஓரமாகவே நடந்தாள்.

கார் ஒன்று வந்தது. அது வாடகைக் கார். மணிமொழி அதை நிறுத்தி, காரில் ஏறிக்கொண்டு, "மயிலாப்பூர் குளத்துக்கருகில் போ" என்றாள்.

கார் திரும்பியது. புறப்பட்டது. மயிலாப்பூர் குளம் வந்தது. கார் நின்றது. மணிமொழி காரை விட்டுக் கீழே இறங்கி, "இங்கேயே இரு, இதோ வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கையிலிருந்த இரண்டு பெட்டிகளுடன் தெருவின் பெயர்களைப் பார்த்துக் கொண்டே நடந்தாள்.

அவள் தேடி வந்த தெருவுக்குச் சென்று, தேடி வந்த வீட்டு வாசற்படியில் ஏறி, சாத்தியிருந்த கதவைத் தட்டினாள். கதவு திறந்தது. கதவைத் திறந்தது ஒரு பெரியவர். அவர் மணிமொழியைப் பார்த்ததும், "இதோ, இந்த வீட்டின் கதவு எண்ணை மறுபடியும் ஒரு முறை பாருங்கள். இந்த வீட்டிற்குத்தானே வந்தீர்கள்?" என்று கேட்டார்.

மணிமொழி கதவின் எண்ணை ஒரு தரம் பார்த்துவிட்டு, "ஆமாம். இந்த வீட்டிற்குதான் வந்தேன்" என்றாள்.

"உள்ளே வாருங்கள்" என்றார் அந்தப் பெரியவர். மணிமொழி உள்ளே போனாள்.

"நீங்கள்தானே பொன்மலை?" என்று கேட்டாள் மணிமொழி.

"ஆமாம்" என்றார் பெரியவர்.

"நான் பம்பாயிலிருந்து வருகிறேன். நாளையே நான் மறுபடியும் பம்பாய் செல்ல வேண்டும். மருதநம்பியின் மகள் நான். என் அப்பா இந்தப் பெட்டியை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்" என்று சொல்லி, அவர் பெயர் எழுதியிருந்த அட்டைப் பெட்டியைக் கொடுத்தாள்.

பின்பு, "நான் வருகிறேன், இன்னொரு பெட்டி இருக்கிறது. இதைக் கொடுக்க வேண்டும்" என்றாள்.

"சரி" என்றார் பெரியவர்.

மணிமொழி வெளியே வந்தாள்.

அடுத்து அவள் சென்ற இடம் வேப்பேரி. அவள் தேடிப்போன வீட்டின் கதவுகளனைத்தும் திறந்தே கிடந்தன. மணிமொழி சென்று, கூடத்தில் நின்றாள்.

அப்போது பக்கத்து அறைக் கதவைத் திறந்து கொண்டு ஒரு மனிதர் வந்தார். அவருக்கு 35 வயது இருக்கும்.

“இங்கே திருமுகம் என்று...”

“நான்தான் திருமுகம்.”

“அப்படியா? உங்களுக்குப் பம்பாயிலிருந்து நான் ஒரு பெட்டி கொண்டு வந்திருக்கிறேன்.”

“அப்படியா? பெட்டிக்குள்ளே என்ன இருக்கிறது?”

“பிள்ளைகளுக்கான உடை!”

“அப்படியா? கொடுங்கள் அதை” என்று கையை நீட்டினார் திருமுகம். அப்போது திடீரென்று இரும்புக் கை ஒன்று வந்து அந்தப் பெட்டியைப் பறித்தது. அந்தக் கை... அந்த மூன்றாவது இரும்புக் கை யாருடையது?

மணிமொழி அச்சத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

போலீஸ்!

**ம**ணிமொழிக்கு உடலெல்லாம் சில்லிட்டுவிட்டது! அவள் தன் உணர்வை இழந்து மயக்கம் கொள்ளும் நிலையில் இருந்தாள். அவள் இதயம், அமைதியான இரவில் கடிகாரம் ஓசையிடுவதைப் போல் ஓசையிட்டது.

போலீஸ் இன்ஸ்பெக்டர், அந்தப் பெட்டியை வாங்கிப் பார்த்தார். அதில் ஒரு நைலான் சட்டை இருந்தது. ஆமாம், பெட்டியில் ஒரு குழந்தைக்கான சின்ன நைலான் சட்டை இருந்தது. வேறு எதுவுமே இல்லை அந்தப் பெட்டியில்.

திருமுகம் இன்ஸ்பெக்டரைப் பார்த்து மெல்லச் சிரித்தார். மணி மொழியும் தன்னைச் சற்று சமாளித்துக் கொண்டு இன்ஸ்பெக்டரைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

“பொறுத்துக்கொள்ள வேண்டும்! உங்கள் இருவரையும் தவறாகப் புரிந்து கொண்டதற்கு நீங்கள் என்னைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்” என்றார் இன்ஸ்பெக்டர்.

“அதனாலென்ன, உங்கள் கடமையை நீங்கள் செய்கிறீர்கள். பொதுமக்களாகிய நாங்கள், உங்கள் விருப்பப்படி நடந்துகொண்டால் தானே எங்களுக்கும் நலன் உண்டாகும்” என்றார் திருமுகம்.

“ஒரு பெண், இந்தப் பெண்ணைப் போலத் தலையில் தலைப்புச் சேலையைப் போட்டுக்கொண்டு எங்களை எல்லாம் ஏமாற்றி வருகிறாள். ஆகையால் தலையில் தலைப்புச் சேலையைப் போட்டுக்கொண்டு போகிற

இவர்களைப் போன்றவர்களுக்கெல்லாம் துன்பம் ஏற்படுகிறது'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

''அதனாலென்ன, உங்களுக்கு வெற்றி கிடைக்காமல் போய்விட்டதே என்பதை நினைக்கும்போது தான் எனக்குத் துன்பம் ஏற்படுகிறது!'' என்றார் திருமுகம்.

இதைக் கேட்டதும் கொஞ்சம் குறிப்போடு திருமுகத்தைப் பார்த்த போலீஸ் இன்ஸ்பெக்டர், ''எப்படி இருந்தாலும் இறுதியில் வெற்றி பெற்றே தீருவேன்!'' என்றார்.

இதைக் கேட்டு மணிமொழியும் திருமுகமும் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பில் போலீஸ் இன்ஸ்பெக்டரும் கலந்துகொண்டார்.

சிரிப்பு அடங்கியதும் திருமுகத்தின் குரல் கொஞ்சம் மாறியது. கொஞ்சம் கடுமை கலந்த குரலில், ''இன்ஸ்பெக்டர், இந்த முறை என் வீட்டிற்குள் வந்து ஒரு பெண்ணின் முன்னால் என்னை அவமானப்படுத்தியதை நான் பொருட்படுத்த வில்லை. ஆனால், மீண்டும் இது மாதிரி வந்து அவமானப்படுத்தாமல் இருக்க வேண்டும்'' என்றார்.

''இல்லை, இனித் தேவை இல்லாமல் நான் வரமாட்டேன். பொறுத்துக் கொள்ளுங்கள்'' என்று சிரித்துக் கொண்டே தலைத் தொப்பியைச் சரி செய்துகொண்டு வெளியே போய்விட்டார் இன்ஸ்பெக்டர்.



''என் வாழ்க்கையில் இந்த அளவுக்கு என்றுமே நான் பயந்ததில்லை'' என்றாள் மணிமொழி.

''இன்று நடந்ததில் ஏதும் இல்லை. இனிமேலதான் நாம் விழிப்புடன் நடந்து கொள்ளவேண்டும். உட்காருங்கள்'' என்றார் திருமுகம்.

'நாமா? விழிப்புடனா?' அஞ்சிய அவள், ''நான் கிளம்புகிறேன். எல்லாவற்றையும் போட்டது போட்டபடியே வந்திருக்கிறேன். நான் போய் பம்பாய் பயணத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். உங்களுக்கு மறுபடியும் பெட்டி தர வேண்டிய கடமை எனக்குக் கிடைத்தால் நான் வருகிறேன்'' என்று விடைபெற்றுக் கிளம்பிச் சென்றாள்.

அவள் சென்ற கார் மறைந்ததும் திருமுகம் கதவைச் சாத்திவிட்டு வந்து உட்கார்ந்து, அந்த நைலான் குழந்தைச் சட்டையை எடுத்து, இரண்டு கைகளாலும் விரித்துப் பிடித்து வெளிச்சத்தில் பார்த்தார்.

*நைலான் குழந்தைச் சட்டையில் பூ வேலை நிறையச் செய்யப்பட்டிருந்தது. அந்தச் சட்டையில், பூ வேலைகளுக்கிடையே ஐந்தாறு எழுத்துக்கள் மங்கலாகத் தெரிந்தன. அந்த எழுத்துக்களைக் கூர்ந்து ஒருமுறை படித்த திருமுகம், முக மலர்ச்சியோடு அந்தச் சட்டையை பெட்டிக்குள் வைத்து மூடினார்.*

*ஐயா, திருட்டு முகமுடையவரே! செல்வங்களுக்குள் பெருஞ்செல்வம் குழந்தைச் செல்வம்தானய்யா! பாவம் என்பதையே செய்யத் தெரியாத பச்சிளம் குழந்தையின் சட்டையில் உங்கள் கள்ளச் செயல்களையெல்லாம் கடிதம்போல் எழுதிக்கொள்கிறீர்கள். இது நீங்கள் குழந்தை உலகத்தையே குழி தோண்டிப் புதைப்பதாக ஆகுமே ஐயா!*

## பாவை பார்க்கவில்லை!

வாடகைக் கார் விரைந்து சென்றுகொண்டிருந்தது. மணிமொழியின் மனம் அச்சத்தாலும் அறியாமையாலும் குழம்பிக் கிடந்தது. வெளியே கிடந்த இருளைப் போக்க எத்தனையோ விளக்குகள். அவள் மனத்திலுள்ள இருளைப் போக்க ஒரு விளக்குக் கூட இல்லையே!

காரோட்டி பின்னால் திரும்பிப் பார்த்து, “எங்கேயம்மா இறங்கப் போகிறீர்கள்?” என்று கேட்டான். மணிமொழி வெளியே எட்டிப் பார்த்தாள். அப்போதுதான் புறப்பட்ட இடத்திற்கே வந்துவிட்டோம் என்பது அவளுக்குத் தெரிந்தது.

“இங்கேதானப்பா நான் இறங்க வேண்டும்” என்று சொல்லிக் கொண்டே மணிமொழி கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கினாள். மீட்டரைப் பார்த்தாள். கைப் பையைத் திறந்து பணம் எடுத்துக் கொடுத்தாள். தலைச் சேலையைச் சரிப்படுத்திக்கொண்டு சாலை ஓரமாகவே நடந்தாள்.

பங்களா நெருங்கியது. ‘மாமியார் வந்திருப்பாரோ, மாமனார் வந்திருப்பாரோ, முத்தழகு வந்திருப்பாரோ, பாவை ஏதாவது சொல்லியிருப்பாளோ?’ என்றெல்லாம் எண்ணிக் குழம்பியது மணிமொழியின் மனம்.

பங்களா வந்தது. கறுப்புக் கண்ணாடியைக் கழற்றிக் கைப் பைக்குள் வைத்துக்கொண்டு பங்களாவுக்குள் நுழைந்தாள் மணிமொழி. கார் இருக்கிறதா என்று பார்த்தாள். இல்லை. ஆக, முத்தழகு இன்னும் வரவில்லை. பங்களா அமைதியாக இருந்ததால், மாமியாரும் மாமனாரும்கூட வரவில்லை என்பதும் புரிந்தது.



மணிமொழி சமையற்கட்டுக்குள் போனாள். பாவை, மணிமொழியைப் பார்த்ததும், “இன்னும் சமையல் வேலை முடியவில்லை அக்கா. பகலில் ஒருமுறை சமைத்து, இரவிலும் ஒரு முறை சமைக்க வேண்டியிருக்கிறது. இந்த வீட்டில் இருப்பது மூன்று பேர்தாம். உங்களைச் சேர்த்துக் கொள்ளாததற்காக வருத்தப் படப்போகிறீர்கள். நீங்கள் இப்போதுதானே வந்திருக்கிறீர்கள்! இந்த மூன்று பேரும் மூன்று விதமாகச் சாப்பிடுவார்கள். ஒருவருக்குப் பிடித்தது மற்றவருக்குப் பிடிக்காது! யார் மீதும் நான் குற்றம் சொல்லவில்லை. எவ்வளவு வேலைகள் இருக்கின்றன என்பதற்காகச் சொன்னேன்” என்றாள் பாவை பல்லைக் காட்டிக்கொண்டு.

''எவ்வளவு வேலைகள் இருந்தால் என்ன? நான் வந்துவிட்டேன். இருக்கிற வேலைகள் எல்லாவற்றையும் நாம் இருவருமாகப் பார்ப்போம்!'' என்றாள் மணிமொழி.

''நீங்கள் சொல்லிவிட்டீர்கள் சுலபமாக. நீங்கள் இந்த வீட்டில் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டு நான் சும்மா இருக்கலாமா? இவ்வளவு இளம் வயதில் கணவனை இழந்துவிட்ட நீங்கள், வீட்டு வேலைகளை வேறு செய்து துன்பப்பட வேண்டுமா?

நீங்கள் குழந்தையை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். அது ஒன்று போதும். இளங்கோ வந்தது முதல் பாட்டியிடம் ஒட்டிக் கொண்டு விட மாட்டேன் என்கிறான். அதுவும் ஒரு வழியில் நல்லதுதான். உங்களுக்கும் ஓய்வு கிடைக்கும்'' என்றாள் பாவை.

மணிமொழி மௌனமாகத் திரும்பி நடந்து, தன் அறைக்கு வந்து கதவைத் தாழிட்டுவிட்டுக் கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

அவள் இரு விழிகளிலும் கண்ணீர் கொட்டி வழிந்தது.

'இளங்கோ வந்தது முதல் பாட்டியிடம் ஒட்டிக்கொண்டு விடமாட்டேன் என்கிறான்' என்று பாவை சொல்லியதைக் கேட்டதும், விமானத்தில் குழந்தையின் தாய் சொன்னாளே, அது மணிமொழியின் நினைவிற்கு வந்துவிட்டது.

'நான் சாகப்போகிறேன் மணி மொழி! இந்தக் குழந்தைக்கு இனி நீதான் தாய். இந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு எங்கு வேண்டுமானாலும் போ! ஆனால், என் மாமியார் வீட்டுக்கு மட்டும் போகாதே! இந்தக் குழந்தை இனி உன் குழந்தை உனக்கு திருமணம் ஆனாலும் ஆகாவிட்டாலும் இது உன் குழந்தையாகவே இருக்கட்டும். இந்த உதவியை நீ எனக்குச் செய்ய வேண்டும் என்று உன்னிடம் நான் கெஞ்சிக் கேட்கவில்லை. இந்த உதவியைச் செய்து தர வேண்டிய நிலைக்கு, இந்தக் குழந்தைக்குத் தாயாக வேண்டிய நிலைக்கு நீ வந்துவிட்டாய்!'

– மணிமொழியின் மனம் அழுதுகொண்டே யோசித்தது. இந்த நேரத்தில் யாரோ கதவைத் தட்டியதைப் போலிருந்தது.

மணிமொழி சட்டென்று கண்களைத் துடைத்துவிட்டு, சேலையைச் சரிசெய்துகொண்டு மெல்லக் கதவைத் திறந்து வெளியே பார்த்தாள். வெளியே எவரும் இல்லை!

மணிமொழி சமையலறைக்கு வந்து பாவையிடம், ''பாவை இன்னும் யாரும் வரவில்லையா?'' என்று கேட்டாள்.

*“வரவில்லையே அக்கா! அது சரி, உங்கள் உயிர்த்தோழி ஒருத்தியைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று சொன்னீர்களே, பார்த்தீர்களா?” என்று கேட்டாள் பாவை.*

*“போனேன். ஆனால், அவள் எங்கேயோ வெளியே போய்விட்டாளாம். பார்க்க முடியவில்லை. நேரமாகிவிட்டதே என்று திரும்பி விட்டேன்!” என்று சொல்லிவிட்டு, மீண்டும் தன் அறைக்கு வந்தாள் மணிமொழி. கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டாள்.*

*‘இன்னும் நான்கு பெட்டிகளையும் சேர்க்க வேண்டியவர்களிடம் சேர்த்துவிட்டால், ஒரு பெரிய தொல்லை விட்டது!’ என்று எண்ணிய மணிமொழி, அந்த நான்கு பெட்டிகளும் இருக்கின்றனவா என்று கட்டிலுக்கு அடியில் பார்த்தாள். எதுவுமே இல்லை! தூக்கிவாரிப் போட்டது*

*அறை முழுவதும் தேடினாள். பெட்டிகள் எங்கேயும் இல்லை. அவளுடைய இதயத் துடிப்பு மிகுந்தது. உடலெல்லாம் வியர்த்தது.*

*பரபரப்படைந்தவளாக, சமையலறைக்கு வந்து, “பாவை, என் அறைக்கு யாராவது வந்தார்களா?” என்று கேட்டாள் மணிமொழி.*

*“உங்கள் அறைக்கு யாரும் போகவில்லையே அக்கா! நீங்கள் போன பிறகு நான் ஒருத்திதானே இந்த வீட்டில் இருக்கிறேன்” என்றவள், சட்டென்று நினைவுக்கு வந்தவளாக,*

*“ஆமாம், மறந்து போனேனே! தங்கதுரை வந்தார். அவர் வந்துபோய் அரைமணி நேரத்திற்கு மேலாகிறதே! அவர் முத்தழகைத் தேடிக்கொண்டு வந்தார். முத்தழகு பந்தடிக்கப் போய் விட்டார் என்றேன். உடனே அவர் போய்விட்டார்!”*

*“தங்கதுரை காரிலா வந்தார்?”*

*“ஆமாம், காரில்தான் வந்தார்.”*

*“அவரை மறுபடியும் பார்க்கவே இல்லையா?” என்று கேட்டாள் மணிமொழி.*

*“இல்லை அக்கா, என் வேலைகளைக் கவனிக்க சமையற்கட்டுக்கு வந்துவிட்டேன். இந்த வீட்டில்தான் **24** மணி நேரமும் சமையல் கட்டிலேயே இருக்கவேண்டியிருக்கிறதே!” என்றாள் பாவை.*

*திரும்பத் தன் அறைக்கு வந்து, கட்டிலில் உட்கார்ந்த மணிமொழியின் மனம் எண்ணியது...*

*‘தங்கதுரை வந்தபோது பாவை சமையலறைக்குள் இருந்திருக்கிறாள். உள்ளே வந்த தங்கதுரை, பாவையைத் தவிர வீட்டில் வேறு எவரும் இல்லை என்பதை அறிந்துகொண்டு, இந்த அறைக்குள் புகுந்து, அந்த நான்கு*

*பெட்டிகளையும் எடுத்துச் சென்று விட்டிருக்கிறார். ஆமாம், தங்கதுரை தான் அந்த நான்கு பெட்டிகளையும் எடுத்துச் சென்றிருக்கிறார். அதில் ஐயமே இல்லை.'*

*மணிமொழி, மக்காக இருந்த நீ மகா புத்திசாலியாகிவிட்டாயே! அழகு மட்டுமே இருந்த உன்னிடம், இப்போது அறிவும் வந்துவிட்டதே! எப்படியோ பெண்ணே... அழகோடும் அறிவோடும் மட்டுமல்ல, ஆயுளோடும் நீ இருக்கவேண்டும்!*

## நினைப்பது நடந்தால், நீ பேறு பெற்றவள்!

மணிமொழி கட்டிலை விட்டு எழுந்து மீண்டும் ஒரு முறை அறையெல்லாம் தேடினாள். எல்லாப் பொருள்களும் இருந்தன. அந்த நான்கு பெட்டிகளை மட்டும் காணோம்!

மனம் தளர்ந்து கட்டிலில் உட்கார்ந்தாள் மணிமொழி. அவள் மனம் மீண்டும் எண்ணியது... 'நான் நினைத்தபடி தங்கதுரை எடுத்துச் சென்றிராமல், வேறு



எவராவது எடுத்துச் சென்றிருந்தால்? மாமனாருக்கும் மாமியாருக்கும் இது பற்றித் தெரியாது. பாவை நல்லவள். இளையவர் என் இதயத்திலிருப்பவர். சிவகாமி? சிவகாமி எடுத்துச் சென்றிருப்பாளா? தங்கதுரை எடுத்துச் சென்றிருக்க வேண்டும்; அல்லது சிவகாமி எடுத்துச் சென்றிருக்க வேண்டும். இந்த இருவரைத் தவிர வேறு எவரும் எடுத்திருக்க வாய்ப்பில்லை. இந்தப் பாவை ஒருத்தி, எப்போது பார்த்தாலும் சமையல் கட்டிலேயே அடைப்பட்டுக் கிடக்கிறாள்! வந்தது யார், போனது யார் என்று எங்கே பார்க்கிறாள்?

மணிமொழி தவித்துக்கொண்டு இருந்தபோது, மாமனாரும் மாமியாரும் வந்துவிட்ட அரவம் கேட்டது.

மணிமொழி, அறைக்கதவைத் திறந்துகொண்டு வெளியே கூடத்திற்கு வந்தாள். மாமியார், தன் தோளில் கிடந்த இளங்கோவை மணிமொழியிடம் கொடுத்துக் கொண்டே, "குழந்தை தூங்கிப் போய்விட்டான். கொண்டு போய் விசிறிக்கடியில் போட்டு வேர்வையைத் துடை. எழுந்ததும் பால் கொடு! இப்போது எழுப்பிப் பால் கொடுக்காதே!" என்றாள்.

"சரி அத்தை" என்று சொல்லி விட்டு இளங்கோவைத் தூக்கிக் கொண்டு தன் அறைக்குச் சென்று கதவைச் சாத்திக்கொண்டாள் மணிமொழி.

இரவு எந்நேரமானாலும் சரி, முத்தழகு வராமல் எவரும் அந்த வீட்டில் சாப்பிடுவதில்லை. முத்தழகுதான் முதலில் சாப்பிடவேண்டும். பிறகுதான் மற்றவர்கள் சாப்பிடுவார்கள். ஆனால் அன்று வெகுநேர மாகியும் முத்தழகு வரவில்லை.

கூடத்தில் மாமியார், மாமனாரைப் பார்த்து, "இன்னும் தம்பியைக் காணோமே! பாவைக்கு எப்போது வேண்டுமானாலும் சாப்பிட்டுப் பழக்கம் உண்டு. ஆனால், மணி மொழிக்கு இதெல்லாம் புதிதாக இருந்தாலும் இருக்கும்! அவளை முதலில் சாப்பிடச் சொல்லிவிடலாமே!" என்றாள்.

“நானும் அதைப் பற்றித்தான் நினைத்துக்கொண்டு இருந்தேன். அந்தப் பெண்ணைச் சாப்பிடச் சொல்லு. அவன் வரட்டும்; அப்புறம் நாம் சாப்பிடுவோம்” என்றார் மாமனார்.

“மணிமொழி, மணிமொழி” என்று ஓசையிட்டாள் மாமியார்.

“வருகிறேன் அத்தை” என்று சொல்லிக்கொண்டே கதவைத் திறந்துகொண்டு வந்து முன்னால் நின்ற மணிமொழியின் முகத்தைப் பார்த்ததும், “மணிமொழி, நீ அழுதாயா என்ன? உன் கண்களெல்லாம் சிவந்திருக்கின்றனவே?” என்று கேட்டாள் மாமியார்.

“இல்லை அத்தை” என்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள் மணிமொழி.

“உனக்கு அவன் நினைவு வந்து விட்டது; அதுதான் அழுகிறாய்! அரசுவை நினைத்தால் அழத்தான் தோன்றும். அரசு.... அரசு...” என்று சொல்லிக்கொண்டே மாமியாரும் அழத் தொடங்கி விட்டாள்.

தன் மகனை நினைத்து அழுத தாயைக் கண்டதும், தந்தையும் தாங்கமுடியாத துக்கத்தால் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

மணிமொழி! மனத்தைத் திறந்து உள்ளதைச் சொல்லிவிட்டு ஓடி விடம்மா! உன் துக்கம் வேறு; அவர்கள் துக்கம் வேறு! உன் அப்பாவை நினைத்து நீ அழும்போதெல்லாம், அரசுவை நினைத்து நீ அழுவதாக எண்ணி, அவர்கள் வேறு அழுகிறார்கள். ஆதரவு இல்லாத வீட்டில் கூட இருக்கலாம், அழுகிற வீட்டில் இருக்கக்கூடாதம்மா!

**வி**டிந்தது. முத்தழகு பத்திரிகையுடன் மாடியில் உட்கார்ந்திருந்தான்.

மாடியில் எப்போதும் முத்தழகு தனியாகத்தான் இருப்பது வழக்கம். காரணம், அவன் அப்பா, அம்மா இருவரும் வயதானவர்கள். அவர்களால் மாடிப்படிகளில் ஏற முடியாது. பாவை காபி மட்டும் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போய்விடுவாள். சாப்பிடக் கீழே போய்விடுவான் முத்தழகு. மற்றபடி முத்தழகு எப்போதும் மாடியில் தனியாகத்தான் இருப்பான்.

பத்திரிகையை ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்த முத்தழகு, மாடிப் படிகளில் எவரோ ஏறிவரும் ஓசை கேட்டுத் தன் பார்வையைத் திருப்பாமல் பத்திரிகையையே படித்துக் கொண்டிருந்தான்.

காரணம், பாவை காபி கொண்டு வருவாள் என்பது பழகிப்போன ஒன்று!

படிகளில் ஏறி மாடிக்கு வந்தவள், நாற்காலியில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்த முத்தழகிடம் காபிக் கோப்பையை நீட்டினாள். பத்திரிகையைப் படித்துக் கொண்டே, காபிக் கோப்பையை எடுத்து, அதிலிருந்த காபியைக் குடித்துவிட்டு காலி கோப்பையைத் தட்டில் வைத்துவிட்டு, ‘பாவை,

அண்ணியைப் பற்றி நான் சொன்னது நினைவில் இருக்கட்டும்'' என்றான். அப்போதும் அவன் பார்வை பத்திரிகையிலேயேதான் இருந்தது.



''நான் பாவை இல்லை!'' என்றாள் பக்கத்திலே நின்றுகொண்டு இருந்த மணிமொழி.

முத்தழகின் கையிலிருந்த பத்திரிகை கீழே விழுந்தது. அவன் நிமிர்ந்து பார்த்தான். எதிரே காலி கோப்பையுடன் நின்று கொண்டிருந்தாள் மணிமொழி.

திடுக்கிட்டு, பின்பு வியப்புற்று எழுந்த முத்தழகு, ''அண்ணி! நீங்களா?'' என்றான்.

''மன்னித்துக் கொள்ளுங்கள் அண்ணி, எப்பொழுதும் பாவை தான் காபி கொண்டு வருவாள். அவள்தானாக்கும் என்று நினைத்துச் சொல்லிவிட்டேன். பொறுத்துக் கொள்ள வேண்டும்'' என்றான்.

''நான் பொறுத்துக்கொள்ள வேண்டிய அளவுக்கு நீங்கள் பிழை ஏதும் செய்யவில்லையே!''

''நீங்கள் வந்தது தெரியாமல் உங்களைப் பாவை என்று நினைத்து விட்டேனே!''

''அதனாலென்ன? நான் வருகிறேன் என்று தெரிந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?''

''ஓடி வந்து மாடிப் படியிலேயே உங்களிடமிருந்து காபியை வாங்கிக் கொண்டு உங்களை அனுப்பியிருப்பேன்!''

''ஏன், நான் இந்த மாடிக்கு வரக்கூடாதா?''

''வரக் கூடாது என்பது இல்லை. தேவை இல்லாத தொல்லை தானே?''

''பெண்களுக்குரிய வேலையைச் செய்வது, பெண்களுக்கு என்றுமே தொல்லையாக இருக்காது!''

''அது சரி அண்ணி, பாவைக்கு என்ன வந்தது, உங்களிடம் காபியை அனுப்பிவிட்டு அவள் என்ன செய்கிறாள்?''

''அவள் அனுப்பவில்லை; நான் தான் வந்தேன்!''

''நீங்களே வந்தீர்களா?''

“ஆமாம்!”

“நான் உங்களுக்காக என்ன அண்ணி செய்யவேண்டும்? சொல்லுங்கள், எதுவானாலும் செய்யக் காத்திருக்கிறேன்.”

“நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளாவிட்டால் சொல்கிறேன்!”

“இதுவரை ஏதும் நீங்கள் தவறு செய்யவில்லை. இனிச் செய்யவும் மாட்டீர்கள். நானும் எதையும் தவறாக எடுத்துக்கொள்ளவும் மாட்டேன். எதுவானாலும் மனம் திறந்து சொல்லுங்கள்.”

“பத்திரிகை வந்தால் அதை என் கண்களுக்குப் படாமல் நீங்கள் எடுத்துக்கொண்டு வந்து விடுகிறீர்களே, ஏன்? நான் தினசரி பத்திரிகை படிக்கும் பழக்கம் உள்ளவள். தினப் பத்திரிகை படிக்காவிட்டால் எனக்கு எதுவுமே ஓடாது!” என்றாள் மணிமொழி.

“அதுவா அண்ணி, தினப் பத்திரிகையில் கணவனை இழந்த பெண்களைப் பற்றி அடிக்கடி செய்தி வருகிறது. அந்தச் செய்திகளை நீங்கள் படித்தால் உங்கள் மனம் புண்படுமே என்பதற்காகத்தான், பத்திரிகை உங்கள் கண்களில் படாமல் பார்த்துக் கொண்டிருக்கிறேன்” என்றான் முத்தழகு. இதைச் சொல்லும்போது அவனுக்குக் குரல் அடைத்தது.

ஆனால், மணிமொழிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால், வெளியே முகத்தை துக்கப்படுபவளைப்போல் உம்மென்று வைத்துக்கொண்டாள். சோகக் குரலில், “அதற்காகப் பத்திரிகை படிக்காமல் இருக்க முடியுமா?” என்றாள்.

“சரி அண்ணி, இனிமேல் நீங்கள் பத்திரிகை படித்த பிறகே நான் படிக்கிறேன். அடுத்தது?”

“என்னைப் பற்றிப் பாவையிடம் ஏதோ சொன்னதாகச் சொன்னீர்களே, அது என்ன?”

“அது...”

“சும்மா சொல்லுங்கள்?”

“வேண்டாம் அண்ணி!”

“சரி, வேண்டாம்! நீங்கள் எப்போது திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்?”

“அண்ணி, நீங்கள் துணிவுள்ளவர் என்பதை இந்தக் கேள்வியிலிருந்து நான் தெரிந்துகொண்டேன்!”

*“என் துணிவை உங்களிடம் காட்டுவதற்காக நான் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை! கேடு ஒன்றைத் தவிர்ப்பதற்காகவே கேட்கிறேன்.” “அப்படியா? நான் எப்போது திருமணம் செய்துகொள்ளப் போகிறேன் என்பது எனக்கே தெரியாது அண்ணி!”*

*“சரி, எப்போது என்பது போகட்டும், எவரை என்பதற்காவது பதில் சொல்ல முடியுமா?”*

*“பொறுத்துக் கொள்ளுங்கள் அண்ணி, எந்தப் பெண்ணையும் நான் இதுவரையில் என் மனதில் நினைத்ததே இல்லை!”*

*“நீங்களும் என்னைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். நான் இப்போது தான் வந்தவள் என்றாலும், பெண் ஒருத்தி இதைச் சொல்லக்கூடாது என்றாலும், உங்களுக்காக நான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது!”*

*“சொல்லுங்கள் அண்ணி!”*

*“சிவகாமியை நீங்கள் திருமணம் செய்துகொள்வதாயிருந்தால், தங்கதுரையோடு அவள் பழகுவதை நிறுத்தவேண்டும்!”*

*“அண்ணி, அவளை என் மனத்தில் நான் நினைத்துப் பார்த்தது கூட இல்லை. அவளை நான் திருமணம் செய்துகொள்வதென்பது என்றுமே நடக்கமுடியாத ஒன்று! அண்ணி, என்னை மணந்துகொள்ளப் போகிறவள் எங்கே இருக்கிறாளோ!” என்றான் முத்தழகு.*

*இதைக் கேட்டதும் மணிமொழி தன் இரு கண்களையும் மூடிக் கொண்டு மவுனமாக நின்றாள்.*

*மணிமொழி, உன் மனக் கதவைத் திறந்து பார்க்கிறாயா? உடலாலும் உள்ளத்தாலும் கற்புடையவளே! கணவன் உனக்கு யார் என்பதை எண்ணிப் பார்க்கிறாயா? நினைப்பது நடந்தால் நீ பேறு பெற்றவள்! ஆனால், நடக்காவிட்டால் நரகம்தான் உனக்கு!*

## மருதநம்பி தப்பி ஓடிவிட்டார்!

மறுநாள் காலை. மணிமொழி எழுந்தாள். கதவைத் திறந்தாள். அவள் காலடியிலே...

பத்திரிகை கிடந்தது!

எடுத்தாள்; படித்தாள்; முதற் பக்கத்தில் அவள் எதிர்பார்த்த செய்தி இல்லை. இரண்டாம் பக்கம் பார்த்தாள். இல்லை. மூன்றாம் பக்கமும் இல்லை. அவள் எதிர்பார்த்த செய்தி நாலாம் பக்கத்தில் இருந்தது.

கேசவதாஸ் கொலை வழக்கு!

பம்பாய் மலபார் ஹில்ஸில் கேசவதாஸ் என்பவர், அவரது பங்களாவில் சுடப்பட்டுக் கிடந்த செய்தி ஏற்கெனவே வந்த செய்தியாகும். இந்தக் கொலை வழக்குச் சம்பந்தமாக போலீசார் துலக்கிய துப்பில், வாடகைக் காரோட்டி ஒருவரும், மருதநம்பி என்ற வயதான ஒருவரும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். மருதநம்பி நேற்றிரவு தப்பி ஓடிவிட்டார். தலைமறைவாக இருக்கும் அவரைப் போலீசார் இரவு பகலாகத் தேடி வருகிறார்கள். காரோட்டி காவலிலேயே இருக்கிறான். மருதநம்பி கிடைத்தால்தான், மர்மம் விளங்கும் என்று போலீசாரால் கருதப்படுகிறது. ‘எப்படியும் மருதநம்பியைப் பிடித்து விடுவோம்’ என்று போலீசார் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர்.

இந்தச் செய்தியைப் படித்ததும் மணிமொழிக்குக் கண்களை இருட்டிக்கொண்டு வந்தது. கதவைத் தாழிட்டுவிட்டுக் கட்டிலில் படுத்துக் குமுறிக் குமுறி அழுதாள்.

மருதநம்பி எப்படிக் கைது செய்யப்பட்டார்? கேசவதாஸ் சுடப்பட்டுக் கிடந்ததைப் பார்த்தவள் மணிமொழி. அதை வந்து அப்பாவிடம் சொன்னவள் அவள்தான். அந்தச் செய்தியைச் சொல்லும்போது அவர் வீட்டில்தான் இருந்தார். அப்படி இருக்கும்போது அவர் எப்படிக் கேசவதாஸைச் சுட்டுக் கொன்றிருக்க முடியும்?

ஒருவேளை, மணிமொழி வீட்டை விட்டுப் புறப்பட்டதும், அவரும் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் போய் கேசவதாஸைச் சுட்டுக்கொன்றுவிட்டு, மணிமொழிக்கு முன்னால் வீடு திரும்பி விட்டாரா?

மருதநம்பி ஒரு நாளும் இந்தச் செயலைச் செய்திருக்க முடியாது! அப்படியானால் மருதநம்பி காவலிலேயே இருக்கலாமே? ஏன் தப்பி ஓடுகிறார்?

மணிமொழி, துக்கத்தை அடக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். தன்னைச் சரிப்படுத்திக்கொண்டு கதவைத் திறந்து வெளியே வந்தாள். பத்திரிகை அவள் போட்ட இடத்தில் அப்படியே கிடந்தது.

*மணிமொழி. நேராகச் சமையல் அறைக்குச் சென்றாள். அங்கே பாவை இல்லை. கூடத்திற்கு வந்தாள். அங்கே மாமியார் இல்லை. வெளியே வந்தாள். அங்கே மாமனார் இல்லை. மாடிக்குப் போனாள். அங்கே முத்தழகு இல்லை. எல்லோரும் எங்கே?*

*மணிமொழி, மாடியை விட்டுக் கீழே இறங்கி வந்ததும் எதிரே இருந்த அறை, மாமனாரின் அறை. அங்கே எல்லோரும் இருந்தார்கள்! மாமனார் படுக்கையில் பேச்சு மூச்சு இல்லாமல் விறைத்தபடி கிடந்தார். அவர்...*

***ம**ணிமொழியின் மாமனார்தான், தன் நினைவை இழந்து மயக்கமடைந்து படுக்கையில் கிடந்தார்.*

*மணிமொழி அவர் அருகில் சென்று பார்த்தாள். டாக்டர் எழுந்து நின்று, மணிமொழியின் மாமியாரிடம், "ரத்தக் கொதிப்பு! நல்ல ஓய்வு வேண்டும். நல்ல உணவு வேண்டும். அவர் மனம் மகிழ்ச்சியோடு இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். நான் போய் மருந்து அனுப்புகிறேன்" என்றார். மாமியார் அழுதுகொண்டே தலையை அசைத்தார்.*

*டாக்டர் புறப்பட்டார். முத்தழகு டாக்டரின் பையைக் கையில் எடுத்துக்கொண்டு பின்னால் சென்றான். வெளியே கார் புறப்படும் ஓசை கேட்டது.*

*மணிமொழி மெல்ல நடந்து, வெளியே தோட்டத்திற்கு வந்து, மரத்தடியில் புல் தரையில் உட்கார்ந்து, அண்ணாந்து பார்த்தாள்.*

*ஒரு பறவை வானத்தில் வட்டமிட்டுக்கொண்டு இருந்தது. மணிமொழியைப் போல அதற்கும் எங்கே போவது, என்ன செய்வது என்று தெரிய வில்லையா?*

*பறவை, வானத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டதைப் போல, மணிமொழியின் மனமும் இரண்டு பேரைச் சுற்றி வட்டமிட்டது. அவர்கள்...*

*அப்பா; முத்தழகு.*

*'அப்பாவைப் பிரிந்து வந்தது போல முத்தழகையும் பிரிந்து நாம் எங்காவது சென்று விடுவதுதான் நல்லது. அவர் அண்ணி, அண்ணி என்றழைக்கும்போதெல்லாம் இதயமே பிளந்து விடுவதுபோல இருக்கிறது. ஒரு நாளைக்கு உண்மை தெரிந்த பிறகு, நாம் எப்படி மற்றவர்கள் முகத்தில் விழிப்பது? எந்தக் காலத்திலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் இந்த வீட்டில் தங்கியிருக்க முடியாது. இன்றைக்கே இந்த வீட்டை விட்டுப் போய்விட்டால் என்ன? இன்றைக்கேவா? மாமனார் மனம் மறந்து கிடக்கிற இந்த நேரத்தில் நாம் வெளியேறலாமா?'*

*– இப்படிக் கண்டதையெல்லாம் நினைத்து மணிமொழியின் மனம் கலங்கி நின்றது.*

*வெயில் மெல்ல மெல்ல ஏறிக் கொண்டிருந்தது. மணிமொழி எழுந்து குளிக்கச் சென்றாள்.*

*மணிமொழி, உடலைக் கழுவத் தண்ணீர் இருக்கிறது. உள்ளத்தைக் கழுவக் கண்ணீர் இருக்கிறது. அப்பாவை நினைக்கும்போதெல்லாம் அழும் நீ, முத்தழகை நினைக்கும்போதெல்லாம் ஆனந்தப்படுகிறாயே! நீ எங்கே சென்றாலும், எங்கே ஓடி ஒளிந்து கொண்டாலும், உன் அப்பாவும் முத்தழகும் உன் மனத்தை விட்டுப் போக மாட்டார்கள்!*

## சொல்லிவிட்டு ஓடிவிடலாம்!

ஒரு வாரத்திற்குப் பிறகு, ஒரு நாள்... இருட்டிவிட்ட வேளை. மாமனாரையும் மணிமொழியையும் தவிர, வேறு எவரும் வீட்டில் இல்லை. மாமனார் நலம் பெறுவதற்காகக் கோயிலுக்குப் போய் வழிபாடு செய்யக் குழந்தை இளங்கோவோடு போய்விட்டார் மாமியார். துணைக்குப் பாவையும் போயிருந்தாள். முத்தழகு மருந்து வாங்கக் கடைக்குப் போயிருந்தான். தோட்டக்காரன் வீட்டிற்குப் போய்விட்டான்.

'மாமனார் அவர் அறையில் படுத்துக்கொண்டு இருக்கிறார். அவருக்கும் உடல் நன்றாகக் குணம் பெற்றுவிட்டது. அவர் மட்டும் தனியாக இருக்கும் இந்த நேரத்தில், அவரிடம் சொல்லிவிட்டு எல்லாரும் வருவதற்குள் வீட்டை விட்டு வெளியேறிவிட்டால் என்ன? நல்லதொரு வாய்ப்பு இது!' என்று மணிமொழியின் மனம் திடீரென முடிவு செய்தது.

படுத்துக் கிடந்த மணிமொழி உடனே எழுந்து சேலையைச் சரிப்படுத்திக்கொண்டு கூடத்திற்கு வந்தாள்.

இருட்டு! சமையலறைக்குப் போனாள். இருட்டு! மாமனார் படுத்துக் கிடந்த அறைக்குப் போனாள். இருட்டு!

ஐயம் கொண்ட மணிமொழி, தனக்குப் பக்கத்தில் சுவரில் இருந்த சுவிட்சைப் போட்டுப் பார்த்தாள். விளக்கு எரியவில்லை.

'மின்சாரமே இல்லை, அதனால்தான் வீடு முழுவதும் இருண்டு கிடக்கிறது! மின்சாரம் பழுதுபட்டிருக்கும். கொஞ்ச நேரமானால் மின்சாரம் வந்துவிடும்' என்று தன்னைத் தேற்றிக் கொண்டே மணிமொழி, மாமனார் படுத்துக் கிடந்த அறைக் கதவை இன்னும் கொஞ்சம் நன்றாகத் திறந்து பார்த்தாள்.

மாமனார், அந்தப் பக்கம் சன்னலைப் பார்த்தபடி படுத்துக் கிடப்பது, சன்னல் வழியாக வந்த நிலவின் மங்கிய வெளிச்சத்தில் தெரிந்தது.

மாமனார் சும்மா படுத்துக் கிடக்கிறாரா, தூங்கிக் கொண்டு இருக்கிறாரா, தெரியவில்லை!

'மாமனாருக்குப் பக்கத்தில் போய்ப் பார்த்து, மாமா என்று அழைப்போமே' என்று எண்ணிய மணிமொழி, ஒரு காலை எடுத்து முன்னால் வைத்தாள். அப்போது, டங் என்று அடுத்த அறையில் ஓசை கேட்டது!

மணிமொழி அப்படியே நின்று விட்டாள்!

எப்போதும் பூட்டிக் கிடக்கும் அடுத்த அறையில் ஓசையா?

எப்படி வரும்?

அடுத்த அறை, மாமனாரின் அறை. அந்த அறையில்தான் பெட்டகம் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் குடும்பத்தின் பல சொத்துக்கள் அந்த அறையில் இருக்கின்றன. அந்த அறையில் ஓசையா? வீட்டில் வெளிச்சம் இல்லாத இந்த நேரத்தில் - மணிமொழி பரபரப்புடன் அடுத்த அறைக்கு ஓடினாள்.

எப்பொழுதும் பூட்டிக் கிடக்கும் அந்த அறையின் கதவிலே பூட்டைக் காணோம். ஒரு கதவு கொஞ்சம் திறந்திருந்தது!

மணிமொழி மனம் படபடக்க அந்தக் கதவைக் கொஞ்சம் திறந்து பார்த்தாள்.

இருட்டு!

மணிமொழி, சுவரில் தடவிச் சுவிட்சு இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து சுவிட்சைப் போட்டாள். விளக்கு எரியவில்லை!



மணிமொழி திரும்பினாள். தன் அறைக்கு ஓடிப்போய் பாட் டரி லைட்டை எடுத்துக்கொண்டு வந்தாள். அவளுக்குப் பெருமூச்சு வாங்கியது. முகமெல்லாம் வியர்த்துவிட்டது!

அவள் அந்த அறைக்கதவைத் திறந்து பாட்டரி லைட்டை நேராகப் பிடித்துக்கொண்டு, சுவிட்சை அழுத்தப் போனாள். அப்போது... அவளுக்கருகில் அவளுக்குத் தெரியாமல் கதவோரத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவன், பளிச்சென்று அவள் கையிலிருந்த பாட்டரி லைட்டைப் பறித்துக் கொண்டு, அவளை பிடித்து உள்ளே தள்ளினான். அடுத்த விநாடி கதவைச் சாத்திவிட்டு வெளியே ஓடிவிட்டான்!

கீழே தரையில் விழுந்த மணி மொழிக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு எழுந்து வெளியே ஓடி வந்தாள்.

வெளியே நல்ல வெளிச்சம் இருந்தது. வெளி விளக்குகளெல்லாம் நன்றாக எரிந்துகொண்டு இருந்தன. வீட்டிலுள்ள விளக்குகள் மட்டும் எரியாததற்குக் காரணம் என்ன? மணிமொழிக்கு விளங்கிவிட்டது!

மணிமொழி, தெருவில் இறங்கி விரைந்து நடந்தாள். தெரு முலைக்கு வந்ததும், அங்கே நின்றுகொண்டிருந்த ஒரு வாடகைக் காரில் ஏறிக் கொண்டாள். கார் பறந்தது!

மணிமொழி, தன்னந்தனியாகப் போகிறாயே! பாதுகாப்பிற்கு கையில் ஒரு துப்பாக்கிகூட இல்லாமல் போகிறாயே, அம்மா! நீ போகுமிடம் துணையோடோ, அல்லது துப்பாக்கியோடோ போகவேண்டிய இடமாயிற்றே!

## அந்தப் பையில் என்ன இருக்கிறது?

மணிமொழி சென்றுகொண்டு இருந்த வாடகைக் கார், சாந்தோம் கடற்கரை ஓரமாக ஓரிடத்தில் நின்றது.

"அதோ பார், அந்த நான்காவது வீடுதான்! அங்கே கொண்டு காரை நிறுத்து!" என்றாள் மணி மொழி.

"எந்த வீடம்மா?"

"அதோ ஒரு கார் நிற்கிறதே, அந்த வீடுதான்! அந்தக் காரைத்தானே நாம் பின்பற்றி வந்து கொண்டிருக்கிறோம்! நாம் புறப்பட்ட நுங்கம்பாக்கத்திலிருந்து தான் அந்தக் காரும் புறப்பட்டது. அதை எப்படியும் பிடித்து விட வேண்டும் என்று நினைத்தேன். பிடித்துவிட்டேன்! போ, அந்தக் காருக்குப் பின்னால் போய் நம் காரை நிறுத்து!" என்றாள் மணிமொழி.

கார் புறப்பட்டது. காரோட்டி அந்தக் காருக்குப் பின்னால் போய்க் காரை நிறுத்தினான்.

கார் நின்றதும், மணிமொழி கீழே இறங்கி, "கொஞ்சம் இரு, இதோ வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தலையில் கிடந்த சேலையைச் சரிப்படுத்திக் கொண்டு, அந்த வீட்டு வாயிற்படிகளில் ஏறிக் கதவைத் தட்டினாள்.

கதவு திறந்தது. திறந்தவள் ஒரு கிழவி. இருட்டில், தனக்கு எதிரே நிற்பது ஒரு பெண் என்பது மட்டுமே அந்தக் கிழவிக்குத் தெரிந்தது.

"ஐயா இருக்கிறார்களா?" என்று கிழவியைப் பார்த்துக் கேட்டாள் மணிமொழி.

"மேலே மாடியில் இருக்கிறார்!"

"உங்களைப் பார்க்க உங்களுடன் படித்த தோழி ஒருத்தி வந்திருக்கிறாள் என்று போய் ஐயாவிடம் சொல்லுங்கள். வாடகைக் கார் காத்திருக்கிறது. நான் ஐயாவைப் பார்த்துவிட்டு உடனே போக வேண்டும்."

"என்னடி பெண்ணே, நீ என்னைப் போய் மாடியில் ஏறச் சொல்லுகிறாயே? இந்த வயதிலே என்னாலே மாடி ஏற முடியுமா? மேலே ஐயா மட்டும்தான் இருக்கிறார். நீயே போய்ப் பார்!"

"வழி..?"

"அதோ, அடுத்த கட்டில் இருக்கிறது."

“சரி” என்று சொல்லிவிட்டு மணிமொழி உள்ளே போனாள். மணிமொழி உள்ளே போனதும், கிழவி கதவைச் சாத்தித் தாழிட்டாள்.

மணிமொழி மாடிப் படிகளில் ஏறி மேலே வந்து பார்த்தபோது, அவன், இருட்டில் திறந்த வெளியில் கடலைப் பார்த்து நின்று கொண்டிருந்தான்.

மணிமொழியும் கொஞ்ச நேரத்திற்கு இருளிலேயே நின்று கொண்டு கடலையே பார்த்துக் கொண்டிருக்கும் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். நிலவு நேரமாதலால் வெளிச்சம் இருந்தது.

மௌனமாக நின்றுகொண்டு இருந்த மணிமொழி, ஒரு முடிவுக்கு வந்து, சுவரிலிருந்த சுவிட்சைப் போட்டாள். எங்கும் வெளிச்சம்!

விளக்கைப் போட்டதும் பளிச்சென்று அவன் தன் பையிலிருந்த துப்பாக்கியை எடுத்து நீட்டிப் பிடித்துக்கொண்டு திரும்பிப் பார்த்தான்.

மணிமொழி சோகத்தோடு நின்றுகொண்டிருந்தாள், பதுமை மாதிரி.

“மணிமொழி, நீயா?” என்று கேட்டுக்கொண்டே துப்பாக்கியைப் பைக்குள் போட்டுக் கொண்டு, மணிமொழிக்கு அருகில் வந்தான் அவன்.

“ஆமாம், தங்கதுரை! உங்கள் சகோதரி மணிமொழிதான் வந்திருக்கிறேன்!”

“மணிமொழி, உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லு,

எதுவானாலும் செய்கிறேன்” என்றான் தங்கதுரை. “அப்படியானால், என் மாமனாரின் பெட்டகத்திலிருந்து நீங்கள் எடுத்துக்கொண்டு வந்தீர்களே தோல்பை, அதைத் தாருங்கள்” என்றாள் மணிமொழி.

“மணிமொழி!” என்று கத்தினான் தங்கதுரை.

“நான் பையை எடுத்துக் கொண்டு வந்தது உனக்கு எப்படித் தெரியும்?”

“தங்கதுரை, நீங்கள் நினைப்பது போல அவ்வளவு அசடு அல்ல நான்!”

“உனக்கு எப்படித் தெரியும் நான்தான் பையை எடுத்துக் கொண்டு வந்தேன் என்று? சொல் மணிமொழி?”

“வீட்டில் நானும் மாமனாரும் மட்டுமே இருக்கும் வேளை பார்த்து நீங்கள் வந்து, கரண்ட் டைக் கட் செய்துவிட்டு, மாமா வின் பெட்டகத்தை உடைத்துப் பையை எடுத்துக்கொண்டு என்னை தள்ளிவிட்டு ஓடினீர் கள்! இருட்டாக இருந்ததால் அதுவரை நீங்கள் யார் என்பது எனக்குத் தெரியாது. வெளியே ஓடி வந்து பார்த்தேன். அப்போது தெரு ஓரத்தில் மரத்தடியில் இருளில் நின்றுகொண்டிருந்த காரில் நீங்கள் ஏறினீர்கள். கார் கதவை நீங்கள் திறந்த போது, காருக்குள் விளக்கு எரிந்தது. அந்த வெளிச்சத்தில் உங்களையும் உங்கள்

கையிலிருந்த பையையும் நான் நன்றாகப் பார்த்துவிட்டேன்.'' என்றாள் மணிமொழி.

''மணிமொழி, நீ கெட்டிக்காரி!'' என்றான் தங்கதுரை.

''இல்லை தங்கதுரை, நான் கெட்டிக்காரியாக இருந்திருந்தால் என் அப்பாவைத் தவிக்க விட்டுச் சென்னைக்குத் தனியாக வந்திருக்க மாட்டேன்!''

''தவறு மணிமொழி, தவறு! பம்பாயில் உன் அப்பாவோடு இருந்திருந்தால் நீ கைது செய்யப்பட்டிருப்பாய். இங்கு வந்ததால் தான் தப்பித்திருக்கிறாய்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி நடந்து சென்று, முன்பு நின்ற இடத்திலேயே போய் நின்றுகொண்டு மௌனமாக கடலைப் பார்த்துக் கொண்டிருந்தான் தங்கதுரை.



மணிமொழியும் மெல்ல நடந்து அவனுக்கருகில் போய் நின்று, ''கொடுங்கள் பையை! வாடகைக் கார் காத்துக்கொண்டு இருக்கிறது. நான் போக வேண்டும்'' என்றாள்.

''அந்தப் பையைத் தர முடியாது, மணிமொழி!''

''அந்தப் பை இல்லாமல் நான் இந்த வீட்டை விட்டுப் போக மாட்டேன்!'' என்றாள் மணி மொழி.

''அந்தப் பையில் என்ன இருக்கிறது என்பது உனக்குத் தெரியுமா? அத்தனையும் வைர நகைகள்! லட்சத்திற்கு மேல் பெறுமானமுள்ள இந்த நகைகளைக் கொண்டு வருவதற்காக நான் எத்தனை நாள் திட்டமிட்டேன், தெரியுமா? ஆமாம், இந்தப் பையை வாங்கிக்கொண்டு செல்வதில் உனக்கு ஏன் இவ்வளவு அக்கறை?''

''சில நாட்களாக நான் அவர்களுடைய சோற்றைத்தானே தின்று வருகிறேன்?''

''நன்றியுணர்ச்சியா?''

''பெண்களுக்கு வேண்டியது கற்புக்கு அடுத்தபடியாக அது தானே?''

''ஒப்புக்கொள்கிறேன். நன்றியோடு நடந்துகொள்ள வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகத் தான் இந்தப் பையை நீ கேட்கிறாயா?''

''கொஞ்சம் சுயநலமும் உண்டு!''

''உனக்கா மணிமொழி? உனக்கா சுயநலம்?''

''ஆமாம் தங்கதுரை! எனக்கும் சுயநலம் உண்டு. சுயநலமற்றவர்கள் இங்கே யார் இருக்கிறார்கள்?''

*"சரி, உன் சுயநலமென்ன இதிலே?"*

*"சொல்லத்தான் வேண்டுமா தங்கதுரை?"*

*"சொல்லவேண்டிய நிலைக்கு நீ வந்துவிட்டாய் மணிமொழி!"*

*"உண்மைதான் தங்கதுரை, நீங்கள் சொல்வது உண்மைதான். என் சுயநலத்தை நான் உங்களிடம் சொல்லவேண்டிய நிலைக்கு வந்துவிட்டது உண்மைதான்! கேட்டுக்கொள்ளுங்கள் என் சுயநலத்தை. நகைப் பையைக் காணோம் என்றதும் என்னைத் தான் எல்லாரும் சந்தேகப்படுவார்கள். அப்புறம், அவர்கள் பார்வையில் நான் திருடியாகி விடுவேன்! திருடி என்ற பெயரோடு என்னால் வாழ முடியாது தங்கதுரை!" என்று சொல்லி விட்டு மணிமொழி அழுதாள்.*

*தங்கதுரை நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான். மழை வரும் போலிருந்தது.*

*தங்கதுரை திரும்பி மணி மொழியைப் பார்த்து, "மணி மொழி, நீ என்ன உதவிகள் கேட்டாலும் செய்கிறேன், பையை மட்டும் கேட்காதே!" என்றான்.*

*"தர முடியாதா?" என்று கேட்டு, குரலைக் கடுமையாக்கிக் கொண்டாள் மணிமொழி.*

*"தரமுடியாது!" என்றான் தங்கதுரை. "தருவதால் எனக்கு எந்த நன்மையும் இல்லை!"*

*"எனக்கு நன்மை உண்டு!"*

*"உன் நன்மையைப் பற்றி எனக்குக் கவலை இல்லை!"*

*"ஆனால், உங்கள் நன்மையைப் பற்றி உங்களுக்குக் கவலை உண்டல்லவா?"*

*"உண்டு."*

*"அப்படியானால் தந்துவிடுங்கள்."*

*"தராவிட்டால்..?"*

*"பையை நீங்கள் தராவிட்டால் பம்பாயிலிருக்கும் உங்கள் முதலாளிக்கு எழுதுவேன். முதலாளிக்குத் தெரிந்தால் நீங்கள் சுடப்படுவீர்கள்!"*

*"மணிமொழி...!"*

*"சொல்லுங்கள்?"*

*"நீ நிறையத் தெரிந்து வைத்திருக்கிறாய் மணிமொழி!"*

''இல்லாவிட்டால் உங்களைப் பின்தொடர்ந்து துணிந்து இங்கே வந்திருக்க மாட்டேன்!''

''சரி, ஒன்று செய்வோம். பையிலிருக்கும் வைர நகைகளை நாம் இருவருமாக எடுத்துக் கொண்டு எங்காவது ஓடிவிடுவோம்.''

''இதற்கு நான் சம்மதிக்காவிட்டால்?''

''சம்மதிக்காவிட்டால்...?'' என்று வாயில் விரலை வைத்துக் கடித்தபடியே திறந்தவெளிக்குப் போனான். மழை கொட்டியது.

மழையில் நனைந்துகொண்டே அங்குமிங்கும் உலாவினான்.

மணிமொழி தங்கதுரையிடம் வந்து நின்று, ''பூனையாக நிற்கும் என்னைப் புலியாக மாற்றாதீர்கள் தங்கதுரை!'' என்றாள்.

''உண்மைதான் மணிமொழி, உண்மைதான்! வா, பையைத் தருகிறேன்!'' என்று கையை நீட்டினான், அவள் அவன் கையைப் பிடித்துக்கொள்ள.

''நீங்கள் முன்னால் போங்கள், பின்னால் நான் வருகிறேன்'' என்றாள் மணிமொழி.

தங்கதுரை ஏமாந்தான். ''சரி'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தான் தங்கதுரை. பின்னாலேயே மணிமொழி நடந்தாள்.

மாடிப்படிகளில் இறங்கிக் கொண்டிருந்த தங்கதுரை திடீரென்று நின்று திரும்பி, ''இந்தப் பையைத் திருப்பிக் கொண்டு போய் இருந்த இடத்திலேயே வைத்துவிட்டால், நல்லவளாகி விடலாம் என்று நினைக்கிறாயா மணிமொழி?'' என்று கேட்டான்.

''பலனைப் பற்றிக் கவலை இல்லை எனக்கு. என்னுடைய செஞ்சோற்றுக் கடன் இது. இதை நான் செய்தாக வேண்டும்!'' என்றாள் மணிமொழி.

தங்கதுரை திரும்பிப் படிகளில் இறங்கினான். பின்னாலேயே மணிமொழியும் இறங்கினாள்.

திடீரென்று மீண்டும் தங்கதுரை திரும்பி நின்று, ''மணிமொழி, ஒன்று கேட்பேன், பதில் சொல்வாயா?'' என்று கேட்டான்.

''சொல்லக்கூடியதாக இருந்தால் சொல்கிறேன்'' என்றாள் மணிமொழி.

''என் முதலாளியைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?''

''உங்கள் முதலாளி யார், அவர் எங்கிருக்கிறார், என்ன செய்கிறார் என்பது எல்லாமே எனக்குத் தெரியும். அவர் செய்யும் செயலில் ஒரு பெரும் திருக் கூட்டமே பங்கு கொண்டிருக்கிறது! அந்தக் கூட்டத்தில் நீங்களும் ஒருவர்.''

மீண்டும் இருவரும் இறங்கினார்கள். கடைசிப் படியில் கிழவி நின்றுகொண்டிருந்தாள்.

தங்கதுரை அவளைப் பார்த்து, "ஆயா, இந்த அறைச் சாவியை எடுத்து வா!" என்று பக்கத்தில் படியோரத்திலிருந்த அறையைச் சுட்டிக்காட்டினான். கிழவி உள்ளே போய்ச் சாவியை எடுத்து வந்து கொடுத்தாள்.

"வெளிக்கதவு தாழிட்டிருக் கிறதல்லவா?"

"போட்டிருக்கிறது, ஆனால் சும்மா யாரோ கதவைக் தட்டிக் கொண்டே இருக்கிறார்கள்!" என்றாள் கிழவி.

"என்னது..? கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறார்களா?" என்று பதறிக் கேட்டான் தங்கதுரை.

"பதற வேண்டாம் தங்கதுரை, வாடகைக் காரோட்டிதான் கதவைத் தட்டிக் கொண்டிருப்பான். நான் வந்து நேரமாயிற்று. மழை வேறு கொட்டுகிறது, அதனால்தான் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறான்!" என்றாள் மணிமொழி.

"இருந்தாலும், இந்த அறையைத் திறப்பதற்கு முன்னால், கதவைத் தட்டுவது யார் என்பதை நான் தெரிந்துகொள்ள வேண்டும்!" என்றான் தங்கதுரை.

பின்பு, விறுவிறுவென்று நடந்து போய் தாழைத் தள்ளிக் கதவைத் திறந்தான். வெளியே –

மழை... காற்று... வேறு எவரும் இல்லை!

மழை சோவென்று பெய்தது! பெருமழை!

சாரல் அடித்ததால் தங்கதுரை கதவைச் சாத்திவிட்டுத் திரும்பி னான். அப்போது எவரோ படபடவென்று கதவைத் தட்டினார்கள்.

தங்கதுரை, பளிச்சென்று திரும்பி கால் சட்டைப் பையில் இருந்த துப்பாக்கியை எடுத்து இடக்கையில் பிடித்துக்கொண்டு, வலது கையால் கதவின் தாழைத் தள்ளினான். கதவைத் திறந்தான். வெளியே மழை... காற்று... எவரும் இல்லை.

வெளியிலிருந்து தூற்றலுடன் அடித்த சாரலால் தங்கதுரையின் உடை முழுவதும் நனைந்து விட்டது. கனத்த மழை அடித்ததால் தங்கதுரை கதவைச் சாத்தித் தாழிட்டுவிட்டுத் திரும்பினான். அப்போது எவரோ படபடவென்று கதவைத் தட்டினார்கள்.

கதவைத் தட்டிய ஓசையைக் கேட்டதும் கொஞ்ச நேரம் நின்று சிந்தித்த தங்கதுரை, திரும்பாமல் நேராக மணிமொழி நிற்கும் இடத்திற்கு வந்தான்.

"யாரது கதவை தட்டியது?" என்று கேட்டாள் மணிமொழி.

“எவரும் இல்லை” என்று சொல்லிவிட்டு, அந்த அறைப் பூட்டைத் திறந்து கதவைத் தள்ளினான். பின்பு, கிழவியைப் பார்த்து, “ஆயா, நீ போய் அந்த வெளிக் கதவுக்கருகில் நில். எவர் கதவைத் தட்டினாலும் திறக்காதே!” என்றான்.

“ஆகட்டும்” என்று சொல்லி விட்டுக் கிழவி போய்விட்டாள்.

பின்பு தங்கதுரை அறைக்குள் புகுந்துகொண்டு, “வா, மணிமொழி” என்று கூப்பிட்டான்.



“இல்லை, நான் இங்கேயே இருக்கிறேன். நீங்கள் எடுத்துக் கொண்டு வாருங்கள்” என்று அறைக்கதவைப் பிடித்துக் கொண்டு, வெளியிலேயே நின்றாள் மணிமொழி.

“சரி” என்ற தங்கதுரை அறை விளக்கைப் போட்டான்.

அறையில் ஒரு பெட்டகமும், இரண்டு பெரிய பீரோக்களும் இருந்தன.

தங்கதுரை பெட்டகத்தைத் திறந்து, பையை வெளியே எடுத்தான். அந்தப் பைதான்... அதே பைதான்!

“இந்தா மணிமொழி, வந்து பையை எடுத்துக்கொள். பைக்குள் நகைகளெல்லாம் பத்திரமாக இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்” என்றான்.

மணிமொழி அறைக்குள் நுழைந்து பையை எடுத்துத் திறந்து, நகைகளெல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்தாள். அப்போது தங்கதுரை திடீரென்று எழுந்து வெளியே ஓடிப்போய் கதவைச் சாத்திப் பூட்டிவிட்டான். பூட்டிய அறைக் கதவின் சாவியைத் தன் பைக்குள் போட்டுக்கொண்டு, கதவோரத்தில் நின்றுகொண்டிருந்த கிழவியிடம் போய், “ஆயா! வீட்டைப் பார்த்துக்கொள். நான் வெளியே போகிறேன். கதவைத் தாளிட்டுக்கொள். நான் வரும்வரைக்கும் கதவைத் திறக்காதே. எவர் தட்டினாலும் திறக்காதே!” என்று சொல்லிவிட்டுக் கதவைத் திறந்து கொண்டு, கொட்டும் மழையில் வெளியே ஓடினான்.

கிழவி கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டாள்.

அம்மா, பெரியவளே! கிழவித் தாயே! வயதாகிவிட்டால் எலலாரும் காசி எங்கே என்று தேடிப் போய்ப் புண்ணியத்தைத் தேடிக் கொள்வார்கள். நீ காசு எங்கே என்று தொலைக்க முடியாத பாவங்களைச் செய்து கொண்டிருக்கிறாயே, தாயே! உனக்கென்று யாருமே இல்லாத இந்த உலகத்தில் காசு கர்மாந்தரங்களெல்லாம் உனக்கு எதற்கு?

# கதவைத் திறந்தது யார்?

அறைக்குள் அகப்பட்டுக் கொண்ட மணிமொழி படபட வென்று கதவைத் தட்டினாள்.

'இந்த நேரத்திற்கு, குழந்தை இளங்கோவோடு கோயிலுக்குப் போயிருந்த மாமியார் திரும்ப வந்திருப்பார். இந்த இருண்ட வேளையில் நான் வீட்டில் இல்லாமல் இருப்பதைப் பற்றி என்ன நினைப்பார்? மாமியார் கூடத் துணைக்குப் போயிருந்த பாவை, வீட்டிற்குத் திரும்ப வந்ததும் என்னைத் தேடுவாளே! மருந்து வாங்கப் போயிருக்கும் இளையவர் திரும்பி வந்து, அறை திறந்து கிடப்பதையும் நகைப்பை காணாமல் போனதையும் பார்த்திருப்பார்! நானும் அந்த வீட்டில் இல்லை என்பது தெரிந்ததும், நான்தான் நகைகளை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டேன் என்ற முடிவுக்கு வந்துவிடுவாரே! நம்முடைய திட்டம் நிறைவேறாமல் போய், கள்ளி என்ற பட்டம் கிடைத்துவிட்டால் என்ன செய்வது?' என்று மணிமொழி மிகக் கவலை கொண்டாள்.

படபடவென்று கதவைத் தட்டினாள் மணிமொழி. திடீரென்று கதவு திறந்தது.

தூக்கிவாரிப் போட்டது மணி மொழிக்கு! கதவு திறந்து கொள்ளும் என்று அவள் நினைக்கவே இல்லை. கடமைக்காகக் கதவைத் தட்டிக்கொண்டிருந்த மணி மொழி, கதவு திறந்ததும் திடுக்கிட்டாள்.

கதவை நன்றாகத் திறந்து கொண்டு, வெளியே வந்து பார்த்தாள்.

எவரும் இல்லை!

கதவைத் திறந்தது யார்?

தெரியவில்லை!

மணிமொழி, கையில் நகைப்பையுடன் மெல்லக் கால்களை எடுத்து வைத்து வாயிற்கதவுக்கு அருகில் வந்தாள். வாயிற் கதவு திறந்து கிடந்தது.

சுற்றுமுற்றும் பார்த்தாள். எவரும் இல்லை!

மணிமொழி தப்பி வெளியே செல்லவேண்டும் என்பதற்காகவே யாரோ செய்த மாதிரியல்லவா இருக்கிறது! கிழவி எங்கே?

மணிமொழி வெளியே தலையை நீட்டித் தெருவைப் பார்த்தாள். மழை கொட்டு கொட்டென்று கொட்டியது! தெருவில் எவருமே இல்லை! அவள் வந்த வாடகைக் கார்..?

அதுவும் இல்லை!

*‘வாடகைக் கார்க்காரன், வாடகைப் பணத்தைக்கூட வாங்காமல் போய்விட்டானே! சரி போகட்டும், இப்போது இந்தக் கொட்டும் மழையில் எப்படிப் போவது? இனிச் சிந்திக்கவோ, தாமதிக்கவோ நேரமில்லை!’ என்று எண்ணிய மணிமொழி, வெளிக் கதவைச் சாத்திவிட்டு, தலைப்புச் சேலையை எடுத்துத் தலையில் போட்டுக்கொண்டு படிகளில் இறங்கிக் கொட்டும் மழையில் தெருவில் நடந்தாள். அப்போது அதே கதவைத் திறந்து கொண்டு ஓர் உருவம் வெளியே வந்து, படிகளில் இறங்கி, மணி மொழியைப் பின்பற்றி நடக்கத் தொடங்கியது.*

*மணிமொழி! கொட்டும் மழையில் இரவில் பணப்பையுடன் தனியாகப் போகும் உன்னை ஓர் உருவம் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறதே! திரும்பிப் பாரம்மா! கொஞ்சம் திரும்பிப் பாரம்மா!*

## அண்ணி! நீங்களே இப்படிச் செய்யலாமா?

மணிமொழி, நகைப்பையுடன் பங்களாவிற்குத் திரும்பிய போது, பங்களா இருளில் மூழ்கிக் கிடந்தது.

வாயிற்பக்கத்தில் காவல் காப்போன் நூல் நூற்றுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

மணிமொழி பங்களாவிற்குப் பின்பக்கம் தோட்டத்திற்கு ஓரமாக வந்து நின்று பார்த்தாள். எந்த ஓசையும் இல்லை; எவரும் இல்லை. மழை இப்போது கடுமையாக இல்லை என்றாலும் கொஞ்சம் பெய்துகொண்டுதான் இருந்தது. மணிமொழி தெப்பமாக ஊறிப்போயிருந்தாள். சேலை அவள் உடம்போடு ஒட்டிப் போயிருந்தது.

மணிமொழி உள்ளே போக வேண்டுமென்றால் சிறு கட்டைச் சுவரில் ஏறிக் குதித்துதான் போக வேண்டும்! பெண்ணொருத்தி மழையில், இருளில், சுவர் ஏறிக் குதிப்பதா?

மணிமொழி அஞ்சவில்லை. கையைச் சுவரின்மேல் வைத்தாள். சுவரில் இருந்த குழிகளில் விரல்களை வைத்துச் சுவரைப் பிடித்துக்கொண்டு ஏறித் தோட்டத்திற்குள் குதித்தாள். குதித்ததும் நகைப்பையை எடுத்துக்கொண்டு நடந்து கதவுக்கருகில் வந்தாள்.

கதவு திறந்து கிடந்தது!

எப்பொழுதும் சாத்தித் தாழிடப்பட்டிருக்கும் தோட்டத்துக் கதவு திறந்து கிடக்கிறதே?

மணிமொழி அச்சத்துடன் உள்ளே நுழைந்து கதவைத் தாழிட்டாள். வெளியே மீண்டும் மழை பிடித்துக் கொண்டது!



மணிமொழி கையில் பையுடன், விளக்கு எரிந்துகொண்டு இருந்த பின்கட்டுக்கு வந்தாள்.

அங்கே, ஒரு தூணில் சாய்ந்து நின்றுகொண்டிருந்தான் முத்தழகு.

அவனைக் கண்டதும் மணிமொழியின் கையில் இருந்த பை கீழே விழுந்தது. பைக்குள் இருந்த வைர நகைகள் சிதறின!

முத்தழகு, குளிரில் நடுங்கும் மணிமொழியையே கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்தான். பின்பு மணிமொழிக்கு

அருகில் வந்து, "அண்ணி, முதலில் போய் நீங்கள் உடையை மாற்றிக்கொண்டு மாடிக்கு என் அறைக்கு வாருங்கள்" என்றான்.

மணிமொழி அங்கேயே நின்றுகொண்டிருந்தாள். முத்தழகு கொஞ்சம் கடுமை கலந்த குரலில், "போங்கள் அண்ணி, போய் உடையை மாற்றிக் கொண்டு மாடிக்கு என் அறைக்கு வாருங்கள். போங்கள்" என்றான்.

மணிமொழி மெல்ல அந்த இடத்தை விட்டுப் போனாள்.

மணிமொழி மெல்ல அந்த இடத்தைவிட்டுப் போனதும், முத்தழகு தரையில் சிந்திக் கிடக்கும் வைர நகைகளைப் பார்த்தான்.

அவன் கண்கள் கலங்கின! காரணம், அவை அனைத்தும் குடும்பத்தின் பூர்வீக நகைகள். மிகவும் பழைமையான விலை உயர்ந்த அந்த நகைகளை அப்பாவும் அம்மாவும் கவனத்துடன் காத்து வந்தார்கள். பெட்டகத்திற்குள்ளே பத்திரமாக இருக்கவேண்டிய நகைகள் இப்படிச் சிதறிக் கிடக்கின்றனவே!

அப்பாவும் அம்மாவும் எந்தத் துக்கத்தை வேண்டுமானாலும் தாங்கிக் கொள்வார்கள். வீட்டில் இருக்கும் பூர்விகமான நகைகளை இழக்கின்ற துன்பத்தை மட்டும் அவர்களால் தாங்க முடியாது! வீட்டைவிட்டு வெளியே சென்ற நகைகள் நல்லவேளையாக பத்திரமாகத் திரும்ப வந்துவிட்டன.

முத்தழகு ஒவ்வொரு நகையாக எடுத்துப் பைக்குள் போட்டு, நன்றாக மூடி, கையில் எடுத்துக் கொண்டான். பெட்டகம் இருந்த அறையை நோக்கி நடந்தான்.

அப்பாவின் அறைக் கதவு சாத்தியிருந்தது. இதனால் அப்பா நன்றாக அயர்ந்து உறங்கிக் கொண்டு இருக்கிறார் என்பது தெரிந்தது.

பெட்டகம் இருந்த அறைக்கு உள்ளே சென்று, விளக்கைப் போட்டான் முத்தழகு. பின்பு, பெட்டகத்தைத் திறந்து, அந்த நகைப்பையை இருந்த இடத்திலேயே வைத்துப் பூட்டினான். பின்பு, விளக்கை அணைத்துக் கதவைச் சாத்தி, கால்சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு பூட்டை எடுத்துப் பூட்டி, சாவியைப் பைக்குள் போட்டுக்கொண்டு, மாடிப்படிகளில் ஏறி, தன் அறைக்கு வந்து, சாய்வு நாற்காலியில் அமர்ந்தான்.

கொஞ்ச நேரமாயிற்று. படிகளில் எவரோ ஏறிவரும் ஓசை கேட்டது. முத்தழகு அறையை விட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தான்.

விடியும்போது கட்டவிழ்க்கும் மல்லிகை போல், வெள்ளைச் சோளி, வெள்ளைச் சேலையுடன் மாடிப்படிகளில் வந்துகொண்டு இருந்தாள் மணிமொழி. நிலவு வெளிச்சத்தில் அவளைப் பார்க்கும்போது...

முத்தழகின் முகம் சிவந்தது.

மணிமொழி மாடிக்கு வந்தாள். அறைக்குள் நுழையாமல் வெளியிலேயே நின்றாள்.

சற்று நேரம் கதவோரத்திலேயே நின்றுகொண்டிருந்த மணிமொழி திரும்பிப் படிக்கட்டை நோக்கி மெல்ல நடந்தாள்.

இதைக் கண்ட முத்தழகு அறையை விட்டு வெளியே வந்து, "அண்ணி! வாருங்கள் அண்ணி!" என்று அழைத்தான். அவன் கால்கள் மெல்ல நடுங்கின. வெள்ளைத் தாமரை போல் வெளிறிப்போன மணிமொழியின் முகத்தை, முத்தழகின் கண்கள் பார்த்துக்கொண்டே இருந்தன.

மணிமொழி, தலையைக் குனிந்துகொண்டே முத்தழகுக்கு அருகில் வந்து நின்றாள்.

"குளித்தீர்களா அண்ணி?" என்று கேட்டான் முத்தழகு. இதைக் கேட்கும்போது, அவன் மணிமொழிக்கு மிக அருகில் இருந்தான். அந்தப் பின்னிரவில் வீசிய மெல்லிய காற்று, மணிமொழியின் சேலைத் தலைப்பை முத்தழகின் மேல் படும்படி செய்தது.

இருந்தாலும் மணிமொழி இருந்த இடத்தை விட்டு நகராமல், "நீங்கள் உடையை மாற்றிக் கொண்டு வரும்படி சொன்னீர்கள். குளிக்காமல் உடையை மாற்றும் பழக்கம் எனக்கு இல்லை" என்றாள்.

"தண்ணீர் குளிர்ந்துவிட்ட இந்த நேரத்தில் குளிக்கலாமா அண்ணி?"

"எனக்கு இப்படி நினைத்த நேரத்திலெல்லாம் குளித்துப் பழக்கம் உண்டு. அதனால் என் உடம்புக்கு ஏதும் வராது!"

"நீங்கள் ஈரப் புடைவையுடன் இருக்கிறீர்களே என்றுதான் உடையை மாற்றிக்கொண்டு வரச் சொன்னேன்."



"நான் வரும்போது, உங்கள் அம்மாவின் அறையில் இளங்கோ அழுதுகொண்டிருந்தான். அவ னுக்குப் பால் கொடுக்க உங்கள் அம்மா என்னைத் தேடினாலும் தேடுவார்கள். என்னிடம் நீங்கள் என்ன சொல்லவேண்டும்? சொல்லுங்கள்!"

"அண்ணி, இப்படி வாருங்கள்" என்று மணிமொழியை அறைக்குள் அழைத்தான் முத்தழகு.

மணிமொழி உள்ளே வந்தாள். முத்தழகு சட்டென்று கதவைச் சாத்தித் தாழிட்டான். பின்பு, மணிமொழிக்கு அருகில் வந்து, "நீங்களே இப்படிச் செய்யலாமா அண்ணி?" என்று கேட்டான்.

"இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்னால், என் கேள்விகள் சிலவற்றுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும்!"

"கேளுங்கள் அண்ணி!"

“நகைப் பையை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டீர்கள் அல்லவா?”

“ஆமாம்.”

“நகைப்பை காணாமல் போனது இந்த வீட்டில் யாருக்காவது தெரியுமா?”

“யாருக்கும் தெரியாது!” என்ற முத்தழகு, மணிமொழியை இன்னும் மிக நெருங்கி வந்து நின்று, துக்கம் கலந்த குரலில், “ஆனால், நீங்களே இப்படிச் செய்யலாமா அண்ணி?” என்று கேட்டான்.

மணிமொழி நிமிர்ந்து முத்தழகைப் பார்த்தாள். அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகக் கொட்டியது. அதைக் கண்டு முத்தழகு திடுக்கிட்டான்!



முத்தழகு, தன் முகத்தை இன்னும் மணிமொழியின் முகத்திற்கு அருகில் கொண்டு போய், “என் அண்ணன் இறந்து போய் விட்டார். அவருக்கு வாரிசாக அவர் மகன் இளங்கோ இருக்கிறான். எங்கள் இரண்டு பேரைத் தவிர, வேறு எவரும் இல்லை பங்கு கேட்க! ஆகையால், சொத்துக்கள் அனைத்தையும் இரண்டு பங்காகப் பிரிக்க வேண்டியது தான். அப்போது அந்தப் பையில் உள்ள நகைகள் அனைத்தையும் அப்படியே இளங்கோ பங்குக்குக் கிடைக்கும்படி செய்துவிடுகிறேன். அப்புறம், அவை உங்கள் நகைகள்தாமே!” என்றான் உறுதியான குரலில்.

இதைக் கேட்டதும் மணிமொழி, தன் கைகள் இரண்டாலும் முகத்தை மூடிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

“அண்ணி!” என்று தடுமாறும் குரலில் கூறிக்கொண்டே, மணி மொழியின் கரங்களை விலக்கப் போனான் முத்தழகு. அப்போது படபடவென்று யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்டது.

முத்தழகு பட்டென்று விலகி நின்று கதவைப் பார்த்தான். மணிமொழி சட்டென்று முகத்தைத் துடைத்துக்கொண்டு கதவோரம் ஒளிந்து நின்றாள்.

முத்தழகு தன்னைச் சரிப்படுத் திக்கொண்டு கதவைத் திறந்தான். வெளியே எவரும் இல்லை!

வெளியே வந்து கூடம் முழுவதும் பார்த்தான். எவரையும் காணோம். படிகளை எட்டிப் பார்த்தான். எவரும் இல்லை!

திரும்பி வந்தான். அறைக்குள் நுழைந்து, “எவரும் இல்லை அண்ணி!” என்று சொல்லிக் கொண்டே கதவைத் தாழிடப் போனான்.

உடனே, “தாழிடாதீர்கள்! எவரோ வந்து கதவைத் தட்டிய பிறகு, இங்கு உங்கள் அறையில் இந்த நேரத்தில் நான் இருப்பது சரியல்ல!” என்று சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியே வந்தாள் மணிமொழி.

படிகளில் இறங்கிக் கண்ணிலிருந்து மறைந்து போனாள்.

## சிவகாமி, கொஞ்சம் சிறி!

சிவகாமியின் வீடு, முத்தழகின் வீட்டிற்கு அடுத்த வீடு. சிவகாமி, முத்தழகின் அத்தை மகள். அதாவது, முத்தழகின் அப்பா தில்லைநாயகத்தின் தங்கை மகள். இவளை முத்தழகின் அண்ணன் அரசுவுக்கு மணம் செய்துவிடவேண்டும் என்று முயற்சி நடந்துகொண்டு இருந்தபோதுதான் அரசு இறந்து விட்ட செய்தி வந்தது. திருமணப் பேச்சு நின்றது. இப்போது சிவகாமியை முத்தழகுக்கு மணம் செய்து வைத்துவிட வேண்டும் என்ற பேச்சு கிளம்பியது.

சிவகாமியின் அப்பா, தனது அறையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து, ஏதோ ஒரு பத்திரிகையை படித்துக்கொண்டு இருந்தார்.

கீழே, அவர் அருகில் தரையில் உட்கார்ந்து, பருப்பில் இருக்கும் கல்லைப் பொறுக்கிக்கொண்டே, "என் அண்ணன் உடம்பு சௌகரியம் இல்லாமல் இருக்கிறாரே, எத்தனை தடவை போய்ப் பார்த்தீர்கள்?" என்று கேட்டாள் சிவகாமியின் அம்மா.

"மூன்று தடவை போய்ப் பார்த்தேனே, போதாதா?" என்று திருப்பிக் கேட்டார் அப்பா.

"அடுத்த வீட்டில்தான் இருக்கிறார் என் அண்ணன். 'மூன்று தடவை பார்த்தேன்' என்று பெரிதாகச் சொல்லுகிறீர்களே?"

"பின்பு எத்தனை தடவை பார்க்க வேண்டுமாம்?"

"அரசு நம் பெண்ணை வேண்டாமென்று சொல்லிவிட்டான் என்று உங்களுக்கு அவர் மேல் கோபம்! அதற்கு என் அண்ணா என்ன செய்வார்? ஆனால், அவன் நம் பெண்ணை வேண்டாமென்று சொன்னதும் நல்லதாகத்தான் போயிற்று. சிவகாமியை அவனுக்குச் செய்திருந்தால் தாலியை இழந்து தவித்திருப்பாள்."

"சரி, அதைப் பற்றிப் பேசி என்ன பயன்? இப்போது என்னை என்ன செய்யச் சொல்கிறாய் நீ?"

"சின்னவன் முத்தழகுக்கு நம் பெண்ணை செய்வது பற்றி என் அண்ணனிடம் உடனே போய்ப் பேசுங்கள். இந்தத் தையிலாவது அவள் கல்யாணத்தை முடித்து விடுவோம்!"

"மூத்தவனை இழந்து கவலையுடன் ரத்தக் கொதிப்பால் படுக்கையில் இருக்கிறார் உன் அண்ணா. இந்த நிலைமையில் அவரிடம் போய்க் கல்யாணப் பேச்சை எப்படி எடுப்பது?"

“நிலைமைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் கல்யாணம் நடந்தாற்போலத்தான். உங்களுக்குச் சொன்னால் தெரியமாட்டேன் என்கிறதே! என் அண்ணா உடம்பு சௌகரியமில்லாமல் இருக்கும்போதே இந்தக் கல்யாணம் நடந்தால் தான் நடந்தது. அவருக்குப் பிறகு அந்தக் குடும்பத்தில் சம்பந்தம் செய்வது என்பது சாத்தியமே இல்லை. தெரிகிறதா?”

“உன் அண்ணன் நீண்ட நாளைக்கு இருக்கட்டும். நீ நினைப்பது மாதிரி சீக்கிரத்தில் அவர் போய்விடுவார் என்றும், அவர் போவதற்குள் உன் மகளை அவர் மகனுக்குக் கெட்டிக்காரத்தனமாகக் கல்யாணம் செய்துவிடுகிறாய் என்றும் வைத்துக் கொள்வோம். கல்யாணம் முடிந்ததும் உன் அண்ணன் போய்விட்டால், அதன் பிறகு சிவகாமியின் மாமியார், சிவகாமியைக் கொடுமைப்படுத்த மாட்டாளா? நான் சொல்வதைக் கேள். இருப்பது ஒரே பெண். ஆகையால், உன் மூளையையெல்லாம் இதில் செலவழிக்காமல், சிவகாமிக்கு யாரைப் பிடிக்கிறதோ அவனுக்கு அவளைக் கல்யாணம் செய்து கொடு! வீணாக அவள் வாழ்க்கையைக் கெடுக்காதே!” என்றார் அப்பா.

“முத்தழகு இருக்கும்போது வேறு மாப்பிள்ளையைப் பற்றி நினைக்க எனக்கு மனசே இல்லை. எப்படியாவது முயற்சி செய்து, சிவகாமியை முத்தழகுக்குத் திருமணம் செய்து வைத்து விடுவோம்!” என்றாள் அம்மா. இதைச் சொல்லும்போது அவள் குரல் தழுதழுத்தது.

**அ**ம்மாவின் குரல் தழுதழுத்ததைக் கண்ட அப்பா, “சரி, என்னாலான எல்லா முயற்சிகளையும் நான் செய்கிறேன். உன்னாலான முயற்சிகளை நீ செய்!” என்று சொல்லிவிட்டு எழுந்தார். அப்போது சிவகாமி உள்ளே வந்து, “அப்பா, தங்கதுரை ஒரு படம் எடுக்கப்போகிறார்! அதில் நான்தான் கதாநாயகி” என்றாள்.

“கதாநாயகிக்கு அப்பா, அம்மா வேண்டாமா? எங்களையும் சேர்த்துக் கொள்ளச் சொல்லு!” என்று கோபத்துடன் சொல்லிக்கொண்டே துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டார் அப்பா.

“அப்பா, நிஜமாகச் சொல்லுங்கள். நீங்களும் அம்மாவும் நடிப்பதென்றால் நான் ஏற்பாடு செய்கிறேன். தங்கதுரை நான் சொல்வதை மறுக்க மாட்டார்!” என்றாள் சிவகாமி.

“எப்படி மறுப்பான்? பணமெல்லாம் சேர்ந்த பிறகுதான் நீ சொல்வதை அவன் மறுப்பான். அதுவரைக்கும் மறுக்க மாட்டான்!” என்றார் அப்பா.

சிவகாமி, “ஆமாம் அப்பா, நீங்கள் சொன்னதும்தான் நினைவுக்கு வருகிறது. நான் கதாநாயகியாக நடிக்க வேண்டுமென்றால் **50,000** ரூபாய் அவருக்குக் கொடுக்க வேண்டுமாம்!”

*“சரிதான்! நீ கதாநாயகியாக நடிப்பதற்கு **50,000** ரூபாய், உன் அம்மா, அம்மாவாக நடிப்பதற்கு **10,000** ரூபாய், நான் அப்பாவாக நடிப்பதற்கு 10,000 ரூபாய்... மொத்தம் **70,000** ரூபாய்! உன் அம்மாதான் லட்சக்கணக்கில் பெட்டகத்தில் வைத்திருக்கிறாளே, வாங்கிக்கொண்டு போ!” என்று சொல்லிக்கொண்டே திரும்பிப் பார்க்காமல் அறையை விட்டு வெளியேறினார் சிவகாமியின் அப்பா.*

*“என்னம்மா, நான் சினிமாவில் நடிக்க அப்பா பணம் தரமாட்டாரா?”*

*“நீ என்னடி இன்னும் குழந்தை மாதிரி... நடிப்பதற்கு எல்லாரும் பணம் வாங்குவார்கள்; நீ என்னடாவென்றால் பணம் கொடுக்கிறேன் என்கிறாய்!”*
*“புதிதாக முதலில் ஒருத்தியை நடிக்க வைப்பதற்கு எல்லாரும் யோசிப்பார்களம்மா! உனக்கு மார்க்கெட்டே தெரியவில்லை. முதலில் பணத்தைக் கொடுத்து ஒரு படத்தில் நடித்து, அது வெற்றி பெற்றுவிட்டால், அப்புறம் நான் கேட்கிற பணத்தைப் படாதிபதிகள் தருவார்கள். அப்புறம் நான் பெரிய ஸ்டார் ஆகிவிடுவேன் அம்மா!”*

*“நீ நடிகையாவதை அப்பா விரும்பவில்லை சிவகாமி!”*

*“இந்த வீட்டில் அப்பா விருப்பப்படிதானா எல்லாம் நடக்கிறது? நீ என்ன நினைக்கிறாயோ அதுதானே இந்த வீட்டில் நடக்கிறது?” என்று சொல்லிக் கொண்டே, தன் முகத்தை அம்மாவின் தோளில் வைத்துக் கொண்டாள் சிவகாமி.*



*“வீட்டிற்குள் நாம் விரும்புகிறபடி எது வேண்டுமானாலும் செய்யலாம் சிவகாமி. ஆனால் வெளி விவகாரத்தில் உன் அப்பாவின் விருப்பம் இல்லாமல் எதையும் நாம் செய்யக் கூடாது!” என்றாள் அம்மா. தொடர்ந்து, “நீ சினிமாவில் சேருவதை உன் அப்பா விரும்பாததற்குக் காரணம் என்ன தெரியுமா?”*
*“சொல்லுங்கள் அம்மா.”*

*“நீ நாகரிகம் என்ற கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டாய். அதனால்தான் உன் அப்பாவிடம் இது பற்றிப் பேச நானும் யோசிக்கிறேன்!” என்றாள் அம்மா.*

*“அம்மா!” என்று சொல்லிக் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு, சன்னலுக்கு அருகில் வந்து நின்றாள் சிவகாமி.*

*இதைக் கண்ட அம்மாவின் கண்களும் கலங்கின. அவளும் எழுந்து சிவகாமிக்கு அருகில் வந்து நின்றாள்.*

*“என்ன சிவகாமி, சொல்லு?” என்றாள்.*

வெளியே தெருவையே பார்த்துக்கொண்டிருந்த சிவகாமி திரும்பினாள். அவள் விழிகளில் நீர் நிறைந்திருந்தது.

“அம்மா, என் உள்ளம் வேறு! என் உடை வேறு! என் நாகரிக உடையைத்தான் எல்லோரும் பார்க்கிறார்கள். என் நல்ல மனதை எவருமே பார்த்ததில்லை! பெரிய அத்தான் அரசுவுக்கு என்னைக் கல்யாணம் செய்வதென்று எல்லோரும் முடிவு செய்தீர்கள். அதுவரை நான் நாகரிகத்தைத் தொட்டுக்கூடப் பார்த்ததில்லை. குடும்பத்தின் குல விளக்கு போல் இருந்தேன். அப்போது அநாகரிகப் பழக்க வழக்கங்கள் என்னிடம் ஏதாவது இருந்தனவா அம்மா? அரசு அத்தான் என்னை விரும்பவில்லை. ஏன் என்னைத் திருமணம் செய்துகொள்ள மறுத்தார் என்பது இப்போது கூட எனக்குத் தெரியாது. அரசு அத்தானைக் கணவன் என்று நினைத்துக் கும்பிட்டுப் பழகினேன். என்னை அவர் விரும்பவில்லை என்றதும் அவரோடு பழகுவதைக் குறைத்துக் கொண்டு, சின்ன அத்தான் முத்தழகுடன் பழகத் தொடங்கினேன்.

அவரும் என்னைக் கண்ட போதெல்லாம் கேலி செய்தாரே தவிர, என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அப்புறம் இந்த உலகத்திலே எனக்கு என்னம்மா இருக்கிறது? இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தேன். எனக்கு அழகு இல்லாததும், நாகரிகம் இல்லாததும்தான் என் தோல்விக்குக் காரணம் என்பது தெரிந்தது. அன்றிலிருந்து ஒரு நவநாகரிக மங்கையாகிவிட்டேன். என் அத்தான்கள் என்னைக் கைவிட்டுவிட்டார்கள் என்றதும், அணிலாக இருந்த நான் ஆளைக் கொட்டும் தேளாகிவிட்டேன்!” என்று சொல்லி, அம்மாவின் தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள் சிவகாமி.

இந்த மாதிரி மகள் சிவகாமி பேசியதுமில்லை; அழுததும் இல்லை. அம்மா இந்த மாதிரி துக்கம்கொண்டதும் இல்லை.

தாய், தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, தன் தோளில் புதைத்திருந்த மகளின் முகத்தை நிமிர்த்தி, அவள் கண்களையும் துடைத்துவிட்டு, “சிவகாமி, இன்னும் எதுவும் கெட்டுப் போகவில்லையம்மா! முத்தழகுக்கு உன்னை எப்படியும் முடித்து வைத்துவிடுகிறேன்!” என்றாள்.

“இல்லையம்மா! அது சாத்தியமே இல்லை. பெரியவராவது என்னோடு பல தடவை பிரியமாகப் பேசியிருக்கிறார். சின்னவர் என்னோடு ஒரு தடவைகூடப் பிரியமாகப் பேசியதில்லை அம்மா!” என்றாள் சிவகாமி.

சிறிது இடைவெளிக்குப் பிறகு “இருந்தாலும் சிவகாமி, நீ தங்க துரையோடு பழகுவது எனக்கும் அப்பாவுக்கும் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை!” என்றாள் அம்மா.

*சிவகாமி, சன்னல் வழியாக வெளியே பச்சை மரங்களைப் பார்த்துக்கொண்டே, "அம்மா! ஏதோ என் மனதில் படுகிறது. உன்னிடம் சொல்லலாமோ என்னவோ?" என்றாள்.*

*"சும்மா சொல்லம்மா! அம்மாவிடம் சொல்லக்கூடாதது கூட மகளுக்கு உண்டா என்ன?"*

*"அம்மா, பெரிய அத்தான் இன்னும் உயிரோடு இருக்கிறார் என்றே என் மனம் சொல்கிறது அம்மா!"*

*"சிவகாமி, உனக்கு ஏதாவது பைத்தியம் பிடித்துவிட்டதா?" என்று கடுமையான குரலில் கேட்டாள் அம்மா.*

*"இல்லையம்மா! நான் சுய நினைவோடுதான் இருக்கிறேன். என் மனம் சொல்வதை உன்னிடம் சொல்கிறேன், அவ்வளவுதான்!" என்றாள் சிவகாமி.*

*தொடர்ந்து, "அம்மா, பெரிய அத்தான் உயிரோடு திரும்பி வருவார் என்று என் மனம் அடிக்கடி சொல்வதால், நான் தங்கதுரையுடன் ஜாக்கிரதையாகவே பழகி வருகிறேனம்மா!" என்றாள்.*

*"சிவகாமி, தங்கதுரையோடு நீ ஜாக்கிரதையாகப் பழகுவது பற்றி எனக்கு மகிழ்ச்சி! இருந்தாலும், அவனோடு பழகுவதையே நீ அடியோடு விட்டுவிட்டால் இன்னும் மகிழ்ச்சியாய் இருக்கும்" என்றாள் அம்மா.*

*"இல்லையம்மா! திடீரென்று எவரையும் என்னால் கல்யாணம் செய்துகொள்ள முடியாது!"*

*"இதற்கு என்ன அர்த்தம் சிவகாமி?"*

*அர்த்தமா?" என்று கேட்டுக் கொண்டே திரும்பினாள் சிவகாமி. அப்போது அவள் கையிலிருந்த புத்தகத்துக்குள்ளிருந்து ஒரு புகைப்படம் விழுந்தது. அது அரசுவினுடையது! பெரிய அத்தான் அரசுவினுடையது!*

*அம்மா அந்தப் புகைப்படத்தைக் குனிந்து எடுத்துச் சிவகாமியிடம் கொடுத்துக்கொண்டே, "உன் போக்கு எனக்குப் பிடிபடவில்லை சிவகாமி! கொஞ்சம் பயமாகக் கூட இருக்கிறது!" என்றாள்.*

*"அம்மா, நானாக எதுவும் செய்யவில்லை. பெரிய அத்தானுக்குதான் என்னை முதலில் திருமணம் செய்து கொடுக்கப் போவதாகச் சொன்னீர்கள். உடனே அவர் என் மனத்தில் வந்தார். இன்றும்கூட அவர் என் மனத்தில் இருக்கிறார். இந்தப் புத்தகம் அவருடையதுதான்!*

*அவர்தான் இதைப் படிக்கச் சொல்லி என்னிடம் தந்தார். அப்போது அவர் அறையில் இருந்த புகைப்படத்தை எடுத்து இந்தப் புத்தகத்தில் வைத்தேன். அந்தப் புகைப்படம்தானம்மா இது!'' என்றாள் சிவகாமி.*

*இதைக் கேட்டதும், என்ன செய்வதென்றே அம்மாவுக்குப் புரியவில்லை. கொஞ்சம் துணிந்து, ''சிவகாமி, ஒருவேளை சின்ன அத்தானுக்கும் உனக்கும் திருமணம் நடக்காவிட்டால், கண்டிப்பாக உனக்கும் தங்கதுரைக்கும் கல்யாணம் செய்து வைக்கிறேன். சிவகாமி, கொஞ்சம் சிரி!'' என்றாள்.*

*சிவகாமி சிரித்தாள்.*

*''இருந்தாலும் சிவகாமி, தங்கதுரையோடு பழகும்போது கொஞ்சம் பாதுகாப்புடன் பழகிக் கொண்டிரம்மா!''*

*''ஆகட்டும் அம்மா'' என்றாள் சிவகாமி. ''அதிருக்கட்டும் அம்மா, பணம் கேட்டேனே படத்திற்கு..?'' என்றாள்.*

*''பெருந்தொகை! இது பெரிய விஷயம் சிவகாமி!'' என்றாள் அம்மா.*

*''அம்மா, பெரிய அத்தான் இறந்து, சின்ன அத்தானும் கை விட்டுக் கலங்கி நிற்கிற நான், நடிகையாகாவிட்டால், நான் வாழவே முடியாதம்மா!''*

*''என்னவோ அம்மா, எல்லாம் எனக்குப் பயத்தைத் தருகின்றன! என்னால் முடிந்தமட்டும் பார்க்கிறேன்'' என்று சொல்லி விட்டுப் போனாள் அம்மா.*



*அம்மா போனதும் தங்கதுரை வந்தான்!*

*''வாருங்கள் தங்கதுரை, வந்து நேரம் ஆயிற்றா?'' என்று கேட்டாள் சிவகாமி.*

*''இல்லை சிவகாமி, இப்போதுதான் வந்தேன்!''*

*''அப்பா வெளியே இருப்பாரே?'' என்று கேட்டாள் சிவகாமி.*

*''ஆமாம். உட்கார்ந்திருக்கிறார். என்னைப் பார்த்தார். ஏதும் சொல்லவில்லை. நான்பாட்டுக்கு வந்துவிட்டேன்!'' என்றான் தங்கதுரை. ''அது சரி சிவகாமி, படம் எடுப்பதற்கு* **50,000** *ரூபாய் கேட்டேனே, அப்பாவிடம் சொன்னாயா?''*

*''சொன்னேன். அப்பாவுக்குச் சினிமாவில் அக்கறை இல்லை!''*

*"அப்பா வேண்டாமென்றால் அப்புறம் நீ எப்படி ஸ்டார் ஆவது?"*

*"அம்மாவிடம் சொன்னேன். அப்பாவிடம் பேசிப் பார்க்கிறேன் என்று சொல்லியிருக்கிறாள்."*

*"சிவகாமி...!"*

*"என்ன தங்கதுரை?"*

*"நீ ஸ்டார் ஆக முடியாது!"*

*இதற்கு சிவகாமி மறுமொழி ஏதும் சொல்லவில்லை.*

*தங்கதுரை எழுந்து நின்று, "என்ன சிவகாமி, நீ ஸ்டார் ஆக முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன், பேசாமல் இருக்கிறாயே?" என்றான்.*

*"முன்பு எனக்கு ஸ்டார் ஆக வேண்டும் என்ற எண்ணம் அதிகமாக இருந்தது தங்கதுரை! ஆனால், அம்மாவிடம் பேசிய பிறகு, எனக்கு அந்த ஆசை குறைந்துவிட்டது!" என்றாள் சிவகாமி.*

*"அப்படியா?" என்று கரங்களைப் பின்புறமாகக் கட்டிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான் தங்கதுரை. சற்று நேரம் கழித்து, "அப்புறம் உன் முடிவு?" என்று கேட்டான்.*

*"கொஞ்சம் அவகாசம் கொடுங்கள் நான் ஒரு முடிவுக்கு வர! நடிகையாவது என்று தீர்மானித்துவிட்டால், எப்படியும்* ***50,000*** *ரூபாயை உங்களுக்கு ஏற்பாடு செய்து தருகிறேன்."*

*"அதுவும் சரிதான்!" என்று சொல்லிவிட்டு, "சிவகாமி, உன் கையிலிருப்பது என்ன புத்தகம்? கொடு, நான் பார்க்கிறேன்" என்றான் தங்கதுரை. "மன்னிக்கவேண்டும் தங்கதுரை!" என்று சொல்லியபடியே சட்டென்று அறையை விட்டு வெளியே போய்விட்டாள் சிவகாமி.*

*தங்கதுரை அங்கேயே நின்று கொண்டிருந்தான்.*

## அறைக் கதவு திறந்து கிடந்தது!

சமையலறையில் பணிப்பெண் பாவையோடு நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்த மணிமொழி, இருட்டிவிட்டதால் தன் அறைக்கு வந்தாள். நேற்றிரவு மாடியில் முத்தழகைத் தனியாகக் கண்டு பேசிய பிறகு அவளுக்கு அமைதியே இல்லை! அந்த மாடி இரவுச் சந்திப்புக்குப் பிறகு முத்தழகை முடிந்தவரை பார்க்காமல் இருக்க முயன்றாள் மணிமொழி.

மணிமொழி கதவைச் சாத்தித் தாழிட்டுக்கொண்டு, கட்டிலுக்கு அடியில் இருந்த அந்தப் பெட்டியை எடுத்துத் திறந்தாள். இறந்துபோன அந்த மணிமொழியின் பெட்டியை மணிமொழி திறப்பது இது இரண்டாவது தடவை. ஊரிலிருந்து வந்ததும் இளங்கோ பால் பருகும்போது, பாலைச் சட்டையில் கொட்டிக் கொண்டுவிட்டான் என்று மாமியார், குழந்தையை மணிமொழியிடம் கொடுத்துச் சட்டையை மாற்றச் சொன்னாள். மணிமொழி குழந்தைக்குச் சட்டை எடுப்பதற்காகப் பெட்டியைத் திறந்தாள். மேலாகக் கண்ணாடி போட்ட புகைப்படம் ஒன்று இருந்தது. அதைப் பார்த்ததும் மணிமொழியின் ரத்தம் உறைந்தது. சுதாரித்துக்கொண்ட மணிமொழி, சட்டையை எடுத்துக் கொண்டு பெட்டியை அப்படியே மூடிவிட்டாள்.



அதுதான் மணிமொழி, முதல் தடவையாக இளங்கோவின் தாய் மணிமொழியின் பெட்டியைத் திறந்தபோது நடந்தது. மாமியார் குழந்தைக்கு நிறையச் சட்டைகளும் மற்றவைகளும் தைத்து, குழந்தைக்கு வேண்டிய பொருட்களையும் நிறைய வாங்கி விட்டதால், பெட்டியைத் திறக்க வேண்டிய தேவையே இல்லாமல் போய்விட்டது!

அதற்குப் பிறகு, பல நாட்கள் கழித்து இப்போதுதான் இரண்டாவது தடவையாக அந்தப் பெட்டியைத் திறக்கிறாள் மணிமொழி. மேலாக அந்தப் புகைப் படம் இருந்தது. முத்தழகின் அண்ணன் அரசுவும், அவன் மனைவி மணிமொழியும் சேர்ந்து எடுத்துக்கொண்ட படம் அது.

புகைப்படத்திலிருந்த அரசுவின் உருவத்தை நன்றாகக் கவனித்துப் பார்த்தாள் மணிமொழி. முதல் தடவை இந்தப் பெட்டியைத் திறந்தபோது, இந்தப் புகைப்படத்திலிருக்கும் அரசுவை இப்படி உற்றுப் பார்க்க நேரம் இல்லாதவளாக இருந்தாள் மணிமொழி.

இளையவரைப் போல் இவர் அப்படி ஒன்றும் அழகாய் இல்லை. இவரைவிட இளையவர் கொள்ளை அழகு! தம்பியானாலும், இவரைவிட உயரமாக இருப்பார் போலிருக்கிறதே! இவருக்குக் கொஞ்சம் நீள முகம், இளையவருக்குப் பூரண நிலவு

*மாதிரி வட்டமுகமாயிற்றே! கண்கள்..? இவர் கண்களில் ஒளி இல்லை. இளையவர் கண்கள் கவர்ந்திழுக்கும் கண்கள்! முடி கூட இளையவரின் முடிதான் கவர்ச்சியான முடி என்று எண்ணியது மணிமொழியில் மனம்!*

*அப்போது - அறைக் கதவை எவரோ படபடவென்று தட்டினார்கள்.*

*உடனே மணிமொழி அந்தப் புகைப்படத்தைக் கட்டிலில் கிடந்த தலையணைக்கு அடியில் ஒளித்து வைத்துவிட்டு, பெட்டியை மூடிப் பூட்டிவிட்டு வந்து கதவைத் திறந்தாள். எதிரே பாவை!*

*"அக்கா, எல்லாரும் சாப்பிட்டு விட்டார்கள், நீங்கள் மட்டும்தான் பாக்கி! வாருங்கள் சாப்பிட" என்றாள் பாவை.*

*"இளையவர் சாப்பிட்டு விட்டாரா பாவை?"*

*"சாப்பிட்டுவிட்டார்."*

*"எங்கே அவர்?"*

*"வெளியே, பத்தியில் உலாவிக் கொண்டிருக்கிறார் அக்கா!"*

*இதைக் கேட்டதும் மணிமொழிக்கு உள்ளத்தில் ஏதோ ஒன்று குத்தியதைப் போலிருந்தது.*

*மணிமொழி, மறதி மிகுந்தவளே! உன் காதலன் முத்தழகு துன்பம் கொண்டிருக்கிறான் என்று கேள்விப்பட்டதுமே கதவைக் கூடச் சாத்தாமல் போய் விட்டாயே! என்ன நடக்கப் போகிறது தெரியுமா? உனக்கு அம்மா இல்லை. இளங்கோவுக்கு நீ அம்மா இல்லை. என்ன வாழ்வடி உன் வாழ்வு!*

*மணிமொழியும் பாவையும் சமையலறைக்கு வந்தார்கள். மணிமொழி சாப்பிட உட்கார்ந்தாள். பாவை பரிமாறினாள்.*

*தலையைக் குனிந்து மௌனமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்த மணிமொழியிடம், "இளங்கோ எங்கே அக்கா? அந்தச் சுட்டிப் பயலை நான் இன்று முழுவதும் பார்க்கவே இல்லை!" என்றாள் பாவை.*

*மணிமொழி குனிந்த தலையை நிமிராமலே, "மாலை வரை இளங்கோவை நான்தான் வைத்துக் கொண்டிருந்தேன். கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் அத்தை வந்து அவனை வாங்கிக் கொண்டு போனார்கள். அவன் தான் யாரிடம் வேண்டுமானாலும் இருப்பானே!" என்றாள்.*

*கொஞ்ச நேரத்தில் மணிமொழி சாப்பிட்டுவிட்டு எழுந்தாள். கையைக் கழுவிவிட்டுத் தன் அறைக்கு வந்ததும்தான் அவளுக்குத் தெரிந்தது, அறைக் கதவைத் திறந்தே போட்டு விட்டுப் போயிருப்பது.*

*அறைக்குள் நுழைந்ததும், கதவைச் சாத்தித் தாழிட்டுவிட்டு, தலையணைக்கடியில் தான் வைத்துவிட்டுப் போன அந்தப் புகைப்படத்தை எடுத்துக் கிழிப் பதற்காகத் தலையணையை எடுத்தாள். அந்தப் படத்தைக் காணோம்!*

*அறைக்கதவு திறந்து கிடந்ததால் எவரோ வந்து புகைப்படத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்பது மணிமொழிக்குத் திண்ணமாகத் தெரிந்துவிட்டது. நீண்ட நேரத்திற்குப் பிறகு, ஒரு முடிவுடன் எழுந்தாள்.*

*நேராகச் சமையலறைக்கு வந்து பாவையிடம், ''பாவை, இளையவர் பால் சாப்பிட்டு விட்டாரா?'' என்று கேட்டாள்.*

*''இன்னும் இல்லை அக்கா'' என்றாள் பாவை.*

*''என்னிடம் கொடு, நான் கொண்டு போய்க் கொடுக்கிறேன்'' என்று பாலை வாங்கிக்கொண்டு பத்தியில் இருளில் உலவிக் கொண்டிருந்த முத்தழகிடம் வந்தாள் மணிமொழி.*



*அவளை ஒருமுறை நிமிர்ந்து பார்த்த முத்தழகு, மீண்டும் மௌனமாக உலவத் தொடங்கினான். பின்பு, ''நீங்கள் ஏன் அண்ணி பாலை எடுத்து வந்தீர்கள்?'' என்று கேட்டான்.*

*''உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்!''*

*''என்னிடம் பேச என்ன அண்ணி இருக்கிறது?''*

*''நீங்கள் நேற்றிரவு முழுவதும் கண் விழித்திருக்கிறீர்கள்!''*

*''ஆமாம் அண்ணி. நேற்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை!''*

*''காரணம்?''*

*''என் மனத்தில் அமைதி இல்லை அண்ணி.''*

*''உங்களுக்கு மன அமைதி இல்லாமல் போனதற்கு நான் தான் காரணமா?''*

*''ஆமாம் அண்ணி, நீங்கள் தான் காரணம்!'' என்றான் முத்தழகு.*

*இதைக் கேட்டதும் மணி மொழியின் கையிலிருந்த பால் குவளை கீழே விழுந்தது.*

"என்ன அங்கே..?" என்று கேட்டுக் கொண்டே, கையில் குழந்தையுடன் அடுத்த அறையில் இருந்த அம்மா வெளியே வந்தாள். அதற்குள் மணிமொழி அழுதுகொண்டே அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டாள்.

முத்தழகு தன்னைச் சமாளித்துக்கொண்டு, "அம்மா, இருட்டில் எங்கே வருகிறீர்கள்? அறையிலேயே இருங்கள். நான் இங்கு உலவிக் கொண்டிருந்தேன். இருட்டில் தண்ணீர் இருந்த குவளையைத் தெரியாமல் தட்டிவிட்டேன். அவ்வளவுதான். நீங்கள் போய்ப் படுங்கள்" என்றான்.

"ஆகட்டுமடா, நீயும் போய்ப் படுத்துக்கொள். கண் விழித்தால் உடம்புக்கு ஆகாது" என்று சொல்லிக் கொண்டே, குழந்தையுடன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டாள் அம்மா.

முத்தழகு இருட்டில் அங்கேயே நின்றுகொண்டிருந்தான்.

## அப்படியா சொல்கிறாய்?

மறுநாள் காலை. மணிமொழி குளித்துவிட்டு வரும்போது, கூடத்தில் தங்கதுரையும் முத்தழகும் பேசிக்கொண்டிருந்தார்கள். மணிமொழி ஈரப் புடவையுடன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

“முத்தழகு, உன்னோடு கொஞ்சம் பேசவேண்டும்” என்றான் தங்கதுரை.

“இது தனியான இடம்தானே, பேசு!” என்றான் முத்தழகு.

“உன் அண்ணி வருவார்களே!” என்றான் தங்கதுரை.

“வந்தால் என்ன, அவர்கள் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். நீ சொல்லு வந்த விஷயத்தை” என்றான் முத்தழகு.

“முத்தழகு, நான் சிவகாமியைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்றிருக்கிறேன்.”

“செய்துகொள்ள வேண்டியது தானே!”

“உனக்கு இதில் ஆட்சேபனை ஏதாவது..?”

“எதுவும் இல்லை!”

“அப்படியானால், எங்கள் திருமணத்திற்கு உடனே நீ ஏற்பாடு செய்ய வேண்டும்!”

“ஏன், உங்கள் திருமணத்திற்குத் தடை ஏதாவது இருக்கிறதா?”

“தடை என்று ஏதும் இல்லை. ஆனால்...”

“ஆனால் என்ன?”

“சிவகாமியை வேறு யாருக்காவது பேச ஆரம்பித்துவிடுவார்கள் என்று தோன்றுகிறது.”

“சரி, நான் இப்போது என்ன செய்ய வேண்டும், சொல்லு?”

“உடனே சிவகாமியின் அப்பா அம்மாவைப் பார்த்துப் பேசிக் கல்யாணத் தேதியை நிச்சயம் செய்ய வேண்டும்!”

“அதற்கு முன் சிவகாமியின் கருத்தை தெரிந்துகொண்டு, அதற்கு மேல் ஆக வேண்டியவற்றைக் கவனிக்கிறேன்.”

“அப்படியா சொல்கிறாய்?”

*“ஆமாம் தங்கதுரை! அந்த வீட்டில் அத்தனையும் அம்மா அதிகாரம்தான். ஆகையால், அத்தையைச் சரி செய்ய வேண்டுமென்றால், முதலில் சிவகாமியைச் சரி செய்யவேண்டும்.”*

*“சரி, அப்படியே செய்”* என்று சொல்லிவிட்டு எழுந்தான் தங்கதுரை.

*அப்போது மணிமொழி வெள்ளைச் சேலை, வெள்ளைச் சோளியில் ஒரு வெள்ளைத் தாமரை மலர்ந்து நடந்து செல்வது போல் தலையைக் குனிந்தபடி நடந்து சென்றாள்.*

## அதிர்ச்சியைத் தரும்; அப்புறம் ஆனந்தத்தைத் தரும்!

சிவகாமியைத் தனக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமென்று, தங்கதுரை முத்தழகிடம் கேட்டுக்கொண்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு நடுப்பகல் நேரம்.

முத்தழகின் அப்பா, அவர் அறையில் சாப்பிட்டுவிட்டு நாற்காலியில் சாய்ந்துகொண்டு இருந்தார். அவருக்குப் பக்கத்தில் தரையில் உட்கார்ந்து, பேரன் இளங்கோவுக்கு விளையாட்டுக் காட்டிக்கொண்டு இருந்தாள் முத்தழகின் அம்மா.



முத்தழகு, கூடத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்து ஏதோ ஒரு பத்திரிகையைப் படித்துக் கொண்டு இருந்தான். மணிமொழி சாப்பிட்டுவிட்டுச் சமையலறையிலிருந்து வந்து கொண்டிருந்தாள். அப்போது தபால்காரன் உள்ளே நுழைவது அவளுக்குத் தெரிந்தது.

மணிமொழி நேராக வாயிலுக்குச் சென்றாள். தபால்காரன், மணிமொழியின் கையில் இரண்டு கவர்களைக் கொடுத்து விட்டுப் போனான். ஒரு கவரில் இருந்த முகவரியைப் படித்தாள் மணிமொழி. மெ.தில்லைநாயகம் அவர்கள், ஏரிக்கரைத் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை.

‘மாமனாருக்கு வந்திருக்கும் கடிதம்! சரி, இன்னொரு கடிதம் யாருக்கு?’

அ.மணிமொழி, மே/பா தில்லைநாயகம் அவர்கள், ஏரிக்கரைத் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை என்றிருந்தது கவரிலிருந்த முகவரி.

தனக்குத்தான் கடிதம் என்பதை அறிந்ததும் மணிமொழி திடுக்கிட்டாள்.

‘அப்பா எழுதியிருப்பாரா? இல்லை. அப்பாவுக்கு நான் இங்கே தங்கியிருப்பது தெரியாதே! இந்த முகவரியே அப்பாவுக்குத் தெரியாதே! தெரிந்தவர்கள் யாராவது எழுதியிருப்பார்களா? இருக்கமுடியாது. தெரிந்தவர்கள் எழுதினால் மணிமொழி என்றுதான் எழுதுவார்கள். மிகத் தெரிந்தவர்களாக இருந்தால் மருதநம்பி என்ற அப்பா பெயரில் முதல் எழுத்தைச் சேர்த்து, ம.மணிமொழி என்றல்லவா எழுதுவார்கள்! இங்கே அ.மணிமொழி என்றல்லவா இருக்கிறது! இந்த ‘அ’ என்பது யாரைக் குறிக்கிறது?’ – சிந்தித்த மணிமொழிக்குத் திடீரென்று விடை கிடைத்தது.

அ என்பது அரசு என்ற பெயரின் முதல் எழுத்து. மணிமொழி அரசுவின் மனைவி. ஆக, இறந்துபோன அந்த மணிமொழிக்கு வந்திருக்கும் கடிதம் இது.

விலாசம் இருக்கிறதா என்று அந்த கவரைத் திருப்பிப் பார்த்தாள். ‘ஆ’ என்று அவள் வாய் திறந்தது. அவள் கையிலிருந்த கவர் கீழே விழுந்தது.

அனுப்பியோன்: தி.அரசு, பக்ராநங்கல் அணைக்கட்டு, கிழக்கு பஞ்சாப்.

படபடவென்று கண் இமைகளும் மனமும் அடித்துக்கொள்ள, கையிலிருந்த மற்றொரு கவரையும் திருப்பிப் பார்த்தாள் மணிமொழி. அதை அனுப்பியதும் அரசுதான்.

ஒரு முடிவுக்கு வந்த மணிமொழி, மணிமொழி என்ற விலாசமிட்டுக் கீழே கிடந்த கவரை எடுத்துத் தன் சோளிக்குள் வைத்துக்கொண்டு, மற்றொரு கவரை எடுத்துக் கொண்டு நேராகத் தில்லை நாயகம் இருந்த அறைக்குள் நுழைந்து, அங்கே மாமியார் மங்கையிடம் கடிதத்தைக் கொடுத்துவிட்டு விர்ரென்று வெளியே வந்தாள்.

நேராகத் தோட்டத்திற்கு வந்தவள், சுற்றிலும் நோட்டமிட்டுத் தன்னை எவரும் பார்க்கவில்லை என்று தெரிந்ததும், தன் சோளிக்குள்ளிருந்த அந்த கவரை எடுத்துப் பிரித்துப் படித்தாள். முதல் வரியைப் படித்ததுமே அவள் கண்கள் கலங்கின.

‘மறக்கமுடியாத மணிமொழிக்கு, எப்படி இந்தக் கடிதத்தைத் தொடங்குவது, எப்படி முடிப்பது, என்ன எழுதுவது என்பதே எனக்குத் தெரியவில்லை!

நான் சாகவில்லை, உயிரோடுதான் இருக்கிறேன் என்பது இந்தக் கடிதத்தை நான் எழுதுவதிலிருந்தே உனக்குத் தெரியும். இந்தச் செய்தி உனக்கு முதலில் அதிர்ச்சியைத் தரும், அப்புறம் ஆனந்தத்தைத் தரும். உடனே ஓடிப்போய் நெற்றியில் பெரிய திலகம் இட்டுக்கொள்வாய். வெள்ளைச் சேலையை உரிந்து எறிந்துவிட்டுப் பட்டுப் புடவையைக் கட்டிக் கொள்வாய்!’

இதைப் படித்ததும், அப்படியே கண்களை மூடிக்கொண்டாள் மணிமொழி. மூடிய அவள் விழிகளிலிருந்து கண்ணீர் கொட்டியது.

‘நீங்கள் இறந்த பிறகு ஒருக்கணமும் இந்த உலகத்தில் இருக்கமாட்டேன்!’ என்று என்னிடம் நீ அடிக்கடி சொல்வாயே! எனக்கு நினைவு வந்ததும் நீ இருக்கிறாயா, இல்லையா என்பதைத்தான் முதலில் விசாரித்தேன். பஞ்சாப் அரசினர் உன்னைப் பத்திரமாக என் அப்பா அம்மாவிடம் அனுப்பி வைத்துவிட்டதாகத் தெரிந்தது.

மணிமொழி, உன் அப்பா இறந்த பிறகு, எனக்காக நீ வாழ்ந்தாய். நான் இறந்ததாகக் கேள்விப்பட்டாலும் நம் குழந்தைக்காக நீ வாழ்வாய் என்பது எனக்குத் தெரியும்.

கோமதி, கோமதி என்று உன் சொந்தப் பெயரைச் சொல்லி அழைக்க எனக்கு ஆசையாக இருக்கிறது. கோமதி என்பது உன் அப்பா வைத்த பெயர். மணிமொழி என்பது நான் வைத்த பெயர். மணிமொழி, உடனே ஓடி வந்து உன் மடியில் படுத்துக்கொண்டு, ‘கோமதி... கோமதி!’ என்று கத்த வேண்டும் போலிருக்கிறது. காரணத்தைக் கடிதத்தின் கடைசியில் சொல்கிறேன்.

கல்யாணம் ஆவதற்குமுன் நீ கன்னிப் பெண் கோமதியாக இருந்தாய். இப்போது நீ கல்யாணமாகிக் குழந்தையும் பெற்ற மணிமொழி! நீ கல்யாணமாகாத கன்னிப்பெண் கோமதியாகவே இருந்திருக்கலாம்! காரணம்? கடிதத்தின் கடைசியிலே சொல்கிறேன்.

நான் உன்னை 'மணிமொழி, மணிமொழி' என்று அழைக்கும் போது, 'உங்களுக்கு ஏன் இந்த மணிமொழி என்ற பெயரில் இவ்வளவு மயக்கம்?' என்று கேட்பாய். உன்னுடைய இந்தக் கேள்விக்கு அன்றும் என்னால் பதில் சொல்ல முடியவில்லை, இன்றும் பதில் சொல்ல முடிய வில்லை.



மணிமொழி, என்னை நீ பிரிந்து இரண்டு மாதங்கள் இருக்கும் என்று எண்ணுகிறேன். இப்படியே காலமெல்லாம் என்னை நீ பிரிந்து இருந்து விட்டால், நான் எவ்வளவோ மகிழ்ச்சி உடையவனாக இருப்பேன்! காரணம்? கடிதத்தின் கடைசியிலே சொல்கிறேன் மணிமொழி!'

இதைப் படித்ததும், மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள் மணிமொழி. தன்னைத் தேற்றிக் கொண்டு மீண்டும் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள்.

'நம் குழந்தை தன் அப்பாவை இழக்கவில்லை. ஆனால், நீ உன் கணவனை இழந்துவிட்டாய் மணிமொழி! காரணம்? கடிதத்தின் கடைசியிலே சொல்கிறேன் மணிமொழி.'

இதற்குமேல் மணிமொழியால் படிக்க முடியவில்லை. கடிதத்தை அப்படியே மடித்துச் சோளிக்குள் வைத்துக்கொண்டு மேலே மாடியைப் பார்த்தாள். மாடிச் சன்னல் வழியாக, முத்தழகு மணிமொழியையே பார்த்துக்கொண்டு இருந்தான்.

மணிமொழி உடனே தன் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள். மெல்லத் தலையைக் குனிந்து கொண்டே உள்ளே வந்து, தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டு படுக்கையில் வந்து விழுந்தாள். நீண்ட நேரம் அப்படியே கட்டிலில் விழுந்து கிடந்த மணிமொழி, சோளிக்குள் இருந்த அந்தக் கடிதத்தை எடுத்து மீண்டும் படித்தாள்.

'தமிழகத்திலே பிறந்த நீ, தமிழகத்திலேயே இருக்கிறாய் இன்று. ஆனால், நான் கிழக்குப் பஞ்சாபிலே ஓர் அரசினர் மருத்துவ விடுதியில் கிடக்கிறேன். நான் இப்படி மருத்துவ விடுதியிலே கிடப்பதால்தான், இந்தக் கடிதத்தை என் வாயால் சொல்லி, சொல்லியதை டைப் அடிக்கச் செய்து, கடிதத்தின் கடைசியில் என் கையெழுத்தை மட்டும் போட்டிருக்கிறேன். இதனால் விபத்தில் நான் என் கையையே இழந்து விட்டேன் என்று கருதிவிடாதே! அதுதான் என் கைப்பட கையெழுத்துப் போட்டிருக்கிறேனே!'

மணிமொழி, தொடர்ந்து கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள்.

‘குழந்தையை உன் அப்பா பார்க்கவில்லை. என் அப்பாவாவது தன் பேரனைப் பார்த்தாரே! குழந்தையைப் பார்த்த என் அம்மாவும் என் அப்பாவும் என்ன சொன்னார்கள்? என் தம்பி முத்தழகு உன்னிடம் பிரியமாக நடந்துகொள்கிறானா?’

இதைப் படித்ததும் அப்படியே திரும்பிக் குப்புறப் படுத்துக்கொண்டு குமுறிக் குமுறி அழுதாள் மணிமொழி.

‘பாவை நல்லவள். உன்னை அவள் நன்றாக உபசரிப்பாள். அத்தை மகள் சிவகாமி அடிக்கடி வருகிறாளா? அவளைக் கொஞ்சம் கவனித்துக்கொள், மணிமொழி. உன்னைப் போல அடக்கம் உள்ளவளல்லள் அவள். சுதந்திரப் பறவை. அவளைக் கட்டுப்படுத்த எவருமே இல்லை. ஆனால், அவள் நல்லவளாக வாய்ப்புண்டு. அவளை நினைக்கும்போது எனக்குக் கண்கள் கலங்குகின்றன மணிமொழி!

கட்டடத்தைக் கட்ட எனக்குத் தெரியும். வாழ்க்கைக் கட்டடத்தைக் கட்ட வழியில்லாமல் தவிக்கிறேனே! தண்ணீரைத் தேக்கும் அணைக்கட்டை எனக்குக் கட்டத் தெரியும். உன் கண்ணீரைத் தேக்கும் அணைக்கட்டைக் கட்ட எனக்கு வாய்ப்பு இல்லாது போயிற்றே மணிமொழி!

பக்ராநங்கல் அணைக்கட்டைக் கட்டிப் பஞ்சாபைச் செழிக்க வைக்கவேண்டும் என்று பாடுபட்ட எத்தனையோ பேரில் நானும் ஒருவன். என் தலைமையில் ஒரு பெரிய குழு ஒரு பெரும் பாறையை உடைக்கும் வேலையில் இறங்கியது. பாறைக்குப் பக்கத்திலே கரைபுரண்டு ஓடும் ஆறு. கொஞ்சம் தவறினாலும் ஆற்றிலேதான் விழ வேண்டும். தண்ணீரின் வேகம், விழுந்தவனை எங்கே கொண்டுபோய்ச் சேர்க்கும் என்று எவருக்குமே தெரியாது! இந்த ஆபத்தான சூழ் நிலையில்தான், குறுக்கே நந்தி மாதிரி இருந்த அந்தப் பெரும் பாறையை உடைக்கும் வேலையில் நாங்கள் இறங்கினோம். நாங்கள் கொஞ்சமும் எதிர்பார்க்காதபோது, திடீரென்று பாறை படாரென்று வெடித்தது. நாங்கள் தூக்கி எறியப்பட்டோம்!’

இதைப் படித்தபோது மணிமொழியின் கரங்கள் நடுங்கின!

**ம**ணிமொழி தொடர்ந்து கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள்..



‘நாங்கள் மூவரும் தூக்கி எறியப்பட்டோமல்லவா? மற்ற இருவரும் எங்கே போய் விழுந்தார்கள், என்ன ஆனார்கள் என்பது எனக்குத் தெரியாது! எனக்கு உணர்ச்சி வந்துவிட்டதாக நான் நினைத்த நேரத்தில், விழிகளைத் திறக்க முயன்றேன். முடியவில்லை மணிமொழி!

நான் கைகளால் தொட்டுப் பார்த்ததில், ஒரு கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கிடப்பதைப் போலிருந்தது. அப்போது ஒரு குரல் சொல்லிற்று... ‘‘ஐயா, இப்போது நீங்கள் ஓர் ஏழைச் சலவைத் தொழிலாளியின் எளிய வீட்டில் இருக்கிறீர்கள்.

*இந்த இடம் பங்ராநங்கல் அணைக்கட்டிலிருந்து **9** மைல் தூரத்தில், ஆற்றோரத்தில் இருக்கிறது. நான், என் மனைவி, மூன்று பேர்தாம் இந்த வீட்டில். ஐயா, சில நாட்களுக்கு முன்பு ஆற்றில் ஒரு கட்டையின்மேல் நீங்கள் மிதந்து வந்தீர்கள். கரையில் துணி துவைத்துக் கொண்டிருந்த நாங்கள் உங்களைத் தூக்கி வந்து காப்பாற்றி, எங்கள் வீட்டுக்குக் கொண்டு வந்தோம். உங்கள் மண்டை லேசாகப் பிளந்திருக்கிறது! வைத்தியர் மருந்து போட்டுக் கட்டியிருக்கிறார். தங்கள் உடம்பில் பல இடங்களில் காயம். உங்களைப் பற்றி எங்களுக்கு எதுவுமே தெரியவில்லை! யாரிடம் விசாரிப்பது என்றும் புரியவில்லை. நீங்கள் யார்? உங்கள் வீடு எங்கே இருக்கிறது? சொன்னால் கொண்டு போய் விட்டு விடுகிறோம்.''*

*நான் அவனுக்குப் பதில் சொல்ல வாயைத் திறந்தேன். ஆனால், மறுபடியும் நினைவை இழந்துவிட்டேன்.*

*மீண்டும் சில நாட்களுக்குப் பிறகு, எனக்கு உணர்வு வந்த போது நான் சர்க்கார் ஆஸ்பத்திரி ஒன்றில் இருப்பதை உணர்ந்தேன். என்னைச் சுற்றிலும் என்னோடு வேலை செய்யும் நண்பர்கள் இருந்தார்கள் என்பதை அவர்களது குரல்களின் மூலம் உணர்ந்தேன். 'தூக்கி எறியப்பட்ட உங்கள் மூன்று பேரில் உன்னைத் தவிர மற்ற இருவரும் கரையோரத்திலே அடிபட்டுச் செத்துக் கிடந்தார்கள். அவர்களை எடுத்து அடக்கம் செய்துவிட்டோம். உன்னை மட்டும் காணோம். நீ ஆற்றோடு போய்விட்டாய் என்று முடிவு செய்தோம். பஞ்சாப் அரசினர், நீ இறந்து போனாய் என்று முடிவு செய்து, உன் மனைவிக்கும், பெற்றோருக்கும் செய்தி தந்து, உன் மனைவியையும் குழந்தையையும் உன் பெற்றோரிடம் அனுப்பி விட்டார்கள். அதற்குப் பிறகு பல நாட்கள் கழித்துதான், நீ இங்கிருந்து **9** மைல்களுக்கப்பால் உள்ள ஒரு கிராமத்தில் இருக்கிறாய் என்று தெரிந்தது. உடனே உன்னை இங்கே கொண்டு வந்து சேர்த்தோம்' என்று அவர்கள் சொன்னார்கள்.*

*கடைசியில் சொல்கிறேன், கடைசியில் சொல்கிறேன் என்று சொல்லிக்கொண்டு வந்தேனே, இதோ சொல்லி விட்டேன்... நான் பார்வையை இழந்துவிட்டேன் மணிமொழி! இன்னும் பத்து தினங்களில் கண்டிப்பாக நான் அங்கு இருப்பேன்!*

*உன் காதலன், தி.அரசு.'*

*கடிதத்தைப் படித்து முடித்ததும் ஓவென்று வாய்விட்டு அழப் போனாள் மணிமொழி. அப்போது, படபடவென்று வெளியே பல பேர் சேர்ந்தாற் போல் கதவைத் தட்டினார்கள். மணிமொழி அசையவில்லை. அப்படியே கட்டிலில் கிடந்தாள். வெளியே மாமனார், மாமியார், முத்தழகு, பாவை, டாக்டர், சிவகாமி, சிவகாமியின் அப்பா, சிவகாமியின் அம்மா எல்லாரும் நின்றுகொண்டிருந்தார்கள்.*

*''அண்ணி... அண்ணி!'' என்று முத்தழகு கத்திக் கத்திக் கதவைத் தட்டினான். உள்ளே ஓவென்று மணிமொழி வாய் விட்டு அழுவது கேட்டது.*

## அண்ணியைவிட அழகி ஒருத்தி உண்டா?

சில தினங்களுக்குப் பிறகு முத்தழகு, அத்தை வீட்டிற்குள் நுழைந்தான். முன்னால் செடிக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டு இருந்த சிவகாமியின் அப்பா, "என்னடா முத்தழகு, அண்ணனிடமிருந்து தந்தி வந்து விட்டதா?" என்று கேட்டார்.

"வந்துவிட்டது மாமா. வியாழக்கிழமை காலையில் **6** மணிக்கு வரும் விமானத்தில் வருகிறார். நாங்களெல்லாம் விமான நிலையத்துக்குப் போகிறோம். நீங்களும் வந்து விடுங்கள் மாமா!" என்ற முத்தழகு, "சிவகாமி எங்கே?" என்று கேட்டான்.

"அவள் இன்னும் எழுந்திருக்கவில்லை. தன் அறையில் தூங்கிக் கொண்டிருக்கிறாள்" என்றார் சிவகாமியின் அப்பா.

உள்ளே சென்றான் முத்தழகு. சிவகாமியின் படுக்கை அறைக் கதவு சும்மா சாத்தியிருந்தது. அதைத் திறக்கலாமா, வேண்டாமா என்று எண்ணிய முத்தழகு, திறக்கக்கூடாது என்று முடிவு செய்து சமையலறைக்கு வந்தான்.

சிவகாமியின் அம்மா முத்தழகைப் பார்த்ததும், "வா தம்பி, அபூர்வமாக இருக்கிறதே! என்ன விசேஷம்?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை அத்தை, சிவகாமியைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன். தூங்கிக்கொண்டு இருக்கிறாள்" என்றான் முத்தழகு.

"தூங்கினால் என்ன, எழுப்பு! நீ எழுப்புவதற்கு என்ன, போ தம்பி, போய் எழுப்பு!" என்றாள் சிவகாமியின் அம்மா.

"சரி அத்தை" என்று சொல்லிவிட்டு வந்து, சிவகாமி தூங்கும் அறைக் கதவை மெல் லத் திறந்து பார்த்தான் முத்தழகு. சிவகாமி அலங்கோலமாகப் படுக்கையில் தன்னை மறந்து தூங்கிக்கொண்டிருந்தாள். முத்தழகு அவள் அருகில் சென்று, "சிவகாமி, சிவகாமி!" என்றான். அவள் எழுந்திருக்க வில்லை. மெல்ல அவள் தோளைத் தொட்டு, "சிவகாமி!" என்றான்.



சிவகாமி திடுக்கிட்டு எழுந்து தன் ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு, கண் விழித்துப் பார்த்தாள்.

*“என்ன அத்தான், நீங்களா? நான் யாரோ என்று பயந்து போனேன்!” என்று சோம்பல் முறித்தாள்.*

*“சிவகாமி, உன்னோடு கொஞ்சம் பேச வேண்டும்!”*

*“பெரிய அத்தான் வரப் போகிறாரே, அது பற்றியா? இல்லை, நம்முடைய கல்யாண விஷயம் பற்றியா?”*

*“கல்யாண விஷயமா?”*

*“ஆமாம் அத்தான், உங்களுக்கும் எனக்கும் கல்யாணம்!”*

*“நல்ல கதை! எனக்கும் கல்யாணம் நடக்கப்போகிறது, உனக்கும் கல்யாணம் நடக்கப் போகிறது! ஆனால், எனக்குப் பெண் வேறு; உனக்கு மாப்பிள்ளை வேறு!”*

*“அத்தான்! நீங்கள் விளையாடுகிறீர்கள்!” என்று சிணுங்கினாள் சிவகாமி.*

*“விளையாடவில்லை. சரி, எழுந்து புடவையை மாற்றிக் கொண்டு வா! கொஞ்சம் வெளியே போய் வருவோம்.” என்றான் முத்தழகு.*

*“இருங்கள் அத்தான், இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்” என்று சிவகாமி வெளியே போனாள்.*

*முத்தழகு அவளின் படுக்கையில் கிடந்த ஆங்கில புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். அது பேராசிரியர் ‘ஸ்மைல்ஸ்’ எழுதிய ‘கடமை’ என்ற புத்தகம்.*

*‘நன்கு கற்றவர்கள் மட்டுமே படிக்கக்கூடிய இந்தப் புத்தகத்தைச் சிவகாமி படிக்கிறாளே! அப்படியானால், அவள் அறிவு ஒளி பெற்று வருகிறதா? சிவகாமி இம்மாதிரி ஒரு புத்தகத்தைப் படிக்கும் பண்பினள் என்பதை எண்ணிக்கூடப் பார்க்கவில்லையே நான்!’ என்று எண்ணிக்கொண்டே புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டினான் முத்தழகு.*

*அதனுள்ளிருந்து ஒரு புகைப்படம் தரையில் விழுந்தது. அது அண்ணன் அரசுவின் படம்!*

*அதற்குள் யாரோ வரும் காலடி ஓசை கேட்க, புகைப்படத்தை எடுத்த இடத்திலேயே வைத்துப் புத்தகத்தை மூடி, இருந்த இடத்தில் வைத்து விட்டான் முத்தழகு.*

*வந்தது சிவகாமிதான்.*

*அவளைப் பார்த்ததும், “சிவகாமி, நீ மாறிவிட்டாய்!” என்றான் முத்தழகு. இதைச் சொல்லும்போது, திடீரென்று முத்தழகின் கண்கள் இரண்டும் கலங்கிவிட்டன. அதை அவள் அறியாதவாறு சட்டென்று தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.*

"உண்மைதான் அத்தான்! நான் கூச்சம் என்பதே ஒரு சிறிதும் இல்லாதவள் என்று நீங்கள் என்னை அடிக்கடி சொல்வீர்கள். ஆனால், நான் உங்களைத் தவிர, என் அப்பா அம்மாவைத் தவிர, மற்றவர்களிடமெல்லாம் பெரும் அடக்கமுள்ள பெண்ணாகத்தான் நடந்து வருகிறேன். முன்பு நீங்கள் கண்ட சிவகாமி வேறு; இப்போது நீங்கள் காணுகிற சிவகாமி வேறு! ஆளைக் கொட்டும் தேளாக இருந்த நான், மீண்டும் அன்பு காட்டும் அணிலாக மாறிவிட்டேன் அத்தான்!" என்றாள் சிவகாமி. இதைச் சொல்லிவிட்டு அவளும் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் கண்களிலும் கண்ணீர்!

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு இருவரும் வெளியே வந்தார்கள்.

சிவகாமிக்கு நன்றாகக் கார் ஓட்டத் தெரியும். அதனால், காரேஜுக்குப் போய் அவளே காரை எடுத்துக்கொண்டு வந்தாள். சிவகாமிக்குப் பக்கத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டான் முத்தழகு. கார் புறப்பட்டது.

வாயிலுக்கு வந்ததும் டக் கென்று காரை நிறுத்தினாள் சிவகாமி!

அங்கே நெற்றியில் பெரும் திலகமிட்டுப் பச்சைப் பட்டுப் புடவை உடுத்தி வெள்ளைச் சோளி அணிந்து புத்தம் புது மலர் போல் ஒளியுடன் நின்று கொண்டிருந்தாள் மணிமொழி!

**வா**யிலில் வனதேவதை போல் நின்றுகொண்டு இருந்த அண்ணியைக் கண்டதும் முத்தழகு திடுக்கிட்டான். காரை விட்டுக் கீழே இறங்கி, "என்ன அண்ணி, இந்த நேரத்தில் இங்கே..?" என்று கேட்டான்.

"அவர் வியாழக்கிழமையன்று வர இருப்பதை இங்கு எல்லாருக்கும் சொல்லிவிட்டுப் போகலா மென்று வந்தேன்" என்றாள் மணிமொழி.

முத்தழகு இங்கே இருப்பான் என மணிமொழி எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. அதனால் அவள் முத்தழுகைப் பார்த்ததும், கொஞ்சம் பயந்தாள்.

"வேறொன்றும் இல்லையே அண்ணி?"



"இல்லை, நான் உள்ளே போய்ச் சொல்லிவிட்டுப் போகிறேன். நீங்கள் புறப்படுங்கள்!"

"சரி அண்ணி" என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறிச் சிவகாமிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கதவைச் சாத்திக் கொண்டான் முத்தழகு.

கார் புறப்பட்டது.

நுங்கம்பாக்கத்தைத் தாண்டியதும், "அத்தான், எங்கே போகட்டும்?" என்று கேட்டாள் சிவகாமி.

"உனக்கு எந்தக் கடற்கரை பிடிக்கிறதோ, அங்கே போ" என்றான் முத்தழகு.

*‘‘எனக்கு அடையாறு கடற்கரைதான் பிடிக்கும்!’’*

*‘‘சரி, அங்கேயே போ!’’*

*கார் விரைந்தது.*

*கடற்கரை வந்தது. காரை ஓரமாக நிறுத்திவிட்டு, ‘‘அத்தான்! இறங்குங்கள்’’ என்று சொல்லிக் கொண்டே சிவகாமி கீழே இறங்கினாள்.*

*இருவரும், மேலதிகாரிகள் தங்களுக்கென்று கடற்கரையோரமாகக் கட்டிவிட்டிருக்கும் சிறு வீடுகளைத் தாண்டி, மணல் ஓரத்திலிருந்த ஒரு மரத்தடியில் வந்து உட்கார்ந்தார்கள்.*

*‘‘சிவகாமி, மனம்விட்டு உன்னிடம் சில விஷயங்களைச் சொல்லலாமென்றிருக்கிறேன்.’’*

*‘‘சொல்லுங்கள் அத்தான்!’’*

*‘‘உன் திருமணம் பற்றிப் பேசப்போகிறேன். நீ கல்யாணம் செய்துகொள்ள வேண்டியதுதானே?’’*

*‘‘கண்டிப்பாக. ஆனால் யாரை என்பதுதான் தெரியவில்லை. நான் சன்னியாசினியாக வாழ விரும்பவில்லை. கல்யாணம் செய்துகொண்டு கணவனோடு வாழவே ஆசைப்படுகிறேன். ஆனால், அந்தக் கணவனும் என்னோடு, என் தாய் தந்தையரோடே இருக்கவேண்டும். இதுதான் என் ஆசை.’’*

*‘‘இது நடக்கக்கூடியதுதானே சிவகாமி! நீ பணக்காரி. ஆகையால், உன்னைக் கல்யாணம் செய்துகொள்பவன் உன் பக்கத்திலேயே இருப்பானே!’’*

*இதைச் சொல்லிவிட்டுச் சிரித்தான் முத்தழகு.*

*பிறகு, ‘‘நீ யாரைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று நான் சொல்லட்டுமா?’’ என்று கேட்டான்.*

*‘‘அத்தான்! நீங்கள் பெண் உரிமையைப் பறிக்கிறீர்கள். படித்தவர்களாகிய நீங்களே இப்படிச் செய்யலாமா? ‘யாரைக் கல்யாணம் செய்து கொள்ள நீ விரும்புகிறாய்?’ என்று கேளுங்கள். அது நாகரிகம்!’’ என்றாள் சிவகாமி.*

*‘‘அதற்கு நீ என்ன பதில் சொல்வாய் என்று எனக்குத் தெரியும் சிவகாமி!’’*

*‘‘இல்லை அத்தான்! உங்களுக்குத் தெரியாது. என் பதிலைக் கேட்டால் நீங்கள் திடுக்கிடுவீர்கள்!’’*

*‘‘அப்படியா? சரி, பதில் சொல்லி என்னைத் திடுக்கிட வை பார்க்கலாம். யாரைக் கல்யாணம் செய்து கொள்ள நீ விரும்புகிறாய்?’’ என்று கேட்டான் முத்தழகு.*

"உங்கள் சகோதரரை! பெரிய அத்தானை!"

இந்த எதிர்பாராத பதிலைக் கேட்டதும், உண்மையிலேயே திடுக்கிட்டான் முத்தழகு.

"சிவகாமி! என்ன சொல் கிறாய்?"

"அத்தான், நான்தான் சொன்னேனே, என் பதிலைக் கேட்டால் நீங்கள் திடுக்கிடு வீர்கள் என்று!"

"உன் பதில் உண்மையானதா சிவகாமி?"



"அத்தான், பெண்கள் சத்தியம் செய்யக்கூடாது என்று சொல்வார்கள். இருந்தாலும் நான் சொல்கிறேன்... சத்திய மாகப் பெரிய அத்தானைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் என் விருப்பம்."

"சிவகாமி, இது சாத்தியமா?"

"அத்தான், ஒருத்திக்கு ஓர் ஆசை பிறக்கும்போது, அது நிறைவேறுமா நிறைவேறாதா என்று எண்ணிப் பார்ப்பது இல்லை. ஆசை என்பது உடனே பிறப்பது; ஆராய்ச்சி என்பது அப்புறம் ஏற்படுவது. நான் ஆசைப்பட்டதோடு நிற்கிறேன். இன்னும் ஆராய்ச்சிக்கு வரவில்லை!"

இதைக் கேட்டதும் முத்தழகு தலையைக் குனிந்து கொண்டு மணலில் கிறுக்கிக் கொண்டு இருந்தான்.

சிவகாமி கையை நீட்டி முத்தழகின் பையிலிருந்த கைக் குட்டையை எடுத்து முத்தழகின் நெற்றியைத் துடைத்து விட்டு, மீண்டும் அதை முத்தழகின் பையிலேயே வைத்தாள்.

முத்தழகு சிவகாமியை நிமிர்ந்து பார்த்தான். பின்பு அவள் அருகில் நெருங்கி உட்கார்ந்து, "உன்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருந்தேன் சிவகாமி" என்றான்.

"இப்போது?" என்று கேட்டுக்கொண்டே முத்தழகின் தலையில் கிடந்த இலையைத் தள்ளினாள் சிவகாமி.

"உன்னை இப்போதுதான் முழுதாகப் புரிந்துகொண்டேன் சிவகாமி" என்றான் முத்தழகு.

*“அப்படியா? முன்பு என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைத்திருந்தீர்கள்? இப்போது என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?”*

*“முன்பு கைக்குழந்தை என்று கருதினேன். இப்போது கற்றறிந்தவள் என்று கருதுகிறேன்.”*

*“எப்படியோ, கைக்குழந்தை என்று சொல்லி அன்று என்னைக் கல்யாணம் செய்து கொள்ள மறுத்தீர்கள். கற்றறிந்தவள் என்று சொல்லி இன்று என்னைக் கல்யாணம் செய்து கொள்ள மறுக்கிறீர்கள்!”*

*“அன்று மறுத்தேன்; இன்று மறுக்கவில்லை!”*

*“அத்தான்...!”*

*“சிவகாமி, உன்னை நான் ஏற்றுக்கொள்வதற்கு என் வாக்கு ஒன்று தடையாக இருக்கிறது!”*

*“இல்லை அத்தான், பெரிய அத்தானைத்தான் நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்.”*

*“அவருக்குப் பார்வை இல்லையே!”*

*“அந்தக் கண்கள்தாம் அவர் என்னைக் கல்யாணம் செய்து கொள்வதற்குத் தடையாக இருந்தன என்பது உங்களுக்குத் தெரியுமா?”*

*“சிவகாமி!”*

*“அத்தான், நான் அழகாய் இல்லை என்பதால்தான் என்னைப் பெரிய அத்தானும் கல்யாணம் செய்துகொள்ள மறுத்தார். நீங்களும் மறுத்தீர்கள்!”*

*“சிவகாமி...!”*

*“இப்போது கண்கள் இல்லாத பெரிய அத்தான் என்னை மணப்பார்; மறுக்கமாட்டார்!”*

*“சிவகாமி, உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?”*

*“இல்லை அத்தான்! இப்போதுதான் பைத்தியம் தெளிந்திருக்கிறது.”*

*“சிவகாமி, அண்ணனுக்குக் கல்யாணமாகிவிட்டது!”*

*“அதனாலென்ன... இரண்டாவது கல்யாணம் செய்து கொள்கிறவர்கள் இல்லையா?”*

*“அது சட்டப்படி குற்றம்.”*

"சட்டத்திற்கு அப்பால் வாழுகிறவர்கள் இந்த நாட்டில் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்களே அத்தான்!"

"அண்ணன் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள மறுத்தால்..?"

"நீங்கள் இருக்கிறீர்களே!"

இதைக் கேட்டதும் அப்படியே கண்களை மூடிக்கொண்டு மணலில் மல்லாந்து படுத்தான் முத்தழகு. அவன் கடைவிழிகளில் நீர் கசிந்தது.

சிவகாமி எதிரே விரிந்து கிடந்த கடலைப் பார்த்தாள். கடல் கலங்கிக் கிடந்தது, அவள் கண்களைப் போல... அவள் கருத்தைப் போல!

நீண்ட நேரம் அப்படியே உட்கார்ந்திருந்த சிவகாமி, மணலில் மல்லாந்து கிடக்கும் முத்தழகைப் பார்த்தாள்.

தன் சேலைத் தலைப்பால் முத்தழகின் நெற்றியில் அரும்பி நின்ற வேர்வைத் துளிகளைத் துடைத்துவிட்டு, "அத்தான், வெயில் அதிகமாகிக்கொண்டு இருக்கிறது. வீட்டிற்குப் போகலாமா?" என்று கேட்டாள்.

முத்தழகு எழுந்து உட்கார்ந்து கொண்டு, "சிவகாமி, திடீரென்று இதைச் சொல்வதற்கு என்னை நீ பொறுத்துக் கொள். உன்னை என் நண்பன் தங்க துரைக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன் என்று நான் வாக்கு கொடுத்திருக்கிறேன்!"

"இந்த வாக்குதான் என்னை நீங்கள் கல்யாணம் செய்து கொள்ளத் தடையாக இருக்கிறது என்றீர்களா? ஆனால், நீங்கள் வாக்கு கொடுத்திருக்கவே மாட்டீர்கள். உங்களை எனக்குத் தெரியாதா? என் கருத்தைத் தெரிந்துகொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்திருப்பீர்கள். இப்பொழுதுதான் தெரிந்து கொண்டு விட்டீர்களே! போகலாமா?" என்று எழுந்தாள் சிவகாமி.

"இரு சிவகாமி, போகலாம்" என்று, எழுந்த சிவகாமியைக் கையைப் பிடித்து உட்கார வைத்தான் முத்தழகு.

இது, சிவகாமிக்கு வியப்பைத் தந்தது. அவள் உட்கார்ந்தாள்.

"சிவகாமி, அண்ணி உன் வீட்டிற்கு வந்தார்களே, எதற்கு?"

"அதுதான் சொன்னார்களே, பெரிய அத்தான் வரப்போவதை என் அப்பாவிடமும் அம்மாவிடமும் சொல்லிவிட்டுப் போவதற்காக வந்தேன் என்று."

"எனக்கென்னவோ அதில் நம்பிக்கை இல்லை சிவகாமி!"

"ஏன்? உங்கள் அண்ணியை நீங்கள் சந்தேகிக்கிறீர்களா?"

"சந்தேகிக்கவில்லை. அவர்களை நினைக்கும்போது எனக்கு..."

“என்ன உங்களுக்கு?”

“அண்ணி நெற்றியில் பெரும் திலகமிட்டுப் பச்சைப் பட்டுப் புடவை உடுத்தி வெள்ளைச் சோளி அணிந்து நிற்கிற அழகைப் பார்க்க அண்ணனுக்குக் கொடுத்து வைக்கவில்லையே!” என்றான் முத்தழகு.

“உண்மைதான் அத்தான்! உங்கள் அண்ணியைவிட அழகி ஒருத்தி உண்டோ?” என்றாள் சிவகாமி.



**மு**த்தழகு கைகளிலிருந்த மணலைத் தட்டிவிட்டு எழுந்து நின்று, “வெயில் வந்துவிட்டது. எழுந்திரு சிவகாமி, வீட்டிற்குப் போகலாம்” என்று தன் கையை நீட்டினான். அவன் கையைப் பிடித்துக்கொண்டு சிவகாமி எழுந்தாள். இருவரும் நடந்தார்கள்.

முத்தழகு, “உண்மைதான் சிவகாமி, நீ சொன்னது! ஆனால், அதை நான் சொல்லலாமோ, கூடாதோ? இருந்தாலும் உன்னிடம் சொல்லலாம் என்றுதான் தோன்றுகிறது. ‘அண்ணியைவிட அழகி ஒருத்தி உண்டோ?’ என்ற வினாவுக்கு ‘இல்லை’ என்பதுதான் விடை” என்றான்.

தொடர்ந்து, “சிவகாமி, என் வாழ்வில் நான் உன்னிடம் மனம் திறந்து பேசியதைப் போல, இதுவரை வேறு எவரிடமும் பேசியதில்லை. இப்போது இன்னொன்றையும் துணிந்து உன்னிடம் சொல்லலாமா என்று நினைக்கிறேன். நீ என்னிடம் துணிந்து சொன்னதைப் போல!” என்று சொல்லிவிட்டு, சிவகாமியின் முகத்தைப் பார்த்தான் முத்தழகு.

“சொல்லுங்கள் அத்தான்” என்றாள் சிவகாமி.

“நீ எப்படி அண்ணனைத்தான் கல்யாணம் செய்துகொள்வேன் என்று சொல்கிறாயோ, அதைப் போல...”

“உம்... சொல்லுங்கள்.!”

“நான் அண்ணியைக் கல்யாணம் செய்துகொள்ளலாமா என்று பார்க்கிறேன்.” - இதைச் சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான் முத்தழகு.

சிவகாமி சிரித்தாள். “அத்தான், ஒரு தமிழன் இரண்டு தமிழச்சிகளைத் திருமணம் செய்துகொள்ளும் பழக்கம் சட்டத்தில் இல்லாவிட்டாலும், பழக்கத்தில் இன்னும் இருக்கிறது. ஆனால், திருமணமான ஒரு பெண்ணை, அவளின் கணவன் இருக்கும்போதே வேறு ஒருவர் கல்யாணம் செய்து கொள்வது என்பது...”

“கல்யாணமான என் அண்ணனை நீ கல்யாணம் செய்து கொள்ளலாம்; கல்யாணமான என் அண்ணியை நான் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாதா?

ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்று இருப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது!'' என்று கத்தினான் முத்தழகு. அதே நேரத்தில் அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

சிவகாமி எதுவும் பேசாமல், காரின் பின் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்து, கதவைச் சாத்திக் கொண்டாள். அதைப் பார்த்ததும் முத்தழகுக்கு...

மணிமொழியை அழைத்து வர விமான நிலையத்திற்குப் போனதும், மணிமொழி சிரித்துக் கொண்டே முன் பக்கத்துக் கதவைத் திறந்துகொண்டு தனக்கருகில் வந்து உட்கார்ந்ததைப் பார்த்துத் திடுக்கிட்டதும், 'அண்ணி, பின்னால் உட்கார்ந்து கொண்டால் உங்களுக்குச் சௌகரியமாக இருக்குமே' என்று சொன்னதும், 'ஆகட்டும்' என்று மணிமொழி இறங்கிப் பின் கதவைத் திறந்து உட்கார்ந்து கொண்டதும் நினைவுக்கு வந்தது.

'மணிமொழியைப் பின்னால் போய் உட்காரும்படி நான் சொன்னேன். ஆனால், நான் ஏதும் சொல்லாமலிருக்கும் போது சிவகாமி அவளாகவே பின்னால் போய் உட்கார்ந்து விட்டாளே' என்று எண்ணிய முத்தழகு, தன் கைக்குட்டையை எடுத்து நெற்றியில் அரும்பி நின்ற வேர்வையைத் துடைத்து விட்டுக்கொண்டு, காரைக் கிளப்பினான். கார் பறந்தது.

## மணிமொழி மயங்கினாள்!

'விடிந்தால் வியாழக்கிழமை. காலை ஆறு மணிக்கெல்லாம் விமானம் வந்துவிடும். அரசு வந்துவிடுவார்...'

இரவு மணி ஒன்று. மணி மொழி தூங்கவே இல்லை அவள் மனம் என்னென்னவோ எண்ணியது.

'நான் அரசுவின் மனைவி இல்லை. ஆனால், அவர் இந்த வீட்டிற்கு வந்துவிட்டால், நான் அவருடைய மனைவி போல நடிக்கவேண்டும். அப்படி நடிக்கப்போய், உண்மையிலேயே நான் அவர் மனைவியாகிவிட்டால்...''



மணிமொழி எழுந்து, படுக்கையை விட்டுத் தள்ளி, அறையுள் உலவினாள்.

'அல்லது, என் குரலையும் பேச்சையும் கேட்டு, எனக்கு எதுவும் தெரியாததை அறிந்து, நீ என் மனைவி இல்லை என்று அரசு என்னைத் தள்ளி விட்டால்...'

மணிமொழி கதவைத் திறந்தாள். கூடத்தில் எவரும் இல்லை. தோட்டத்திற்கு வந்தாள்.

நல்ல நிலவு. எங்கும் வெளிச்சம்! எந்தச் சப்போட்டா மரத்தடியில் உட்கார்ந்து, மணி மொழிக்கு அரசு எழுதிய கடிதத்தை அவள் படித்தாளோ, அதே மரத்தடிக்கு வந்து அமைதியாக உட்கார்ந்து கொண்டாள் மணிமொழி.

'நானும் இவர்களோடு சேர்ந்து, விடிந்ததும் விமான நிலையத்திற்குப் போனால், அரசு விமானத்தை விட்டு இறங்கியதும் என்னைக் கட்டிக் கொண்டு அழுவார்; கதறுவார்! என்னை அவர் கட்டிக்கொள்ளும் பொழுது நான் சும்மா இருப்பதா? அவரோடு சேர்ந்து என்னால் அழ முடியுமா? அரசுவின் மனைவியாக நடித்து எத்தனை நாட்களுக்கு நான் காலம் தள்ள முடியும்?!''

இந்த நேரத்தில் மணி மொழிக்கு, முத்தழகின் மாடிச் சன்னல் அறையைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. நிமிர்ந்து பார்த்தாள். முத்தழகின் அறை விளக்கு எரிந்துகொண்டிருந்தது. மாடிச் சன்னல் வழியாக முத்தழகு மணிமொழியைப் பார்த்துக் கொண்டிருந்தான். மணிமொழி திடுக்கிட்டாள்.

மெல்லத் தலையைக் குனிந்துகொண்டே உள்ளே வந்து, தன் அறைக்குள் நுழைந்து, கதவைச் சும்மா சாத்தி வைத்துவிட்டுப் படுக்கையில் விழுந்தாள்.

இவ்வளவு நெருக்கடியான வேதனை நிலை அவள் வாழ்வில் ஏற்பட்டதே இல்லை. மணிமொழி மிக மயக்கம் கொண்டிருந்ததால் அறைக் கதவைத் தாழிட மறந்து போனாளா? அல்லது, முத்தழகு வருவான் என்றுதான் கதவைச் சும்மா சாத்தி வைத்திருக்கிறாளா?

மரத்தடியைவிட்டு மணிமொழி எழுந்து போனதை முத்தழகு பார்த்தான். எந்த முடிவுக்கும் அவன் வரவில்லை. விளக்கு வெளிச்சத்தில் அறையில் கொஞ்ச நேரம் உலவினான். பிறகு மெல்ல மாடிப்படிகளில் இறங்கிக் கீழே கூடத்திற்கு வந்தான். ஓசைப்படாமல் மணிமொழியின் அறைக் கதவுக்கு அருகில் வந்து நின்று, ‘‘அண்ணி... அண்ணி’’ என்றபடி கதவில் கை வைத்தான். கதவு திறந்து கொண்டது.

முத்தழகு அறைக்குள் வந்து சுவிட்சைப் போட்டான். விளக்கு எரிந்தது. படுக்கையில் மணிமொழி இல்லை. அறையில் மணிமொழி இல்லை.

‘மறுபடியும் தோட்டத்திற்குப் போய்விட்டாளோ!’ என்று எண்ணி விளக்கை அணைக்கப் போன முத்தழகின் கண்களுக்குத் தலையணையின் மேல் ஒரு கடிதம் மடித்து வைக்கப் பட்டிருந்தது தெரிந்தது.

அதைத் தாவி எடுத்துப் படித்தான் முத்தழகு.

‘என் கனிவுமிக்க காதலருக்கு, என் முழுமதி முத்தழகு அத்தானுக்கு...’ என்று தொடங்கியது கடிதம். ஐந்து பக்கங்கள் கொண்ட அந்தக் கடிதத்தின் இறுதி வரியைப் பார்த்தான்.

‘உங்கள் காதலி, கல்யாண மாகாத மணிமொழி’ என்று இருந்தது.

பரபரப்பான முத்தழகு, கட்டிலில் உட்கார்ந்து கடிதத்தை நிதானமாகப் படிக்கத் தொடங்கினான்.

‘‘அத்தான், நீங்கள் என்னை ‘அண்ணி’ என்றழைத்திட்ட போதெல்லாம் நான் எத்தகைய வேதனை கொண்டேன் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். நான் கல்யாணமாகாதவள். கன்னிப்பெண்ணுக்குக் குழந்தையா என்று கேட்காதீர்கள். குழந்தை உங்கள் அண்ணனுடைய குழந்தைதான். ஆனால், நான் உங்கள் அண்ணனின் மனைவி அல்லள்.

நான் பம்பாயில் வாழ்ந்தவள். எனக்கு அம்மா இல்லை. அப்பா இருக்கிறார். பம்பாய் மலபார் ஹில்ஸில் சுடப்பட்ட கேசவதாஸ் வழக்குச் சம்பந்தமாகத் தலைமறைவாக இருக்கிறார். அதற்கு முன் என்னைச் சென்னைக்குத் திடீரென்று விமானத்தில் ஏற்றிவிட்டார்.

விமானத்தில் உங்கள் உண்மையான அண்ணியையும் அவள் மடியிலிருந்த குழந்தையையும் நான் பார்த்தேன். உங்கள் உண்மையான அண்ணியின் பெயரும் மணிமொழிதான். இதுவரை ஏற்பட்டிருக்கிற இந்த மயக்கங்களுக்கெல்லாம்

காரணம், மணிமொழி என்ற பெயர்தான்...'' என்று விரிவாக அத்தனை விஷயங்களையும் ஒன்றுவிடாமல் எழுதியிருந்தாள் மணிமொழி.

இறுதியில், ''தங்கதுரையை நம்பாதீர்கள். அவன் உங்களுக்கு மட்டுமல்ல, நம் எல்லோருக்குமே வில்லன்தான். தங்கதுரையால் சிவகாமி இதுவரை கெட வில்லை. இனியும் கெடாமலிருக்கும்படி தாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். தங்கதுரை இனி சிவகாமி வீட்டிற்கோ, உங்கள் வீட்டிற்கோ வராமலிருப்பது நல்லது. பாம்பு வந்தால், அது பிறரைக் கடிப்பதும் உண்டு; அடிபட்டுச் சாவதும் உண்டு. இதைத் தாங்கள் அறியாதவர்களா அத்தான்?'' என்று முடித்திருந்தாள்.

கடிதத்தை மடித்துப் பையில் வைத்துக்கொண்டு, விளக்கை அணைத்துவிட்டுக் கதவைச் சாத்திவிட்டுக் கூடத்தைத் தாண்டித் தோட்டத்திற்கு வந்தான் முத்தழகு.

அங்கே... **எ**வருமே இல்லை.

முத்தழகு தோட்டமெங்கும் சுற்றிப் பார்த்தான். எங்கும், எவரும் இல்லை! நிலவு வெளிச்சத்தில் நின்று மீண்டும் மணிமொழி எழுதிய கடிதத்தைப் படித்தான்.



'அத்தான்! நான் போகிறேன். எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வந்த நான், எவரிடமும் சொல்லிக் கொள்ளாமலே போகிறேன். வந்ததும் உங்களைக் கண்டேன். போகும்போதும் உங்களைக் கண்டேன். அது போதும் எனக்கு.

உங்கள் காதலி, கல்யாணமாகாத மணிமொழி.'

கடிதத்தைப் படித்ததும், அப்படியே கண்களை மூடிக் கொண்டான் முத்தழகு.

'முத்தழகு, மணிமொழியைப் போன்ற ஒரு பெண் உனக்கு வேண்டும் என்று நினைத்தாய். அவளே உனக்குக் கிடைத்து விட்டாள், கல்யாணமாகாத கன்னிப் பெண்ணாக! ஓடு, ஓடு! மணிமொழியைத் தேடு! மணமகனாக அவளை நாடு!'

## பெரிய ஐயா யார்?

கையில் ஒரு பெட்டியுடன் தன்னந்தனியாக வெளிச்சம் கலந்த இருளில் நடந்து கொண்டிருந்தாள் மணிமொழி. அவள் கையிலிருக்கும் தோல் பெட்டி, அவள் பம்பாயிலிருந்து தன் சேலை துணிமணிகளை வைத்துக்கொண்டு வந்த அவளுடைய சொந்தப் பெட்டி.

தெருவில் எவருமே இல்லை. மணிமொழி அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே விரைந்து நடந்துகொண்டிருந்தாள். நேரமாக ஆக, அவள் நடையில் வேகம் மிகுந்தது.

கார் ஒன்று வரும் ஓசை கேட்டது. மணிமொழி, சட்டென்று தன் சேலைத் தலைப்பை எடுத்துத் தலையில் போட்டுக் கொண்டாள். வந்த கார் அவளைத் தாண்டிச் சென்றுவிட்டது. கொஞ்சம் மன அமைதி கொண்ட மணிமொழி, இன்னும் விரைந்து நடந்தாள்.

திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்துகொண்டு இருந்த மணிமொழிக்கு, எதையோ வீட்டில் விட்டு விட்டு வந்த மன நிலையே இருந்தது.

மீண்டும் பின்னால் கார் வரும் ஓசை. மணிமொழி இயல்பாக நடப்பதுபோல் நடந்தாள். திரும்பிப் பார்க்க வில்லை.

கார் அவளுக்கருகில் வந்ததும் நின்றது. அது ஒரு வாடகைக் கார்!

காரோட்டி கார் கதவைத் திறந்துகொண்டு மணிமொழிக்கு அருகில் வந்து, "எங்கேயம்மா போக வேண்டும்? காரில் போகலாமே?" என்றான்.

மணிமொழி காரோட்டியை ஒருமுறை பார்த்துவிட்டுப் பின்பு காரில் ஏறிக்கொண்டு, "சென்ட்ரல் நிலையத்துக்குப் போ" என்றாள்.

மணிமொழி எங்கே போவது என்பது பற்றி முடிவு செய்து விட்டாள். அப்பாவைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை அவளுக்கு வந்துவிட்டது.

சென்னையில் தனக்கு இனி வேலை இல்லை என்றதும், பம்பாய் சென்று முடிந்தவரை முயன்று, அப்பாவை விடுதலை செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்ற முடிவுடன் புறப்பட்டுவிட்டாள்.

சென்ட்ரல் நிலையத்திற்கு முன் கார் நின்றது. வாடகைக் காசைக் கொடுத்துவிட்டுக் காரை விட்டுக் கீழே இறங்கிய மணிமொழி, கையிலிருந்த பெட்டியுடன் சென்ட்ரல் நிலையத்திற்குள் புகுந்தாள்.

பெண்கள் தங்கும் முதல் வகுப்பு அறைக்குள் நுழைந்து, பெட்டியை ஒரு மூலையில் வைத்துவிட்டு உட்கார்ந்தாள். அந்த அறையில் அவளைத் தவிர, வேறு எவருமே இல்லை!

*எப்போது விடியப்போகிறது என்றிருந்தது மணிமொழிக்கு. அவள் எழுந்து சென்று, **7:25**-க்குப் பம்பாய் விரைவு வண்டி சென்னையை விட்டுப் புறப்படுகிறது என்பதை அறிந்துகொண்டு, டிக்கெட் கொடுக்குமிடத்திற்குச் சென்று பம்பாய்க்கு மூன்றாம் வகுப்பு டிக்கெட் ஒன்றை வாங்கிக் கொண்டு வந்தாள்.*

*டிக்கெட்டுடன் தன் இடத்தில் வந்து உட்கார்ந்த பிறகும் மணிமொழியின் மனத்திலுள்ள அச்சம் மறையவில்லை. வண்டியில் உட்கார்ந்து, வண்டி புறப்பட்டால்தான் மனம் அமைதியுறும் என்று பட்டது.*

*விடிந்தது. நிலையத்தில் எங்கும் ஓசை, இரைச்சல்! நன்றாக விடிந்ததும் பம்பாய்க்குச் செல்லும் விரைவு வண்டியில், பெண்கள் பெட்டி ஒன்றில் மணிமொழி ஏறி உட்கார்ந்துகொண்டாள்.*

*கூட்டம் மிகுந்து, தான் இருக்கும் பெட்டி நிறைந்து வழிவதை மணிமொழி விரும்பினாள். காரணம், கூட்டத்தில் அவளை எவரும் எளிதில் கண்டுபிடித்து விட முடியாதல்லவா?*

*வண்டி புறப்பட்டது. 'இந்த வண்டி நாள் கணக்கில் ஓடிக் கொண்டிருக்குமே, சாய்ந்து படுக்கக்கூட இடமில்லையே!' என்ற கவலை மண்டியது மணிமொழி மனத்தில்.*

*சரியாக மாலை **6:15**-க்குக் குண்டக்கல்லில் வந்து நின்றது விரைவுவண்டி. அதே நேரத்தில் பம்பாயிலிருந்து சென்னையை நோக்கிச் செல்லும் மெயில் மற்றொரு பக்கம் வந்து நின்றது.*

*சாப்பிடுவதற்காகப் பலர் இரண்டு வண்டிகளிலிருந்தும் இறங்கி உணவு விடுதிக்குப் போனார்கள். மணிமொழிக்கு ஏதாவது சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும் என்ற நிலை! இறங்கிச் செல்லக் கொஞ்சம் தயங்கினாள் மணிமொழி. அப்போது அவளுக்கு எதிரில் இருந்த ஒரு கல்லூரிப் பெண், "நீங்கள் ஒன்றும் சாப்பிடாமல் இருக்கிறீர்களே! போய்ச் சாப் பிட்டுவிட்டு வாருங்கள். பெட்டியை நான் பார்த்துக் கொள்கிறேன். சென்னையிலிருந்து பம்பாய்க்குப் புகை வண்டியில் போகிறவர்கள் இரண்டு பகல் பொழுதும், ஓர் இரவுப் பொழுதும் வண்டியிலேயே இருந்தாக வேண்டும். போங்கள், ஏதாவது சாப்பிட்டுவிட்டு வாருங்கள்!" என்றாள்.*



*மணிமொழி சிரித்துவிட்டு வண்டியை விட்டுக் கீழே இறங்கி, மெல்ல நடந்தாள். அப்போது, "சகோதரி!" என்று அழைத்துக்கொண்டே தோளில் யாரோ கை வைத்தார்கள். திடுக்கிட்ட மணிமொழி திரும்பிப் பார்த்தாள்.*

*பிரபாவதிதேவி!*

*பம்பாயில், அப்பாவின் வேலையைத் தான் செய்வதாகச் சொல்லிவிட்டு மணிமொழி ஐந்து பெட்டிகளை எடுத்துக் கொண்டு போய் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பெட்டியாகக் கொடுத்துக்கொண்டு வரும் போது,* **3**-*வது பெட்டியை மரீன்டிரைவில்* **40** *வயது கொண்ட ஒரு பெண்ணிடம் கொடுத்தாளே, அந்தப் பெண் தான் இந்தப் பிரபாவதிதேவி! அன்று இவள் தன் கையிலிருந்த வெண்சுருட்டைக் கீழே போட்டுக் காலால் மிதித்துக் கொண்டே, 'என்ன உடனே புறப்பட்டுவிட்டீர்கள்! பெண்ணாகிய நான் புகை பிடிப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?* **28** *லட்சம் மக்கள் தொகை கொண்ட இந்தப் பம்பாய் நகரத்தில் எத்தனையோ விதமான நாகரிகங்கள் உண்டு!' என்று சொன்னது மணிமொழிக்குப் பசுமையாக நினைவிற்கு வந்தது.*

*பிரபாவதிதேவி மணிமொழியின் தோளிலிருந்து கையை எடுக்காமலே, "மணிமொழி, நீ எங்கே போகிறாய்? சென்னையிலேயே இருப்பதுதானே உனக்கு நல்லது?" என்றாள்.*

*இதைக் கேட்டதும் மணிமொழிக்குத் தூக்கிவாரிப் போட்டது! மருததம்பி அவளிடம் சொல்லியவையெல்லாம் நினைவில் வந்து நின்றன.*

*மணிமொழி தன்னைக் கொஞ்சம் தேற்றிக்கொண்டு, "நான் பம்பாய்க்குப் போகிறேன். அப்பாவைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது எனக்கு!" என்றாள்.*

*பிரபாவதிதேவி சிரித்துக் கொண்டே, "உன் அப்பா பம்பாயில் எங்கே இருக்கிறார்...! சென்னையில் தானே இருக்கிறார்!"என்றாள்.*

*இதைக் கேட்டதும் மணிமொழிக்கு மயக்கம் வருவதைப் போன்று இருந்தது. இருந்தாலும் தன் குழப்பத்தைக் காட்டிக் கொள்ளாமல், "அப்படியா?! அப்பா சென்னையிலா இருக்கிறார்? எனக்குச் செய்தியே இல்லையே!" என்றாள்.*

*"உனக்குச் செய்தி தந்து கொண்டிருக்கும் நிலையில் உன் அப்பா இல்லை. எது எப்படி இருந்தாலும், இப்போது நீ என்னுடன் சென்னைக்கு வந்துவிடு. பம்பாய்க்குப் போகக் கூடாது. அங்கே உனக்கு ஆபத்துக் காத்திருக்கிறது!" என்றாள் பிரபாவதிதேவி.*

*மணிமொழி குழம்பினாள்.*

*பிரபாவதிதேவி அவளைத் தனியாக அழைத்துச் சென்று மெல்லிய குரலில், "போலீசார் உன்னையும் தேடிக்கொண்டு இருக்கிறார்கள். நெற்றியில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து செத்துக் கிடந்த கேசவதாஸ் வீட்டிற்குக் கடைசியாகச் சென்று வந்தவள் நீதான் என்பதைப் போலீசார் கண்டுபிடித்துவிட்டார்கள்! பேசாமல் என்னுடன் மெயிலில் சென்னைக்கு வந்து விடு. பெட்டி ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டாள்,*

*“ஆமாம்” என்றாள் மணிமொழி.*

*“நேரம் இருக்கிறது. முதலில் சாப்பிட்டுவிட்டுப் பிறகு பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்” என்று சொல்லி, மணிமொழியை உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றாள் பிரபாவதிதேவி.*

*பத்து நிமிடங்களுக்குள் உணவு விடுதியில் சூழ்ந்திருந்த கூட்டம் கலைந்து விட்டது.*

*பிரபாவதிதேவி, கூலியாள் ஒருவனை அழைத்து, வண்டியிலிருந்து மணிமொழியின் பெட்டியைச் சென்னைக்குப் போகும் மெயிலில், தான் இருக்கும் முதல் வகுப்புப் பெட்டியில் வைக்கும்படி சொல்லிவிட்டு, மெயிலிலேயே வரும் டிக்கெட் பரிசோதகரிடம் மணிமொழி தன்னுடன் சென்னைக்கு வருகிறாள் என்றும், அவளுக்குரிய டிக்கெட் பணத்தைத் தன்னிடம் அடுத்த ஜங்ஷனில் பெற்றுக் கொள்ளும்படியும் சொன்னாள்.*

*புகைவண்டி புறப்பட்டது.*

*“என் அப்பா சென்னையில் இருக்கிறார் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டாள் மணிமொழி.*

*பிரபாவதிதேவி சிரித்தாள். “விவரம் தெரியாத பெண்ணே, எங்கள் கூட்டத்தில் இருந்து கொண்டு இந்தக் கேள்வி கேட்கிறாயே! பெரிய ஐயா எனக்குச் சொன்னார்!” என்றாள்.*

*“உங்கள் கூட்டமா? அது என்ன? எனக்கு ஒன்றும் புரிய வில்லையே! பெரிய ஐயா யார்?” - குழம்பினாள் மணிமொழி.*

***‘பெ**ரிய ஐயா யார்’ என்று குழம்பிய மணிமொழியிடம், “அது யார் என்பது தெரியாதவரையில் உனக்கும் கூட்டத்துக்கும் நன்மைதான்! ஆனால், எங்கள் கூட்டத்தில் நீயும் ஒருத்தி என்பது உனக்குத் தெரியாமல் இருக்கக்கூடாது!” என்றாள் பிரபாவதிதேவி.*

*“புரியும்படி சொல்லுங்கள்!”*

*“எங்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் பெரிய ஐயாவின் அனுமதியின்றி வெளியேற முடியாது. உன்னைப் பாதுகாக்கத்தான் பெரிய ஐயா என்னை அனுப்பினார். மருதநம்பி செய்த ஒரு தவறு, உன்னையும் எங்களுடன் ஒருத்தியாகச் சேர்த்துவிட்டது!”*

*மணிமொழிக்கு மயக்கமாக வந்தது. அவள் எப்படிப்பட்ட ஆபத்தில் சிக்கியிருக்கிறாள் என்பதை அவளால் எண்ணிக் கூடப் பார்க்கமுடியவில்லை!*

"என் அப்பாவைப் பற்றிச் சொல்லுங்கள். போலீசார் ஏன் அவரைப் பிடித்துச் சென்றார் கள்?" என்று கேட்டாள்.

"உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன், கொலையுண்ட கேசவ தாஸின் வீட்டிற்கு விரைந்து சென்று, தன்னையே கொலையாளியாக ஆக்கிக் கொண்டார் மருதநம்பி. அங்கே கதவுகளின் மீதும், மேசை நாற்காலிகளின் மீதும் தன் கைரேகைகளை வேண்டுமென்றே விட்டு வந்திருக்கிறார்!"

மணிமொழிக்கு உண்மை விளங்கியது. மருதநம்பி, இதய நோயால் தொல்லைப்பட்டுக் கொண்டிருந்ததால், எந்த நிமிடமும் இறந்துவிடலாம்; ஆகையால், மணிமொழியை இந்தக் கொலையிலிருந்து காப்பாற்றவே அவர் இப்படிச் செய்திருக்கிறார்!

"கேசவதாஸை உண்மையாக யார் சுட்டிருப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள்?" என்று கேட்டாள் மணிமொழி.

"உண்மை எனக்குத் தெரியும்; பெரிய ஐயாவுக்கும் தெரியும். ஆனால், போலீசுக்குத் தெரியாது. கேசவதாஸ் கொலை செய்யப்படவில்லை. அவர், பெரிய ஐயாவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் தற்கொலை செய்து கொண்டார். இதுதான் உண்மை!" என்றாள் பிரபாவதிதேவி.

தொடர்ந்து, "நடந்ததைப் பற்றி நாம் நினைத்துப் பார்த்து என்ன செய்யப் போகிறோம்? நடந்தது நடந்ததுதான்! இனி நடக்கவேண்டியவை பற்றித் தாம் நாம் சிந்திக்க வேண்டும். பேசாமல் படுத்துக்கொள். கதவுகளைத் தாழிட்டு விட்டேன். சென்னைக்குச் சென்றதும் மருதநம்பியைக் கண்டுபிடிக்க வேண்டியது என் வேலை! நீ பேசாமல் தூங்கு" என்றாள்.

## மருதநம்பிக்கும் ஒரு பெட்டி!

புகைவண்டி, சென்னை சென்ட்ரல் நிலையத்தை அடைந்தபோது புலர்ந்து சிறிது நேரமாகிவிட்டிருந்தது.

பிரபாவதிதேவியும் மணிமொழியும் ஒரு வாடகைக் கார் பிடித்து, மவுன்ட் ரோடில் இருந்த நீலமலை ஓட்டலுக்குச் சென்றார்கள். சென்னையில் இருக்கும் மிகப் பெரிய ஓட்டல்களில் ஒன்று அது. உள்ளேயிருந்த எல்லா அறைகளுமே குளிர் அறைகள்!

பிரபாவதிதேவி மூன்று பெரிய தோல் பெட்டிகள் கொண்டு வந்திருந்தாள். அவற்றை ஓட்டல் பையன் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனதும், பிரபாவதிதேவி கட்டிலில் உட்கார்ந்தாள்.

“மணிமொழி, நீ குளித்து விட்டு, வேறு உடை மாற்றிக் கொள். வெளியே போக வேண்டும். நீயும் என்னோடு வருகிறாயா?” என்று கேட்டாள்.

“எங்கே?”

“தங்கதுரையைப் பார்த்து ‘மருதநம்பி எங்கேயிருக்கிறார்?’ என்று கேட்கவேண்டும்.”

மணிமொழிக்கு லேசாக உடல் நடுங்கியது. ‘தங்கதுரைக்குத் தன் தந்தை இருக்குமிடம் தெரியுமா?’

மணிமொழி தயக்கத்துடன் நிற்பதைக் கண்ட பிரபாவதி தேவி, “உனக்குக் களைப்பாக இருந்தால், நீ இங்கேயே இரு. நான் மட்டும் போய் வந்து விடுகிறேன்” என்றாள்.

“தங்கதுரையை இதற்கு முன் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?” என்று கேட்டாள் மணிமொழி.

“எப்போதோ ஒருமுறை பார்த்திருக்கிறேன். பெரிய ஐயாவுக்கு மிகவும் வேண்டியவர்களில் தங்கதுரையும் ஒருவர்!”

“நீங்கள் தங்கதுரையிடம் என்னைப் பற்றி எதுவும் சொல்லாதீர்கள். நான் உங்களுடன் தங்கியிருப்பதும் அவருக்குத் தெரியக்கூடாது!”

“ஏன் மணிமொழி?”

“நான் எவர் கண்ணிலும் படாமல் இருப்பதுதான் எனக்கு நல்லது. அப்பாவைக் காணத்தான் மீண்டும் சென்னைக்கு வந்திருக்கிறேன். என் அப்பா

எங்கேயிருக்கிறார் என்பதை அறிந்து வாருங்கள். அதுவரை நான் இங்கேயே மறைந்திருக்கிறேன்!'' என்றாள் மணிமொழி.

இருவரும் குளித்துவிட்டு, வேறு உடை மாற்றிக் கொண்டார்கள். சிற்றுண்டி வரவழைத்துச் சாப்பிட்டுவிட்டு, சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பிரபாவதிதேவி தனது பெட்டிகளில் ஒன்றைத் திறந்து எடுத்தாள். அந்த அட்டைப் பெட்டியின் மேல் 'மருதநம்பி' என்று எழுதப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த மணிமொழி வியப்புடன், ''மீண்டுமா இந்த மாதிரி அட்டைப் பெட்டி? என் அப்பாவுக்கா இது?'' என்று கேட்டாள்.

''ஆமாம் மணிமொழி, மருதநம்பிக்குத்தான் இந்தப் பெட்டி. பெரிய ஐயா அனுப்பியிருக்கிறார். இதைத் தங்கதுரையின் மூலமாக மருதநம்பியிடம் சேர்த்துவிட வேண்டும்'' என்றாள் பிரபாவதிதேவி.

ஆவலுடன் அந்தப் பெட்டியை எடுத்தாள் மணிமொழி. லேசாகவே இருந்தது. அதிலும் குழந்தைச் சட்டைதான் இருக்குமா?

மணிமொழி அதைத் திறக்கப் போனாள். அதற்குள் பிரபாவதிதேவி பாய்ந்து வந்து பெட்டியைப் பிடுங்கிக் கொண்டாள்.

''நீ பெட்டியைத் திறந்து பார்க்கக் கூடாது மணிமொழி! ஒருவருக்கு அனுப்பப்படும் பெட்டியை மற்றொருவர் திறக்கக் கூடாது. பெரிய ஐயாவின் கட்டளை இது!'' என்று சொல்லிப் பெட்டியைத் தன் கைப்பையில் போட்டுக்கொண்டாள்.

பிறகு, ''நான் போய் வருகிறேன் மணிமொழி! நீ ஓய்வு எடுத்துக்கொள். எவராவது வந்து கதவைத் தட்டினாலும், மணியடித்தாலும் கதவைத் திறக்குமுன் விழிப்புடன் இருக்க வேண்டும்! தெரிந்ததா?'' என்று சொல்லிவிட்டு வெளியேறினாள்.

வாடகைக் கார் ஒன்றைப் பிடித்து ''சாந்தோமுக்குப் போ'' என்றாள்.

சாந்தோமில், முன்பு மணிமொழி தங்கதுரையைத் தொடர்ந்து சென்று கண்டு பிடித்த அதே வீட்டில், தங்கதுரையிடம் பேசிக்கொண்டு இருந்தாள் பிரபாவதிதேவி.

''பெரிய ஐயா என் மூலம் மருதநம்பியிடம் இதைக் கொடுக்கச் சொன்னாரா? அப்படியானால், மருதநம்பி சென்னையிலா இருக்கிறார்?''

''ஆமாம். போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்பியதும், நேராகச் சென்னைக்கு ஓடி வந்து விட்டார். இன்னும் நீங்கள் அவரைப் பார்க்கவேயில்லையா?''

''இல்லையே!''

‘‘ஆனாலும் அவரை நீங்கள் எப்படியாவது கண்டுபிடித்து, இந்தப் பெட்டியை அவரிடம் சேர்த்துவிட வேண்டும்.’’

‘‘ஆகட்டும்.’’

‘‘இந்தப் பெட்டியை முதலில் நீங்கள் பிரித்துப் பார்த்துவிட்டுப் பிறகுதான் அவரிடம் சேர்க்க வேண்டும்!’’

இதைக் கேட்டதும் தங்கதுரையின் முகத்தில் வியப்பு விரிந்தது. அந்தப் பெட்டியைத் திறந்தான். உள்ளே...

நைலான் குழந்தைச் சட்டை ஒன்று இருந்தது. அந்தச் சட்டையில் பின்னல் வேலை செய்யப்பட்டிருந்தது. சட்டையைத் தூக்கிப் பிடித்துச் சன்னல் வெளிச்சத்தில் பார்த்தான் தங்கதுரை.

அதில், எழுத்துக்கள் எதுவும் இல்லை. பூ வேலைகளுக்கு நடுவில் ஒரு கைத்துப்பாக்கி தெரிந்தது!

தங்கதுரையின் முகத்தில் அச்சம் தோன்றியது. அவன் அந்தச் சட்டையை மடித்துப் பெட்டியிலேயே வைத்தான். பிறகு, அதைத் தன் மேசை அறைக்குள் வைத்துவிட்டு, கோட்டுப் பையிலிருந்த கைத் துப்பாக்கியை எடுத்தான். அதில் ஆறு குண்டுகளைப் போட்டு நிரப்பிக்கொண்டு சரி பார்த்துவிட்டு, ‘‘மருதநம்பி எங்கிருந்தாலும் நான் கண்டுபிடித்து இந்தப் பெட்டியைப் பாதுகாப்புடன் அவரிடம் சேர்த்து விடுகிறேன். வேறு ஒன்றுமில்லையே?’’ என்றான்.



‘‘இல்லை!’’

‘‘மீண்டும் உங்களை நான் எங்கே பார்க்கலாம்?’’

‘‘என்னை நீங்கள் பார்க்க முயற்சி செய்ய வேண்டாம். தேவையானால் நானே வந்து உங்களைப் பார்க்கிறேன்!’’

‘‘எங்கே நீங்கள் தங்கியிருக்கிறீர்கள் என்பதாவது எனக்குத் தெரியலாமா?’’

‘‘தெரிந்தால் என்ன! மவுன்ட் ரோடிலுள்ள நீலமலை ஓட்டலில்தான் தங்கியிருக்கிறேன். போதுமா?’’

‘‘போதும்! மருதநம்பியின் மகள் மணிமொழி எங்கிருக்கிறாள் என்பது உங்களுக்குத் தெரியுமா?’’

*“தெரியாதே! எங்கிருக்கிறாள்?” என்றாள் பிரபாவதி.*

*“அவள் என் நண்பன் முத்தழகின் வீட்டில், அவனுடைய அண்ணியைப்போல் நடித்துக் கொண்டு தங்கியிருந்தாள். முத்தழகின் அண்ணன் கண்களை இழந்து உயிருடன் திரும்பிவரப் போகிறான் என்பதை அறிந்ததும் எவரிடமும் சொல்லாமல் ஓடிப் போய்விட்டாள்!”*

*“அப்படியா!”*

*“மருதநம்பிதான் அவளை அழைத்துச் சென்றிருப்பாரோ என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. எப்படியும் நான் கண்டு பிடித்துவிடுகிறேன்!” என்றான் தங்கதுரை.*

*பிரபாவதிதேவி எழுந்து, “சரி, நான் வந்த வேலை முடிந்துவிட்டது. நான் வருகிறேன்” என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.*

*தங்கதுரை சிந்தனையுடன் சன்னல் பக்கமாக நின்று கொண்டு, கடலையே பார்த்துக் கொண்டிருந்தான்.*

*‘மணிமொழியின் அப்பா மருதநம்பியைச் சுட்டுக் கொல்லச் சொல்லி, தலைமை அலுவலகத்திலிருந்து உனக்கு உத்தரவு வந்திருக்கிறது. நீயும் துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டு விட்டாய். பெண்ணொருத்திக்காக வாழும் அந்தப் பெரியவரை நீ சுட்டுக் கொல்லப் போகிறாயா தங்கதுரை?’*

## எதிர்பாராத பேட்டி!

மயிலாப்பூர் குளத்தருகில் இருந்த தெரு வழியே, பழைய கோட்டு ஒன்றைப் போட்டுக் கொண்டு, முகத்தை மறைத்தபடி நடந்து சென்று கொண்டிருந்தார் மருதநம்பி. அவர் தேடி வந்த தெரு அதுதான். இருட்டி விட்ட நேரம் அது. ஒவ்வொரு வீடாகப் பார்த்துக் கொண்டே சென்றவர், ஒரு வீட்டின் முன் நின்றார். அந்த வீடு முன்பு மணிமொழி வந்து, முதல் பெட்டியைக் கொடுத்து விட்டுச் சென்ற அதே வீடுதான். பொன்மலை என்னும் பெரியவர் முன்பு அங்கிருந்தார். இப்போதும் அங்கே அவர்தான் இருந்தார்.

மருதநம்பி வாயிற்படியில் ஏறிக் கதவைத் தட்டியதும், பொன்மலை கதவைத் திறந்தார். மருதநம்பியை உற்றுப் பார்த்துவிட்டு, "யாரது? மருதநம்பியா! உள்ளே வாருங்கள்" என்றார். மருதநம்பி உள்ளே போனார். அந்த வீட்டில் எவருமே இல்லை, அந்தப் பெரியவரைத் தவிர!

"நீங்கள் தனியாகவா இருக்கிறீர்கள்?" என்று கேட்டார் மருதநம்பி.

"ஆமாம், உட்காருங்கள். சில நாட்களுக்கு முன் உங்கள் மகள் இங்கே வந்து போனாள். நீங்கள் கொடுத்ததாக ஓர் அட்டைப் பெட்டியை என்னிடம் கொடுத்துவிட்டுச் சென்றாள். உங்களுக்கு இவ்வளவு அழகான பெண் இருக்கிறாள் என்பது அன்று வரையில் எனக்குத் தெரியவே தெரியாது!"

"என்னுடைய குடும்பத்தின் அணையா விளக்கு அவள். என்னுடைய கெட்டகாலம் அவளையும் இழந்துவிட்டேன்! என் உயிரைக் கொடுத்தாவது மணிமொழியை இந்தக் கஷ்டத்திலிருந்து நான் விடுவிக்க வேண்டும்!"

"மணிமொழியா அவள் பெயர்? அவளை ஏன் நம்முடைய கூட்டத்தில் சேர்த்தீர்கள்? வயதான இந்தக் காலத்தில்தான் நான் தவறுகளை உணர்கிறேன். என் தள்ளாத வயதிலும்கூட என்னால் என் குடும்பத்துடன் சேர்ந்து வாழ இயலவில்லை. பெரிய ஐயாவின் பிடியிலிருந்து விடுபடாத வரையில் நான் தனியாகவே வாழ விரும்புகிறேன். போலீஸாரால் எந்த நிமிடமும் நம் கூட்டத்தாரைப் பிடித்துவிட முடியும்! வயதாகிவிட்ட நீங்கள், இந்த நேரத்தில் எப்படித் தவறு செய்தீர்கள்?" என்று இரக்கத்துடன் கேட்டார் பொன்மலை.

"எனக்கு உடல் நலமில்லாத நேரத்தில், என்னுடைய கறை படிந்த தொழிலைப் புரிந்து கொள்ளாத மணிமொழி, பெட்டிகளை எனக்காக எடுத்துச் சென்றாள். கேசவதாசுக்கும் ஒரு பெட்டி இருந்தது. அவள் கேசவதாஸின் வீட்டை அடைந்தபோது, கேசவதாஸ் செத்துக் கிடந்தார். அதிலிருந்து தான் தொல்லைகள் பல தொடங்கின. சென்னைக்கு மணிமொழியை அனுப்பிவிட்டு, உண்மைகளைக் கண்டு பிடிக்கக் கேசவதாஸ் பங்களாவுக்குச் சென்றேன்.

அங்கிருந்து திரும்பி வந்ததும் தான் அங்கே பல இடங்களில் என் கைரேகைகளை விட்டு விட்டு வந்தது நினைவிற்கு வந்தது. நான் என் தவற்றை உணர்வதற்குள், போலீஸார் என்னைக் கைது செய்து காவலில் வைத்துவிட்டார்கள்! சிறையிலிருந்த நான், உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்ததால் மருத்துவ விடுதியில் இருந்து குணமாகிக்கொண்டே வந்தேன். பெரிய ஐயா, மருத்துவ விடுதியிலிருந்து தப்ப எனக்கு வழி செய்து கொடுத்தார். நான் சென்னைக்கு வந்துவிட்டேன்.' என்றார் மருதநம்பி.

“இப்போது எங்கிருக்கிறாள் மணிமொழி?” என்று கேட்டார் பொன்மலை.

“அதுதான் தெரியவில்லை! அவளைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று எங்கெல்லாமோ அலைந்து கொண்டிருக்கிறேன். தங்கதுரையால்தான் என் மகள், தான் தங்கியிருந்த இடத்தைவிட்டு எங்கேயோ ஓடியிருக்கிறாள். தங்கதுரையே அவளைக் கடத்திச் சென்று மறைத்து வைத்திருப்பானோ என்றுகூட எனக்கு ஐயமாக இருக்கிறது.

முன்பொரு தடவை, மணிமொழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சென்னைக்கு வந்த நான், அவளை எங்கே தேடுவது என்று தெரியாமல் விழித்தேன். பிறகு, எப்படியும் பெட்டிகளைக் கொடுக்கும்போது, தங்கதுரையை அவள் சந்திப்பாள் என்று அவனைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன்.

நான் எதிர்பார்த்தபடி மணிமொழி தங்கதுரையின் வீட்டிற்கு வந்தாள். அப்போது அவன் அவளை அறைக்குள் போட்டுப் பூட்டிவிட்டான். அப்போது மணிமொழியை நான்தான் விடுவித்தேன். ஆனால், நான் மறைந்திருந்து மணிமொழிக்குச் செய்த உதவிகளெல்லாம் அவளுக்குத் தெரியாது. நான் அவளைப் பார்த்து, சில உண்மைகளை அறியவேண்டும். என்னுடைய முயற்சியில் என் உயிரே போனாலும் குற்றமில்லை!

இப்போது உங்களிடம் வந்த காரணம் என்ன தெரியுமா? கேசவதாஸ் கொலை வழக்கில் அசைக்கமுடியாத ஓர் உண்மையைக் கண்டுபிடித்திருக்கிறேன். அதைப் பற்றி உங்களிடம் சொல்லி, உதவி கேட்கவே வந்தேன். கேசவதாஸ் தற்கொலை செய்துகொண்டதாகப் பெரிய ஐயா நினைத் திருக்கிறார். அது தவறு! கேசவதாஸ் தற்கொலை செய்து கொள்ளவில்லை. அவர் கொலை செய்யப்பட்டார் என்பதுதான் உண்மை!” என்றார் உறுதியான குரலில் மருதநம்பி.

இதைக் கேட்டதும் பொன்மலை நிமிர்ந்து உட்கார்ந்தார். வியப்புடன் மருதநம்பியைப் பார்த்தார். “அப்படியானால் கொலையாளி யார்?”

மருதநம்பி தனது கோட்டுப் பையில் கையைவிட்டுச் சிறிய கைக்கடிகாரம் ஒன்றை எடுத்தார். மிகச் சிறிய, நுணுக்கமான ஸ்விஸ் கடிகாரம் அது. அந்தக் கடிகாரத்தின் தங்கச் சங்கிலியில் பல வைரக்கற்கள் பதிக்கப்பட்டிருந்தன.

கடிகாரத்தைப் பொன்மலையிடம் கொடுத்தார் மருதநம்பி. அந்தக் கடிகாரத்தின் கண்ணாடி உடைந்து நொறுங்கியிருந்தபோதிலும், ஓட்டைகளுடன்

அந்தக் கண்ணாடி அப்படியே ஒட்டிக்கிடந்தது. கடிகாரம் ஓடிக்கொண்டு இருந்தது. தன்னால் இயங்கும் கடிகாரம் அது.

“என்ன இது?” என்றார் பொன்மலை.

“பின்னால், கடிகாரத்தின் மூடியைத் திறந்து பாருங்கள்!”

பொன்மலை நடுங்கும் கைகளுடன் கடிகாரத்தின் பின்பக்க மூடியைத் திறந்தார். மூடியின் உள்பக்கம் ஒரு பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அந்தப் பெயரைக் கண்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார் பொன்மலை. அவர் உடல் லேசாக நடுங்கியது.

“இந்தக் கடிகாரம் உங்களிடம் எப்படி வந்தது?”

“சொல்கிறேன்! மணிமொழி என்னிடம் வந்து கேசவதாஸ் கொலையுண்டதைப் பற்றிச் சொன்னதும், மணிமொழியைச் சென்னைக்கு விமானத்தில் ஏற்றிவிட்டுக் கேசவதாஸின் வீட்டிற்குச் சென்றேன். நம்முடைய கூட்டத்திலே, பெரிய ஐயாவுக்கு மிகவும் வேண்டியவர் கேசவதாஸ். வேண்டியவ ரென்ன, பெரிய ஐயாவுக்கு அடுத்தபடியாக அவர்தான்!

பெரிய ஐயாவை நாம் பார்த்ததில்லை. பார்க்கவும் முடியாது!

கேசவதாஸ்தான் நம்மைக் கூட்டத்தில் சேர்த்தவர். பெரிய ஐயாவிடமிருந்து ஒவ்வொருவருக்கும், குழந்தைகளுக்கான சட்டைகளின் மூலம் மர்மமான முறைகளில் எழுதப்பட்ட செய்திகள் வரும். அவற்றின்படி ஒவ்வொருவரும் நடப்பார்கள். இந்த நிலையில் கேசவதாஸ் கொலை வழக்கை எப்படிச் சரிக்கட்டுவது, பெரிய ஐயாவிடம் எப்படித் தொடர்பு கொள்வது என்று புரியாமல், எப்படியாவது மணிமொழியை காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் சென்றேன்.

அவர் தற்கொலை செய்துகொண்டிருந்தால் துப்பாக்கி அவர் கையில் இருக்கவேண்டாமா? இல்லை. துப்பாக்கி எங்கே மறைந்து போயிருக்கும்? நான் அவர் உடலைப் புரட்டிப் பார்த்த போது, இந்தக் கைக்கடிகாரத் தின்மீது அவர் விழுந்து கிடந்தது தெரிந்தது. அவரைச் சுட்டுக் கொன்றவள் ஒரு பெண்! அவரைச் சுட்டவள் கைக்கடிகாரத்தை விட்டு விட்டுப் போகமாட்டாள். கேசவதாஸ், தன்னைச் சுடவந்த பெண்ணின் இடது கையைப் பற்றியிருக்க வேண்டும். அப்போது அவள் கட்டியிருந்த இந்தக் கடிகாரம் அறுந்து விழுந்துவிட்டது. வலது கையில் நீட்டியிருந்த துப்பாக்கியால் கேசவதாஸைச் சுட்டுவிட்டு, கடிகாரத்தைப் பற்றிய நினைவில்லாமல் ஓடிவிட்டிருக்கிறாள்” என்றார் மருதநம்பி.

பொன்மலை, கடிகாரத்தின் பின்பக்க மூடியை மூடினார். அவர் உதடுகள், கடிகாரத்தின் உள்ளே பொறிக்கப்பட்டிருந்த பெயரை இரண்டு மூன்று முறை சொல்லிப் பார்த்துக் கொண்டன.

*மருதநம்பி எழுந்துகொண்டார். "நான் வருகிறேன். மீண்டும் நான் திரும்பி வராவிட்டால் மணிமொழியை மறந்துவிடாதீர்கள். தங்கதுரையின் மீது எப்போதும் ஒரு கண் இருக்கட்டும்!" என்றபடி வெளியேறினார். மருதநம்பி போனதும் கதவைச் சாத்தித் தாழிட்டார் பொன்மலை.*

# சிவகாமி, என்னைச் சோதிக்காதே!

தங்கதுரை காரில் வந்து இறங்கியபோது, சிவகாமி வாசற்புறம் இளங்கோவுடன் விளையாடிக் கொண்டு இருந்தாள். தங்கதுரை வந்தது பிடிக்காதவள்போல், இளங்கோவை வண்டியிலேயே விட்டுவிட்டு சட்டென்று எழுந்து உள்ளே சென்றாள். சிவகாமியின் அப்பா வெளியே சென்றிருந்தார். அம்மா சமையற்கட்டில் வேலையாக இருந்தாள்.

தங்கத்துரை உள்ளே வந்து சோபாவில் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து கொண்டு, "சிவகாமி, மணமாகாத பெண் நீ. இப்போதே குடும்பச் சுமை உன் மீது விழுந்துவிட்டது! பணிப்பெண்ணைப் போல் எப்போது பார்த்தாலும் நீ இளங்கோவை வைத்து விளையாடிக்கொண்டு இருக்கிறாய்! அரசு கண்களை இழந்தவன். அந்தக் குருடனுக்கு அடிமையாக இருக்கவே நீ விரும்பு கிறாயா?" என்றான்.



"நாவை அடக்கிப் பேசுங்கள் தங்கதுரை! என் வாழ்க்கையை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் உங்களிடம் ஆலோசனை கேட்கவில்லை. என் வாழ்வில் நீங்கள் குறுக்கிடாமல் இருந்தால், அது போதும்!" என்றாள் சிவகாமி.

"சிவகாமி, வீணாக என்னைச் சோதிக்காதே! என் சினம் எவரையும் சும்மா விடாது!" என்று மிரட்டியபடி எழுந்துபோனான் தங்கதுரை.

சிவகாமி சிந்தனை செய்தபடி அப்படியே நின்றுவிட்டாள். நீண்ட நேரம் கழித்துதான் அவளுக்கு இளங்கோவின் நினைவு வந்தது. தங்கதுரை வந்ததும், இளங்கோவை அப்படியே வண்டியில் விட்டு வந்தோமே!

சிவகாமி வெளியே ஓடிவந்து பார்த்தாள். தள்ளுவண்டி இருந்தது. ஆனால், வண்டியில் இளங்கோவைக் காணோம்!

# எங்கே இளங்கோ?

*சிவகாமி குழந்தை இளங்கோவைக் காணாமல் பதறிப்போய் பக்கத்திலிருந்த முத்தழகின் பங்களாவை நோக்கி ஓடினாள். எதிரே, முத்தழகு.*

*“குழந்தை இளங்கோவை பாவை கொண்டு வந்தாளா?” என்று கேட்டாள் சிவகாமி.*

*“இல்லை! கொஞ்சம் தாமதித்தாலும் இளங்கோவை நாம் உயிருடன் பார்ப்பது அரிது. நீ இங்கேயே இரு! நான் போய் இளங்கோவை மீட்டு வருகிறேன்” என்று சொல்லிக் கொண்டே காரில் போய் ஏறி உட்கார்ந்தான் முத்தழகு.*

*சிவகாமி காரில் எட்டிப் பார்த்தாள். முன் சீட்டில் தோல்பை ஒன்று இருந்தது. அது முத்தழகின் வீட்டு நகைகள் அடங்கிய பை என்பது சிவகாமிக்குத் தெரியும்.*

*“நகைப்பையை எங்கே கொண்டு செல்கிறீர்கள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!” என்றாள் சிவகாமி.*

*“தொலைபேசியில் செய்தி வந்தது. நகைப் பையை உடனே கொண்டு வந்து கொடுத்தால்தான் இளங்கோவை உயிருடன் பார்க்க முடியுமாம்! சிவகாமி, இந்த விஷயம் அண்ணன் அரசுவுக்குத் தெரிந்தால் அவர் எவ்வளவு துன்பம் கொள்வார்! நீ யாரிடமும் சொல்லிவிடாதே! முதலில் குழந்தையை மீட்போம். பிறகு உண்மையைச் சொல்லுவோம்!”*

*“இப்போது நீங்கள் எங்கே செல்லுகிறீர்கள்?”*

*“தங்கதுரையின் பங்களாவுக்கு!” என்று சொல்லிவிட்டுக் காரைக் கிளப்பினான் முத்தழகு.*

*சிவகாமி, கார் மறையும் வரையில் பார்த்துக்கொண்டு இருந்தாள். பிறகு தலைதெறிக்க எங்கேயோ ஓடினாள்!*

## எனக்கா இந்த முடிவு?

தங்கதுரை, மாடியிலிருந்த அறை ஒன்றில், சன்னல் வழியாகத் தொலைவில் தெரியும் கடலைப் பார்த்துக்கொண்டே உலவிக்கொண்டு இருந்தான். அவன் உள்ளத்திலே, உடலிலே படபடப்பு. முத்தழகை எதிர்பார்த்து உலவிக் கொண்டிருந்தான் அவன். முத்தழகு வந்தால் நகைப்பையும் வருமே!

எவரோ படிகளில் ஏறி வரும் ஓசை கேட்டது. வருவது யார்? முத்தழகா? நகைப் பையோடு வருகிறானா? வெறுங்கையோடு வருகிறானா?

கதவைத் திறந்துகொண்டு வந்து நின்றவர் மருதநம்பி!

மருதநம்பி அறைக்குள் வந்ததும், கதவுகளைச் சாத்திவிட்டு அங்கேயே நின்றுகொண்டார்.

"மருதநம்பிப் பெரியவரே, உங்களை நான் எங்கேயெல்லாம் தேடுவது! நீங்கள் சென்னையில் தான் இருந்து வருகிறீர்களாமே! எனக்குத் தெரியாதே!" என்றான் தங்கதுரை.

"நான் இங்கே இருப்பது உனக்குத் தெரியவேண்டிய தேவையில்லை! உன்னை எச்சரித்துவிட்டுப் போகவே வந்தேன்!" என்றார் மருதநம்பி.

"எனக்கா எச்சரிக்கை? அதுவும் உங்களிடத்திலிருந்தா?" என்று கேட்டான் தங்கதுரை. சினத்தோடல்ல, சிரிப்போடு!

"என் திருமகள் மணிமொழியின் வாழ்வில் நீ திருட்டுத்தனமாகப் புகுந்துவிட்டாய். அமைதியாக இருக்கவேண்டிய அவள் வாழ்வில் ஆறாத துன்பங்கள்! ஆதரவோடு அவள் வாழ்ந்த இடத்தை விட்டு, அவளை விரட்டிவிட்டாய் நீ! அவளை எங்கே விரட்டினாய் சொல்லு?" என்று கத்தினார் மருதநம்பி.

"மணிமொழியின் அமைதியைக் கெடுக்க வேண்டுமென்று நினைத்திருந்தால், 'மணிமொழி அரசுவின் மனைவி அல்லள்' என்பதை என் நண்பன் முத்தழகிடம் நான் என்றைக்கோ சொல்லியிருப்பேன். அரசுவும் அவன் மனைவியும் சேர்ந்து எடுத்துக்கொண்ட கண்ணாடி போட்ட உண்மையான புகைப்படத்தைக் கட்டிலில் கிடந்த தலையணைக்கடியில் ஒளித்து வைத்திருந்தாள் மணிமொழி. அந்தப் புகைப்படத்தை நான் கைப்பற்றிக் கொண்டு வந்து இங்கே வைத்திருக்கிறேன். அதை வைத்து அவளை மிரட்டி, மீண்டும் அவள் மூலமாக அந்த நகைப்பையைக் கடத்திவிடலாம் என்று நான் கருதினேன். ஆனால், அதற்குள் மணிமொழி, தான் அரசுவின் மனைவி அல்லள் என்றும், அரசுவின் மனைவி விமானத்திலிருந்து

*குதித்து இறந்துவிட்டாளென்றும் எழுதி வைத்து விட்டுப் பறந்து போய்விட்டாள். இப்போது முத்தழகு மணி மொழியைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறான்.*

*மணி மொழி உம்மிடம்தான் வந்து சேர்ந்திருப்பாள், நீர்தான் அவளைக் காத்து வருகிறீர் என்று நான் கருதினேன். அதுவும் இல்லையென்றாகிவிட்டது இப்போது. இருந்தாலும் பெரியவரே, மணிமொழி தப்ப வழியில்லை. நம் கூட்டத்திற்கு வந்த பிறகு தப்பிச் செல்லுவது என்பது எப்படி முடியும்? உங்களுக்குத் தெரியாததா பெரியவரே?'' என்றான் தங்கதுரை.*

*தொடர்ந்து, ''மற்றதெல்லாம் இருக்கட்டும் பெரியவரே! பெரிய ஐயா உங்களுக்கு ஒரு பெட்டி அனுப்பியிருக்கிறார்!'' என்றான்.*

*''எனக்கா? எனக்கே பெட்டியா!'' என்று அலறினார் மருதநம்பி.*

*''ஆமாம் பெரியவரே!'' என்று சொல்லிக்கொண்டே மேசை அறையை இழுத்து, அந்தப் பெட்டியை எடுத்து மருதநம்பியிடம் நீட்டினான் தங்கதுரை.*

*மருதநம்பி, கரங்கள் நடுங்க அந்த அட்டைப் பெட்டியை வாங்கினார். திறந்து பார்த்தார். உள்ளே வழக்கம்போல் ஒரு நைலான் குழந்தைச் சட்டை இருந்தது. மருதநம்பி அந்தக் குழந்தைச் சட்டையை எடுத்து இரு கைகளாலும் பிரித்து, விளக்கு வெளிச்சத்தில் பார்த்தார்.*

*அந்தச் சட்டையில், பூ வேலைகளுக்கு நடுவில் துப்பாக்கி ஒன்று தெரிந்ததும், மருதநம்பியின் கரங்கள் நடுங்கின. உடல் ஆடியது. மயக்கம் கொண்டு நின்றார்!*

*அவர் கையிலிருந்த அந்தக் குழந்தைச் சட்டை கீழே விழுந்தது. அவர் தடுமாறி, தங்கதுரைக்கு அருகில் வந்து, ''தங்கதுரை, எனக்கா இந்த முடிவு? இல்லை... மடியமாட்டேன். மகள் இருக்கிறாள் எனக்கு'' என்று கத்தினார்.*

*தங்கதுரை சிரித்துக் கொண்டே தன் கால்சட்டைப் பையிலிருந்த துப்பாக்கியை வெளியே எடுத்து, மருதநம்பியைக் குறி பார்த்து, துப்பாக்கியின் விசையை அழுத்தினான்.*

*கீழே தொட்டிலில் படுத்துக் கிடந்த இளங்கோ, துப்பாக்கி வெடித்த ஓசையைக் கேட்டு விழித்து அழுதான். ஆனால், கொஞ்ச நேரத்திற்குள் குழந்தை இளங்கோவின் ஓசை ஒடுங்கிப் போய்விட்டது. கிழவி, குழந்தையின் வாயில் துணியை வைத்து அமுக்கி, அதன் அழுகுரலை அடக்கிவிட்டாள்!*

## தப்பிவிடு மணிமொழி!

பொன்மலையைத் தங்கதுரை வந்து பார்த்துவிட்டுப் போனதுமே, அவருடைய மனம் சிந்தனை செய்தது. பிரபாவதிதேவியைப் பெரிய ஐயா சென்னைக்கு அனுப்பியிருக்கிறார் என்றால், மிகவும் முக்கியமான செய்தி ஏதாவது இருக்கும் என்று எண்ணினார். மருதநம்பிக்கு ஒரு முடிவு கட்டிவிட்ட பெரிய ஐயா, மணிமொழிக்கும் முடிவுகட்ட ஏதாவது செய்திருப்பாரோ என்று பிரபாவதிதேவியைத் தேடி ஓடினார் பொன்மலை.

மவுன்ட்ரோடில் இருந்த நீலமலை ஓட்டலுக்குச் சென்று எளிதில் பிரபாவதிதேவியின் அறையைக் கண்டுபிடித்து விட்டார். வெளியே இருந்த பொத்தானை அமுக்கினார். கதவு திறந்தது. உள்ளே மணிமொழி நின்றிருந்தாள்.

பொன்மலை உள்ளே வந்து, "பிரபாவதிதேவி எங்கே?" என்று கேட்டார்.

"உள்ளே குளிக்கிறார்" என்றாள் மணிமொழி.

"நல்ல நேரத்தில்தான் நான் வந்திருக்கிறேன் மணிமொழி! உன் அப்பா பேராபத்தில் இருக்கிறார். ஓடு! நீ இனி இங்கே இருப்பது ஆபத்து! உன் அப்பா தங்கதுரையைத் தேடிக்கொண்டிருக்கிறார். நீ அவரைக் கண்டு பிடித்து, அவரையும் கூட்டிக் கொண்டு எங்கேயாவது ஓடி விடு!" என்றார் அவர்.

"அப்பாவை நீங்கள் பார்த்தீர்களா? எப்போது, எங்கே பார்த்தீர்கள்?" என்று பதறிக் கேட்டாள் மணிமொழி.

"அதையெல்லாம் உன்னிடம் சொல்லிக்கொண்டிருக்க எனக்கு இப்போது நேரமில்லை. முதலில் நீ பிரபாவதிதேவி வருவதற்குள் தப்பி ஓடி விடு!" என்றார் பொன்மலை.

மணிமொழி உடனே வெளியே ஓடி, ஒரு வாடகைக் காரை நிறுத்தி, ஏறிக்கொண்டாள்.

இங்கே, பிரபாவதிதேவி குளித்துவிட்டுச் சலவை உடையுடன் வந்தவள், பொன்மலையைப் பார்த்ததும் திகைத்து, "யாரது! பொன்மலையா?" என்று கேட்டாள்.

"ஆமாம்!"

"இங்கே நான் இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"எப்படியோ தெரியும். அது இருக்கட்டும். உன்னை எச்சரிக்கவே நான் இப்போது வந்தேன். மருதநம்பி தங்கதுரையைப் பார்க்கப் போயிருக்கிறார், ஓர் உண்மையை தங்கதுரையின் மூலம் பெரிய ஐயாவிடம் சொல்வதற்காக. அதைப்

*பெரிய ஐயா கேட்டால் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது!'' என்றார் பொன்மலை.*

*''என்ன உண்மை அது?'' என்று கேட்டாள் பிரபாவதி.*

*''கேசவதாஸ் தற்கொலை செய்து கொள்ளவில்லை, அவரை ஒரு பெண் சுட்டுக் கொன்றுவிட்டாள். அவள் தவற விட்டுப் போன கைக்கடிகாரத்தை மருதநம்பி எடுத்து வைத்திருக்கிறார்!'' என்றார் பொன்மலை.*



*''உண்மையாகவா?'' என்று திடுக்கிட்டு அலறிய பிரபாவதி தேவி, ''எங்கே மணிமொழி?'' என்று கேட்டாள்.*

*''மணிமொழியா? நான் அவளைப் பார்க்கவே இல்லையே!'' என்றார் பொன்மலை.*

*பிரபாவதிதேவி ஒரு நிமிடம் யோசித்தாள். பிறகு, கைப்பையை எடுத்துக்கொண்டு வெளியே தலைதெறிக்க ஓடினாள். பொன்மலை மனதுக்குள் சிரித்துக்கொண்டார்.*

*அந்தக் கைக்கடிகாரத்தை மருதநம்பி தங்கதுரையிடம் தருவதற்கு எடுத்துப் போயிருப்பார் என்று நினைத்து ஓடுகிறாள் பிரபாவதி. அது பொன்மலையிடமல்லவா இருக்கிறது!*

*'பிரபாவதிதேவியும் தங்கதுரையும் மோதட்டுமே! அப்போது பல உண்மைகள் வெளியே வரும்' என்பது பொன்மலையின் திட்டம்.*

# இனி வழி ஏதும் இல்லை!

தங்கதுரையின் அறையில் மருதநம்பியின் பிணம் கிடந்தது. அவர் நெஞ்சைத் துளைத்துக்கொண்டு சென்றிருந்தது ஒரு குண்டு!

தங்கதுரை கதவுகள் இரண்டையும் சாத்திவிட்டு மருதநம்பியின் பிணத்தை இழுத்தான் – அதை வெளியே கொண்டு போவதற்காக! அப்போது...

காரொன்று வெளியே வந்து நிற்கும் ஓசை கேட்டது. தங்கதுரை சன்னல் வழியாக வெளியே பார்த்தான். முத்தழகு காரை விட்டுக் கீழே இறங்கிக் கையில் பையுடன் வந்துகொண்டு இருந்தான்.

தங்கதுரை சட்டென்று கீழே கிடந்த சமுக்காளத்தில் மருதநம்பியின் பிணத்தை மறைத்து விட்டு, தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு நின்றான்.

முத்தழகு, கையில் பையுடன் அறைக்குள் புயலைப்போல நுழைந்தான். எதிரே நீட்டிய துப்பாக்கியுடன் தங்கதுரை. "தங்கதுரை! என்ன இது துப்பாக்கியும் கையுமாக?" என்று கேட்டான் முத்தழகு.

"அதிருக்கட்டும், கொண்டா அந்த நகைப்பையை!" என்றான் தங்கதுரை.

முத்தழகு, தன் கையிலிருந்த நகைப்பையை மேசையின் மீது வீசி எறிந்தான். பிறகு, "எங்கே குழந்தை இளங்கோ?" என்றான்.

"சொன்னபடி நான் நடந்து கொள்வேன் முத்தழகு" என்று சொன்ன தங்கதுரை, "பாட்டி, குழந்தையைக் கொண்டு வா" என்று கத்தினான்.

சற்று நேரத்தில் குழந்தை இளங்கோவோடு அறைக்குள் வந்து நின்றாள் கிழவி. அதே நேரம், மாரி காலத்து மழையென உள்ளே நுழைந்தாள் மணிமொழி. இளங்கோவைப் பார்த்ததும், "இளங்கோ!" என்று கத்திக்கொண்டே அவனை வாங்கிக் கொள்ளக் கிழவியிடம் தாவினாள். அப்போது, சமுக்காளத்தால் மூடியிருந்த மருதநம்பியின் பிணத்தை மிதித்துக் கால்கள் தடுமாறித் தரையில் விழுந்தாள் மணிமொழி.

விழுந்த மணிமொழி எழுந்து பார்த்தாள். அப்பாவின் பிணம்! "அப்பா!" என்று அலறினாள் மணிமொழி. அந்த அலறலால் அந்த அறையே கிடுகிடுத்தது!

மருதநம்பியின் பிணத்தைப் பார்த்ததும் முத்தழகுக்கு ஆவேசம் பிறந்தது. வெறி பிடித்தவன் போல் தங்கதுரையை நெருங்கினான்.

"முத்தழகு! என் அருகில் வராதே! வந்தால் இளங்கோவைச் சுட்டுவிடுவேன்!" என்று கத்தினான் தங்கதுரை.

“இனி நீ தப்ப முடியாது தங்கதுரை!” என்று சொல்லிக் கொண்டே தங்கதுரையை நெருங்கினான் முத்தழகு.

இந்த நேரத்தில் தன் உணர்வு பெற்ற மணிமொழி, நிலைமையை உணர்ந்து, தன் துக்கத்தை மறந்து, கண்மூடிக் கண் திறப்பதற்குள் ஓடிப்போய்க் கிழவியின் இடுப்பில் இருந்த இளங்கோவைப் பறித்துக்கொண்டு வெளியே ஓடினாள்.

“மணிமொழி!” என்று கத்திக் கொண்டே, மணிமொழியைப் பார்த்துச் சுட்டான் தங்கதுரை.

“ஆ!” என்று அலறிக்கொண்டே விழுந்தாள், எதிரே வந்துகொண்டிருந்த பிரபாவதிதேவி. தங்கதுரையின் குறி கொஞ்சம் தவறி, எதிரே வந்து கொண்டிருந்த அவள் கழுத்தில் பாய்ந்துவிட்டது குண்டு.

இந்த நேரத்தில், சிவகாமி ஒரு போலீஸ் படையுடன் உள்ளே நுழைந்தாள்.

கையில் துப்பாக்கியுடன் தளர்ந்து ஓய்ந்து போய் நின்று கொண்டிருந்த தங்கதுரையை உதவிப் போலீஸ் கமிஷனர் கைது செய்தார்.

மற்ற எல்லாரும் வந்து பிரபாவதிதேவியைச் சுற்றி நின்று கொண்டார்கள். குழந்தையுடன் ஓடிய மணிமொழியும் திரும்பிவந்தாள். தங்கதுரையும் கையில் விலங்குடன் பிரபாவதிதேவிக்கு அருகில் வந்து நின்றுகொண்டான்.

உதவிப் போலீஸ் கமிஷனர், டைரியும் பேனாவுமாகப் பிரபாவதிதேவிக்கு அருகில் வந்து உட்கார்ந்துகொண்டு குறிப்பெடுக்கத் தயாரானார்.

பிரபாவதிதேவி, தன் கையைப் பிடித்துக்கொண்டு இருந்த மணிமொழியை விழித் துப் பார்த்து, “மணிமொழி நீ என்னை மறந்துவிடு! உனக்கு நான் பெரும் தீங்குகள் செய்து விட்டேன். பிழைத்திருக்கவும் நான் விரும்பவில்லை. என்னை நீ மறந்தால் மட்டும் போதாது; மன்னிக்கவும் வேண்டும்!” என்று சொல்லி அழுதாள்.

பின், உதவிப் போலீஸ் கமிஷனர் பக்கம் திரும்பி, “ஐயா, நான் சொல்வது அனைத்தையும் எழுதிக்கொள்ளுங்கள். என் உயிர் பிரிவதற்கு முன் உண்மைகளை எல்லாம் சொல்லி விட விரும்புகிறேன்!” என்றாள்.

“என் பெயர் பிரபாவதிதேவி. பம்பாய் மெரீன்டிரைவில் **711**-வது இல்லத்தில் வாழ்ந்து வந்தேன். ஆடம்பரமாக வாழ்வதில் எனக்குச் சிறு வயதிலிருந்தே ஆசை. என் விருப்பப்படியெல்லாம் வாழ, எனக்கு நிறையப் பணம் தேவைப்பட்டது.

கேசவதாஸ் என் சகோதரர். அவரும் என்னைப் போலவே ஆடம்பரமாக வாழ்ந்தார். அதனால் அவருக்கும் பணத் தேவை அதிகம். அயல்நாடுகளிலிருந்து கள்ளத்தனமாகக் கொண்டு வரப்படும் உயர்ந்த ரகக் கடிகாரங்களையும் விலை மதிக்கமுடியாத வைரங்களையும் கப்பல்களிலிருந்து கடத்தி, அங்கங்கே கப்பல்

வந்து நிற்கும் கடற்கரை நகரங்களில் விநியோகம் செய்ய, என் திட்டப்படி கேசவதாஸ் பல ஆட்களைப் பிடித்து ஏற்பாடுகள் செய்தார்.

அயல்நாடுகளிலிருந்து எப்போது எந்தக் கப்பலில் என்ன சாமான்கள் வரும் என்ற செய்தி முதலில் வெளிநாட்டிலிருந்து எனக்குதான் கிடைக்கும். நான் அந்தச் செய்தியை, நைலான் குழந்தைச் சட்டையில் ரகசிய எழுத்துக்களில் பின்னி, ஒரு பெட்டியில் போட்டு, பெட்டி பெட்டியாகச் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பரிசுகள் அனுப்பு வதுபோல அனுப்புவது வழக்கம்!''

இதைச் சொன்னதும் கண்களை மூடிக் கொண்டாள் பிரபாவதிதேவி. ரத்தம் அதிக அளவில் வெளியேறியதால் களைப்படைந்திருந்தவள், மெதுவாகக் கண்களைத் திறந்து மீண்டும் சொல்லத் தொடங்கினாள்.

''உயர்ந்த கடிகாரங்களும் விலைமதிக்க முடியாத வைரங்களும் பணமாக மாறி மொத்தப் பணமும் கேசவதாசுக்கு வந்துவிடும். அவர் அதை எல்லாருக்கும் பகிர்ந்து கொடுப்பார். பெரிய ஐயாவுக்கு இந்தப் பணத்தில் பெரும் பங்கு போய்ச்சேரும். அந்தப் பெரிய ஐயா யார் தெரியுமா?''

பிரபாவதிதேவியின் இந்தக் கேள்விக்குச் சுற்றியிருந்தவர்களில் எவருமே பதில் சொல்ல வில்லை. பிரபாவதிதேவியே தொடர்ந்தாள்...

''அந்தப் பெரிய ஐயா நான் தான்! நான்தான் இந்தக் கொள்ளைக் கூட்டத்தைப் பெரிய ஐயா என்ற பேரில் நடத்தினேன். பெரிய ஐயா என்றால் கூட்டத்தைச் சேர்ந்த அத்தனை பேர்களும் அஞ்சுவார்கள். எனக்குப் பெரிய ஐயா ரொம்ப வேண்டியவர் என்று எல்லோரும் நினைத்தார்கள். அதனால் பெரிய ஐயா என்ற பெயரைச் சொல்லி என்னால் எல்லாரையும் மிரட்ட முடிந்தது.

குழந்தைச் சட்டைகளை அட்டைப் பெட்டிகளுள் வைத்து அனுப்பும்போது, அவை ஒழுங்காக உரியவர்களுக்குப் போய்ச் சேருகின்றனவா என்பதைப் பார்க்கச் சில வேளைகளில் பெரிய ஐயா அனுப்பியதாக நான் சொல்வது உண்டு.

மருதநம்பி நம்பிக்கையோடு நடந்துகொண்டதால் அடிக்கடி நான் அவருக்கு இந்த வேலைகளைக் கொடுத்தேன். அப்படி ஒரு தரம் சில பெட்டிகளை மருதநம்பிக்கு அனுப்பி உரியவர்களிடம் சேர்ப்பிக்கச் சொன்னபோது, என் விலாசமுள்ள பெட்டியை, வழக்கத்திற்கு மாறாக மணிமொழி கொண்டு வந்து தந்தாள். உடனே, அவளையும் எங்கள் கூட்டத்தில் சேர்த்துவிடுவது என்று முடிவெடுத்தேன்.

விவரம் ஏதும் அறியாத மணிமொழி, எதிர்பாராத விதமாகக் கேசவதாஸ் கொலை வழக்கில் சிக்கிக் கொண்டாள். மணிமொழி என்னை வந்து பார்ப்பதற்குச் சற்று முன்னர் தான் நான் கேசவதாஸைச் சுட்டுக் கொன்றுவிட்டு வந்திருந்தேன்.

அவர் நான் கேட்டபோதெல்லாம் எனக்குப் பணம் தரவில்லை. என்னை ஏமாற்றவும் முயன்றார். அது மட்டுமல்ல, 'இனிமேல் நான்தான் பெரிய ஐயா' என்றார். பொறுமை இழந்த நான் அவரைச் சுட்டு விட்டு, ஓடி வந்துவிட்டேன்!''

உதவிப் போலீஸ் கமிஷனர் தன் டைரியில் அவள் சொல்வதை ஒன்றுகூட விடாமல் எழுதிக்கொண்டே வந்தார்.

''கேசவதாஸ் கொலை வழக்கில் மணிமொழியைச் சிக்க வைத்துவிட்டு நான் தப்பித்துக் கொள்ள எண்ணினேன். மணிமொழி பம்பாயிலிருந்து போய் விட்டால், மணிமொழி ஓடி விட்டாள் என்ற செய்தி பரவும்; அவள் குற்றவாளி என்று அவள் மேல் பழி விழும் எனக் கருதி, மணிமொழியைச் சென்னைக்கு அனுப்பத் திட்டமிட்டேன். அதன்படி, அவள் சில பெட்டிகளை எடுத்துக் கொண்டு சென்னைக்குப் போகும்படி செய்தேன்.

மருதநம்பி கைது செய்யப்பட்டார். எங்கே அவர் உண்மையைச் சொல்லிவிடுவாரோ என அஞ்சி, மருத்துவ விடுதியிலிருந்த அவரை அங்கிருந்து தப்புவிக்கச் செய்தேன். பின்னர், அவரைத் தீர்த்துக் கட்டுவதற்காகச் சென்னைக்குப் புறப்பட்டேன்.

என் திட்டப்படி, 'பெரிய ஐயா'வின் கட்டளைப்படி, தங்கதுரை மருதநம்பியைச் சுட்டுக் கொன்றுவிட்டான். ஆனால், அதே தங்கதுரை என் திட்டத்திற்கு மாறாக என்னையே சுட்டுவிட்டான்.

தீமை வென்றதாகச் சரித்திரமே இல்லையே!

என் வாழ்வில் மட்டும் எப்படித் தீமை வெல்லும்? நான் உண்மைகள் அனைத்தையும் அப்படியே சொல்லிவிட்டேன். என் கூட்டத்தைச் சேர்ந்தவர்களது பட்டியல் என் குறிப்புப் புத்தகத்தில் இருக்கிறது. இதற்கு மேலும் நான் சொல்வதற்கு ஏதும் இல்லை!'' என்றாள் பிரபாவதிதேவி.

இந்த நேரத்தில் அங்கே வந்த பொன்மலை, பிரபாவதிதேவியின் கைக்கடிகாரத்தை உதவிப் போலீஸ் கமிஷனரிடம் கொடுத்தார்.

தன் கைக்கடிகாரத்தைப் பார்த்ததும் பிரபாவதிதேவியின் கண்கள் ஒருமுறை மின்னின. அடுத்த கணம் அவள் உயிர் பிரிந்தது.

## சிவகாமியின் தியாகமே பெரிது!

மங்கிய மாலைப் பொழுதினிலே, மண்ணில் உட்கார்ந்திருந்த மணிமொழியின் கால்களையும் முத்தழகின் கால்களையும் கடல் அலைகள் கழுவிச் சென்றன.

முத்தழகு, மணிமொழியின் கையை எடுத்துத் தன் கையில் வைத்துக் கொண்டான். காதல் மொழிகள் கரைபுரண்டன. பின்பு, அவள் மடியில் தலை வைத்துப் படுத்துக்கொண்டான். கொஞ்ச நேரம் அப்படியே மௌனமாக இருந்தவன், ''மணி, அண்ணா அவர் பையனுக்கு என் நினைவாக முத்தழகு என்று பெயர் வைத்திருக்கிறார். நீ இளங்கோ என்று புளுகிவிட்டாயே!'' என்றான்.



மணிமொழி மெல்லச் சிரித்துக்கொண்டே, ''நீங்கள் எனக்குக் கணவராக வரப்போகிறீர்கள் என்பது எனக்கு அப்போதே தெரியும்! அதனால்தான் நான் அந்தப் பெயரைச் சொல்லவில்லை! இளங்கோவை யார் என்ன பெயர் சொல்லிக் கூப்பிட்டாலும், நான் இளங்கோ என்றுதான் கூப்பிடப் போகிறேன்'' என்றாள்.

''நீ மட்டும் என்ன, அவனுக்கு அம்மாவாகப் போகிற சிவகாமியே அவனை இளங்கோ என்று தான் கூப்பிடுகிறாள். அதனால், எல்லாருமே அவனை இளங்கோ என்று தான் கூப்பிடுவார்கள்!'' என்று சொன்ன முத்தழகு, மணிமொழியின் உதடுகளில் விரலை வைத்து, ''மணிமொழி, உன் தியாகம் மிகப் பெரிது!'' என்றான். இதைச் சொல்லும்போது அவன் கண்கள் கலங்கின.

“இரண்டு கண்களையும் இழந்துவிட்ட, ஒரு பையனைப் பெற்றுவிட்ட உங்கள் அண்ணனைச் சிவகாமி நாளைக்கு கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாளே, அதைவிடவா என் தியாகம் பெரிது?

சிவகாமியின் தியாகமே சிறந்தது!” என்றாள் மணிமொழி. இதைச் சொல்லும்போது அவள் கண்களும் கலங்கின.

மணிமொழி, நாளை உனக்குத் திருமணம். தீர்க்க சுமங்கலியாக இரு. உனக்கு ஒரு குறையும் வராது. ‘மணிமொழி நீ என்னை மறந்து விடு!’ என்று உன்னிடம் உன் கணவன் சொல்லாமல் பார்த்துக் கொள். வாழ்க நீ! வளர்க நீ!